# உள்ளே...


**படித்துப் பாருங்களேன்...**
ஆ.சிவசுப்பிரமணியன்............................................04

**காலனிய காலத்தில் கருக்கலைப்பும் பெண் சிசுக் கொலையும்**
டாக்டர் சு. நரேந்திரன்............................................11

**தஸ்தயேவ்ஸ்கியின் ‘ஓர் எழுத்தாளரின் நாட்குறிப்பு’ நூலை முன்வைத்து...**
ந. முத்துமோகன்....................................................15

**சிவஞான மாபாடியம் சில விழுமியங்கள்**
முப்பால்மணி..........................................................19

**தமிழ்க் குழந்தை இலக்கியப் போக்குகள்**
சுகுமாரன்.................................................................23

**கடலோர மக்களின் கலைக்குரல்**
இரா. காமராசு.......................................................30

**இந்தியா - முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்...**
சி.ஆர். ரவீந்திரன்..................................................41

**தேடுகிறோம் ஒரு பெரிய மனிதரை**
க.பழனித்துரை........................................................49

**கடவுளுக்கும் மொழிகளின் தோற்றத்திற்கும் தொடர்பு இல்லை**
கணபதி இளங்கோ.................................................53

**கைத்தறி நெசவாளர்கள்**
இரா. மீனாட்சி.......................................................57

**தமிழ் தமிழர் மேதினம்**
உதயை மு. வீரையன்............................................61

**உ.வே.சாமிநாதையரும் வ.உ.சிதம்பரம் பிள்ளையும்**
முனைவர் இரா. வெங்கடேசன்...............................65





கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு
**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**
*திருவள்ளுவராண்டு 2049*
*மலர் - 11 இதழ் - 3 - ஜூன் - 2019*

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ். சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி. சரவணன்*

இதழ் வடிவமைப்பு
*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**


தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்




**இந்திய விடுதலைக்கான அறப்போராட்டம், 1905-1919**
**டேவிட் ஹார்டிமேன் (2018:)**

The Non-Violent Struggle for Indian Freedom, 1905-1919, David Hardiman (2018)
Penguin Viking, Gurgaon, Haryana

"ஆங்கிலக் காலனியத்திற்கு எதிராக நிகழ்ந்த இந்திய விடுதலைப் போராட்டத்தை, (அ) நிலப்பிரபுக்கள், குறுநில மன்னர்கள், பெரும் நிலப்பகுதியை ஆண்ட மன்னர்கள் நிகழ்த்திய போராட்டங்கள், (ஆ) சுதேசி இயக்கம், (இ) பயங்கரவாதப் புரட்சி இயக்கங்கள் நடத்திய போராட்டங்கள் எனப் பகுப்பது ஒரு பொதுவான மரபு.

இவற்றில் இருந்து வேறுபட்ட மக்கள் இயக்கமாக 1920இல் தொடங்கி 1947-இல் இந்திய விடுதலை வரை நிகழ்ந்த இந்திய விடுதலை இயக்கமாக காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கட்சி நடத்திய இயக்கத்தை நம் கல்விப்புல வரலாற்றுப்பாடம் கற்றுக் கொடுத்து வருகிறது. இவ்வியக்கத்தின் சிறப்புத் தன்மையாக வன்முறை அற்ற அறப்போராட்டம் சுட்டிக்காட்டப்படுகிறது. அஹிம்சை (Non-Violence) என்ற சொல் வரலாற்றுக் கலைச்சொல்லாக இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. வன்முறையற்ற அறப்போராட்டத்திற்கும் இந்திய விடுதலை இயக்கத்திற்குமான உறவு 1905-1919 காலகட்டத்தில் எவ்வாறு இருந்தது என்பதை இங்கு அறிமுகம் செய்யும் நூல் எடுத்தியம்புகிறது."



**நூலாசிரியர்**

நவீன கால இந்திய வரலாற்றாசிரியர்களில் புறக்கணிக்க இயலாத ஒருவர் டேவிட் ஹார்டிமேன். 'கீழ் இருந்து வரலாறு' (History from Below) என்ற கருத்தை முன் வைக்கும் அடித்தள மக்கள் வரலாறு (Subaltern Studies) என்ற வரலாற்றுக் கருத்துப்பள்ளியை உருவாக்கியோரில் இவரும் ஒருவர். இராவல்பிண்டியில் 1949ஆவது ஆண்டு அக்டோபரில் பிறந்த இவர் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் பயின்று பட்டம் பெற்றவர். சஸ்ஸக்ஸ் பல்கலைக்கழகத்தில் தெற்காசிய வரலாற்றில் டி.பில். ஆய்வுப்பட்டம் பெற்றவர். 1830-1940 காலத்தில் இங்கிலாந்தில் நிகழ்ந்த சாசன இயக்கத்தை (Chartist Movement) சிறப்புப் பாடமாகப் பயின்றவர். இங்கிலாந்திலும், உலக அரங்கிலும் புகழ் பெற்ற எரிக்ஹாப்ஸ்பாம், இ.பி. தாம்சன், கிரிஸ்டோபர்ஹில், ரோட்னி ஹில்டன் ஆகிய சமூக வரலாற்றாய்வாளர்களின் நூல்களைப் பழுதறப் பயின்றவர். இந்திய தேசிய இயக்கம், இந்திய சமூக வரலாறு, காந்தி என இந்திய வரலாறு குறித்த இவரது நூல்கள் பரந்துபட்ட களத்தை மையமாகக் கொண்டவை, விரிவானவை. தற்போது வார்விக் பல்கலைக்கழகத்தில் தகைசால் பேராசிரியராக (Emeritus Professor) பணியாற்றி வருகிறார்.

**நூலின் செய்தி**


காந்தியின் தலைமை இந்திய தேசியக் காங்கிரஸால் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் இந்திய விடுதலை இயக்கத்தில் நீக்கமுடியாத பெயராக அவரது பெயர் நிலைத்துவிட்டது. இவரையும் இவர் நடத்திய இயக்கங்கள் அல்லது போராட்டங்களையும் மையமாகக் கொண்டே இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு எழுதப்படலாயிற்று. மற்றொரு பக்கம் இத்தகைய வரலாற்று வரைவுகள் குறித்த எதிர்மறையான கருத்துக்களும் உருவாகியுள்ளன.

இந்திய மேட்டிமையோரை மையமாகக் கொண்டே இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு எழுதப்பட்டதாக ரணஜித்குகா என்ற வரலாற்றறிஞர் கருதுகிறார். அடித்தள மக்கள் வரலாறு என்ற கருத்துப்பள்ளியை உருவாக்கி இந்திய வரலாற்றில் அடித்தள மக்கள் பங்களிப்பை சென்ற நூற்றாண்டின் எண்பதுகளில் இவர் வெளிக்கொணர்ந்தார்.

இவரது கருத்துப்படி இந்திய தேசியமானது ஆங்கில ஆட்சியாளர்கள் அல்லது மத்தியதர வர்க்கம் சார்ந்த தேசியவாதிகள் என்போரை முன்னிலைப்படுத்தியது. பெரும்பாலான மக்கள் திரளின் அரசியல் உணர்வு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேட்டிமையோரின் வழிகாட்டுதலின்படி செயல்படுவோராகவே வெகுதிரளான மக்களைக் கருதினர்.

ஆனால் குடியானவர்களும் உழைப்பாளிகளும் தங்கள் பார்வையில் ஓர் அரசியலைக் கொண்டிருந்தனர் என்பது குகாவின் கருத்தாகும். இதை 'மக்களின் அரசியல்' என்று அவர் அழைத்தார். மக்களின் அரசியலானது மேட்டிமையோரின் அரசியலில் இருந்து மாறுபட்டது; எதிர்ப்பையும் கலகத்தையும் உள்ளடக்கியது.

அடித்தள மக்களுக்கு அதிகாரம் வழங்குவதில் அல்லது அதிகாரத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மேட்டிமையோர் ஆர்வம் காட்டவில்லை. நிலக்கிழார்களாகவும், வணிகர்களாகவும், தொழில்முனைவோராகவும் விளங்கிய மேட்டிமையோர்களுக்கு, தனித்த அரசியல் நோக்கம் இருந்தது. இதனால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிகழும் சமூக மாற்றங்களையே அவர்கள் விரும்பினர். இதனால் அடித்தள மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவு செய்யாத நிலையில் போராட்டங்கள் நிறுத்தப்பட்டன. இதன் வளர்ச்சி நிலையாக அறப்போராட்டத்தை மேட்டிமையோர் வலியுறுத்தினர். இதன் தாக்கமே 'சத்யாகிரஹம் சத்தியாகிரஹி' கலைச்சொற்களை இந்திய விடுதலைப் போராட்டம் குறித்த வரலாற்று வரைவுகள் அறிமுகம் செய்தன.



அடித்தள மக்களைக் குறிப்பிடும்போது 'கும்பல்' என்ற பொருள் தரும் Mob என்ற ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்பட்டது. அடித்தள மக்கள் பிரிவின் எழுச்சியைக் குறிக்க 'கும்பல் ஆட்சி' அல்லது கும்பலுணர்வு என்ற பொருளைத் தரும் Mobocracy என்ற ஆங்கிலச் சொல்லையே காந்தி பயன்படுத்தினார். மற்றொரு பக்கம் அவரது போராட்டம் சத்தியாகிரஹம் என்றழைக்கப்பட்டது. அதில் பங்கேற்றவர்கள் 'சத்தியாகிரஹி' என்றழைக்கப்பட்டனர். (சான்றாக உப்பு சத்தியாகிரஹம், உப்பு சத்தியாகிரஹி)

அதே நேரத்தில் அடித்தள மக்களின் போராட்டங்கள் அரசியல் முதிர்ச்சி அடையாதோரின் போராட்டங்களாகவே பார்க்கப்பட்டன. அரசியல் அமைப்பு நிலையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் தன்மையில்லாத போராட்டங்களாகவே இவற்றை நோக்கினர். இவ்வேறுபாடுகள் இருப்பினும், மேட்டிமையோரின் அரசியலும் அடித்தள மக்களின் அரசியலும் இணைந்து செயல்பட்டுள்ளன. என்றாலும் பொதுமக்களின் எழுச்சியானது பெரும்பாலும் வன்முறையாக வெளிப்பட்டது.

நிலவுடைமை ஒடுக்குமுறைக்கு எதிரான குடியானவரின் எழுச்சி வன்முறை சார்ந்தே வெளிப்பட்டது. இது காந்தியின் அணுகுமுறைக்கு எதிரானது. அவுரி பயிரிடுதலுக்கு எதிரான சம்பரான குடியானவர்கள் போராட்டம் (1917), வைக்கம் போராட்டம் (1924-25), சிவில் சட்ட மறுப்பு இயக்கம் (1930-31) டெல்லி நகரில் 1948 சனவரியில் அவர் மேற்கொண்ட உண்ணாவிரதம் என்பன காந்தியின் அஹிம்சை முறைப் போராட்டத்தை வெளிப்படுத்தும் தன்மையன.

இப்போராட்டங்கள் இந்தியாவை ஆண்டு வந்த ஆங்கில அரசுக்கு எதிராக மட்டுமின்றி ஆங்கிலப் பெருவணிகர்கள், தேயிலை, அவுரி தோட்ட உரிமையாளர்கள் என்போருக்கு எதிரான போராட்டங்களாகவும் அமைந்தன. அத்துடன் ஆங்கில அரசின் நேரடி ஆட்சி நிலவிய பகுதிகளிலும் அவர்களது கட்டுப்பாட்டிற்குள் இயங்கிய மன்னராட்சிப் பகுதிகளிலும் செயல்பட்ட, வரிவாங்கும் அதிகாரிகள், வனத்துறை அதிகாரிகள், மதுபான உரிமை வழங்கும் அதிகாரிகள், பெருநிலக்கிழார்கள், வட்டித்தொழில்புரிவோர், மதத்தலைவர்கள் ஆகியோருக்கு எதிரான போராட்டங்களாகவும் அமைந்தன.

**காந்தியின் அஹிம்சை**

காந்தியின் அஹிம்சையானது உடல்மீதான வன்முறையைத் தவிர்ப்பது என்ற நிலையில் மட்டும் செயல்படவில்லை என்பது நூலாசிரியரின் கருத்தாகும். அஹிம்சை தொடர்பான சமண சமய சிந்தனையின் தாக்கத்திற்கு காந்தி ஆட்பட்டிருந்தார் என்பது அவரது கருத்தாக உள்ளது. சமண சமய நோக்கில், சிந்தனை வாய்மொழி, உடல் என்ற மூன்று நிலையிலும் வன்முறையைத் தவிர்ப்பதே அஹிம்சையாகும். இத்தகைய அஹிம்சையையே காந்தி வலியுறுத்தி வந்தார். தென்ஆப்பிரிக்காவில் அவர் நடத்திய போராட்டம் அஹிம்சை நெறி சார்ந்ததே.

**தென்ஆப்பிரிக்காவில் (1906-1914)**

1893ஆவது ஆண்டில் வழக்கறிஞராகப் பணியாற்றுவதற்காக தென்ஆப்பிரிக்காவின் டர்பன் நகருக்கு காந்தி வந்தார். சமூகத்தின் மூன்றுவிதமான படிநிலைகளில் இருந்தோர் அவரை நாடி வந்தனர். அவர்கள் முறையே, வாணிபம் செய்வோர், படித்த மத்தியதர வர்க்கத்தினர் கரும்புத்தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரியும் ஏழைகள் என மூன்று பிரிவினர்களாக இருந்தனர்.

வழக்கறிஞர் தொழிலுடன், அங்கு குடியேறி வாணிபம் செய்து வந்த அய்ரோப்பிய வணிகர்களால் பாதிக்கப்படும் இந்திய வணிகர்களின் நலன் காக்கும் பணியையும் மேற்கொண்டார். அங்குள்ள டிரான்ஸ்வால் நகரில் வாழும் இந்தியர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் வைத்திருக்கவும் அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலண்டனில் நடந்த பேச்சுவார்த்தையில் காந்தியும், இஸ்லாமியத் தலைவர்களும் கலந்து கொண்டனர் எனினும் உரிய பயன் கிட்டவில்லை.

1907-இல் தென்ஆப்பிரிக்காவில் வாழும் ஆசிய நாட்டவர் அனைவரும் தம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற விதி விதிக்கப்பட்டது. இதன்படி தம் பெயர்களைப் பதிவு செய்ய ஆசிய நாட்டினர் மறுத்தனர். பெரும்பாலோர் பதிவு செய்வதைத் தவிர்த்தனர். இச்செயலே ஓர் அறப்போராட்டமாக மாறியது. பெயரைப் பதிவு செய்யாதவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் டிரான்ஸ்வாலைவிட்டு வெளியேறும்படி வற்புறுத்தப்பட்டனர். ஏறத்தாழ, 2000 பேர்வரை கைதாயினர்.


முதல் தடவையாக, வளமான ஆசிய நாட்டு வணிகர்களுக்காக மட்டுமின்றி, சிறு வணிகர்களாகவும், தெருக்களில் கூவி விற்பனை செய்பவர்களாகவும், வாழ்ந்த இந்தியர்களுக்காகவும், சீனர்களுக்காகவும் காந்தி குரல் எழுப்பினார். இம்மக்கள் பிரிவினர் அதிக எண்ணிக்கையில் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இச்சட்டமானது ஆசிய நாட்டவரது மனித மாண்புகளைச் சிதைப்பதாக தமது ‘இந்தியன் ஒப்பினியன்’ பத்திரிகையில் காந்தி எழுதினார். அவரது வேண்டுகோளின்படி இச்சட்டத்திற்கு எதிராக, பள்ளிவாசல்களிலும் வழிபாடுகள் நிகழ்ந்தன. ஆசாரக்கார பிராமணப் பூசாரிகள் இப்போராட்டத்திற்கு ஆதரவு நல்கினர்.

தெருக்களில் கூவி நின்று பொருட்களை விற்கும் பெரும்பான்மைத் தமிழர்களுக்காக அவர் இதுவரை குரல் கொடுத்தவரில்லை. ஆனால் இப்போராட்டம் ஒரு மக்கள் இயக்கத்தின் தலைவராக அவரை மாற்றிவிட்டது. கடை அடைப்பு, வேலை நிறுத்தம், ஊர்வலம், பொதுக்கூட்டம், மறியல் எனப் போராட்டம் பல்வேறு வடிவங்களை எடுத்தது. இப்போராட்டம் தொடர்பாக மக்கள் எழுப்பிய வினாக்களுக்கு தமது ‘இந்தியன் ஒப்பினியன்’ வார இதழின் வாயிலாக, காந்தி விடையளித்தார். போராட்டத்தை ஊக்குவிக்கும் தன்மையிலான கவிதைகளும், பாடல்களும் இப்பத்திரிகையில் இடம் பெற்றன. அத்துடன் இந்தியர்களிடம் மத நல்லிணக்கத்தை உருவாக்கும் பணியையும் இவை மேற்கொண்டன.

சிறைத்தண்டனை வாயிலாக இப்போராட்டத்தை ஒடுக்கிவிட முடியாது என்பதையும் சிறையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதையும், 1908 சனவரியில் தென்ஆப்பிரிக்க அரசு உணரத் தொடங்கியது. போராடும் இந்தியர்களுடன் உடன்பாட்டிற்கு வரும்படி தென்ஆப்பிரிக்க அரசுக்கு நிர்பந்தங்கள் வரலாயின.

1908 சனவரி 30ஆவது நாளன்று காந்தியை சிறையில் இருந்து அழைத்துச் சென்று தென் ஆப்பிரிக்க அரசின் உயர் வெள்ளை அதிகாரிகளைச் சந்திக்கும்படிச் செய்தனர். இதில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி தன்னிச்சையாக இந்தியர்கள் தம் பெயரைப் பதிவு செய்த பின்னர் சிறையில் இருந்தவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.




ஆயினும் குற்றவாளிகள் போன்று கைரேகையைப் பதிவு செய்வதைச் சிலர் விரும்பவில்லை. அனைவரையும் ஒன்று திரட்டி கூட்டம் நடத்திக் கருத்துக் கேட்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்ததாக, காந்தியின் மீது குற்றம் சாட்டப்பட்டது. சில முடிவுகளை எடுக்க தலைவர்களுக்கு உரிமை வழங்க வேண்டும் என்று காந்தி விடையளித்தார். இருப்பினும் அவர் மீதுள்ள கோபத்தால் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டார். இத்தாக்குதலில் இருந்து அவர் குணப்பட சில வாரங்கள் ஆயிற்று.


எதிர்காலத்தில் தென்ஆப்பிரிக்காவாழ் ஆசியர்களிடம் தலைமை உருவாவதைத் தடுக்கும் வகையில் டிரான்ஸ்வால் நகருக்குள் படித்த இந்தியர்கள் வருவதை தென் ஆப்பிரிக்க அரசு தடை செய்தது. மே 1908-இல் தென் ஆப்பிரிக்க உயர் அதிகாரியுடன் காந்தி நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. 24 ஜுன் 1908இல் இந்தியர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்று ஜோகன்ஸ்பர்க் நகரில் நடந்தது. தங்கள் பெயர்களைப் பதிவு செய்ததைத் திரும்பப் பெற்றதுடன் போராட்டத்தைத் தொடர்வதாக அறிவித்தனர். பதிவு செய்தல் தொடர்பான ஆவணங்களை வெளிப்படையாக எரிக்கத் தொடங்கினர்.

இச்சூழலில் சத்தியாகிரகம் என்ற சொல்லை காந்தி அறிமுகப்படுத்தினார். இதை மேற்கொள்பவனை சத்தியாகிரஹி என்று குறிப்பிட்ட காந்தி சத்தியாகிரஹி என்பவன் அச்சத்தில் இருந்து விடுபட்டவனாகவும் மற்றவர்களுக்கு அடிமையாக இருக்க விரும்பாதவனாகவும் இருப்பான் என்று விளக்கமளித்தார்.

அனுமதிச்சீட்டுக்களை எரித்த பின்னர், தேவையான உரிமம் இல்லாமல் வியாபாரம் செய்வதை இந்தியர்கள் மேற்கொண்டனர். டிரான்ஸ்வால் இந்தியர்களுக்கு ஆதரவாக நேட்டாவில் இருந்து இந்தியர்கள் வந்தனர். போதிய ஆவணங்கள் இன்றி வந்தமை அல்லது சட்டவிரோதமான வாணிபம் செய்தமை என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இவர்கள் கைதாயினர். இவ்வாறு கைதானவர்களில் காந்தியின் மகன் ஹரிலாலும் ஒருவர். ஆசியர்களின் பெயர்களைப் பதிவு செய்யும் அலுவலகங்களின் முன்பாக மறியலும் நிகழ்ந்தது. போராட்டக்காரர்களைக் கைது செய்தல், அவர்களின் கடைகளை மூடுதல், பொருட்களைப் பறிமுதல் செய்தல் என அரசு எதிர்வினையாற்றியது. அதே நேரத்தில் காவல்துறையினர் அதிகளவிலான வன்முறையைப் போராட்டக்காரர்கள் மீது நிகழ்த்தவில்லை. இப்போராட்டத்தில் இரண்டுமாத சிறைத்தண்டனையை 1908 அக்டோபரில் காந்தி பெற்றார். பிப்ரவரி 1909 இல் மீண்டும் கைதாகி மே இறுதியில் விடுதலையானார். மோசமான உணவு, கடினமான வேலை என்பனவற்றை சிறையில் அனுபவித்த போதிலும் அவர்கள் மன உறுதியுடன் விளங்கினார்கள்.

ஜுன் 1909 இல் தென்ஆப்பிரிக்க வாழ் இந்தியர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்றுக்குத் தலைமையேற்று இங்கிலாந்துக்குச் சென்றார். அவர் இலண்டன் நகரை அடைந்த நாளில்தான் மதன்லால் திங்கரா என்ற இந்திய மாணவன் கர்சான் வாவி என்ற ஆங்கிலேயரைச் சுட்டுக்கொன்றான். கரசான் வாவி இந்தியாவில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரியாவார். இளம் இந்தியர்களிடம் உரையாற்ற அவரை அழைத்திருந்தனர். அழைப்பை ஏற்று அவர் உரையாற்ற வந்தபோதே இது நிகழ்ந்தது.

இந்நிகழ்வு இந்தியர்கள் மீதான ஆதரவு நிலையெடுப்பதில் இருந்து ஆங்கில அரசைத் தடுத்தது. காந்தி மேற்கொண்ட தூதுமுயற்சி வெற்றிபெறாத நிலையை உருவாக்கியது. வன்முறையின் வாயிலாகவே இந்தியாவில்



இருந்து ஆங்கிலேயரை விரட்டமுடியும் என்ற கருத்துடைய இந்திய இளைஞர்களை இலண்டனில் அவர் சந்திக்க நேர்ந்தது. என்றாலும் அவரது சத்தியாகிரகப் போராட்ட நிலையிலேயே அவர் உறுதியாக நின்றார்.

★★★

*1910, 1911*ஆவது ஆண்டுகளில் டிரான்ஸ்வால் இந்தியர்களின் போராட்டம் தொடர்ந்தது. மூவாயிரம் இந்தியர்கள் (மொத்த இந்தியர்களில் 35%) கைதானார்கள் ஜோகன்ஸ்பர்க் நகருக்கு வெளியில், கைது உத்திரவுக்குப் பதில் தண்டம் விதிக்கப்பட்டது. தண்டத் தொகையைக் கட்டாவிடில் அவர்களது உடைமைகள் கைப்பற்றப்பட்டு ஏலமிடப்பட்டன. சிறு வியாபாரிகளுக்கு இது பலத்த அடியாக இருந்தது.

அவர்களிடம் அனுதாபம் கொண்ட வெள்ளையர்களிடம் உரிய விலைக்கு தம் கடைகளை விற்றுவிட்டு சாலையோர வியாபாரிகளாக மாறும்படி காந்தி அவர்களுக்குக் கூறினார். வணிகர்களும், மத்தியதரவர்க்கம் சேர்ந்த அலுவலர்களும், தெருவில் விற்பனை செய்வோரும் தொழிலாளர்களும் இப்போராட்டத்தில் தம் வாழ்க்கையையே ஈடாக வைத்தனர். இந்நிகழ்வின்போது பேச்சு வார்த்தைகளும் நிகழலாயின. ஏப்ரல் 1911இல் நிகழும் பாராளுமன்றக் கூட்டத்தில், பெயர்களைப் பதிவு செய்யும் சட்டத்தை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டது. இதன் அடிப்படையில் போராட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. ஆசிய நாட்டினருக்கு எதிரான இச்சட்டத்தை திரும்பப் பெறுவதில் வெள்ளை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் தேக்க நிலை ஏற்பட்டு 1912 வரை நீடித்தது.

*1914* ஜூனில் தென்ஆப்பிரிக்கா வாழ் இந்தியர்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் சட்டம் நிறைவேறியது. இதன்படி இந்தியர்கள் மீது விதிக்கப்பட்ட மூன்று பவுண்ட் வரி நீக்கப்பட்டது. இந்தியர் ஒருவர் தம் மனைவி ஒருத்தியுடன் தென்ஆப்பிரிக்காவில் வாழ அனுமதி வழங்கப்பட்டது. அதே நேரத்தில் தென்ஆப்பிரிக்காவில் பிறந்த இந்தியர்கள் சுயேச்சையாக இடம் பெயர அனுமதி வழங்கப்படவில்லை.

- தொடரும்.

**தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்**

**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்**

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2019

## அறிவிப்பு

*31-வது ஆண்டாக, படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது

- ♦ *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2015-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- ♦ *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2018, 2019-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- ♦ *பரிசுக்கான 8, 9-வது பிரிவுக்கு 2018, 2019-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- ♦ *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- ♦ *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2014-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- ♦ *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின்* **இரண்டு படிகள்** *அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- ♦ *படைப்புகளை 31-07-2019-க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*

முனைவர் நா. இராமச்சந்திரன்,
**55/3**, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை,
பெருமாள்புரம்,
திருநெல்வேலி – **627007**
*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com

| | | |
|---|---|---|
| இரா. காமராசு | சி. சொக்கலிங்கம் | நா. இராமச்சந்திரன் |
| மாநிலப் பொதுச் செயலாளர் | மாநிலத் தலைவர் | செயலாளர் – இலக்கியக் குழு |



கட்டுரை

# காலனிய காலத்தில் கருக்கலைப்பும் பெண் சிசுக் கொலையும்

டாக்டர் சு. நரேந்திரன்

"பெண் நோயாளி, ஆண் மருத்துவரைப் பார்க்க சம்மதித்தாலும் ஒரு திரைக்குப்பின் அமர்ந்து கையை மட்டும் தெரியும்படி நீட்டியபடி இருக்க, நோயாளியின் நாடி பார்க்கப்பட்டது."

**பெண்கள் ஆண்களிடம் மருத்துவம் பார்த்துக்கொள்ள மறுப்பு**

இந்து சமூகத்தின் நிலை பிறப்பிலிருந்து இறப்பு வரை 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் துன்பமான, வருத்தத்துடன் கூடிய நீண்ட நெடிய கதை. பெண்கள் பூப்பெய்வதற்கு முன்னரே இளம் வயதில் மிக அரிதான சமயங்களைத் தவிர 5 - 10 வயதுக்குள்ளேயே பெரும்பாலும் திருமணம் நடைபெற்றது.

பெண்களுக்குக் கல்வி அளிக்கப்படவில்லை. ஏனெனில் படித்தால் விதவையாகி விடுவார்கள் என்ற அக்காலத்திய குருட்டு மூட நம்பிக்கையே ஆகும்.

19-ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பாதியில் சில செல்வந்தர்களின் குடும்பத்தினர் தங்கள் எஸ்டேட்டுகளைப் பராமரிக்க தங்கள் பெண்களை அனுமதித்தனர். இது தவிர கிறித்தவ மிஷனரிகள் பெண் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டனர். இந்நிலையில் கல்வி கற்ற குடும்பத்தினர் பெண்கள் கல்வி கற்க ஆதரவு அளித்தாலும், பழைமையை நம்புகிறவர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர். 19 -ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் வரை மிகக் குறைந்த அளவே பெண்கள் கல்வி பயின்றனர். கிழக்கிந்திய கம்பெனியின் சமூக முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளில் பெண் கல்வியும் ஒன்றாக இருந்தாலும் அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படாது எந்த நடவடிக்கை களையும் நடைமுறைப்படுத்தவில்லை.

பெண்கள் நோய்வாய்ப்பட்ட பொழுது, பெண் மருத்துவர் இல்லாதபொழுது, நோயின் அறிகுறிகளைத் தங்கள் உறவினர் அல்லது தெரிந்த ஆண் மருத்துவரிடம் எடுத்துச் சொல்லி மருத்துவம் பெறுவர். பெண் நோயாளி, ஆண் மருத்துவரைப் பார்க்க சம்மதித்தாலும் ஒரு திரைக்குப்பின் அமர்ந்து கையை மட்டும் தெரியும்படி நீட்டியபடி இருக்க, நோயாளியின் நாடி பார்க்கப்பட்டது. ஒரு கண் மருத்துவர் புரையை அகற்ற பெண்ணின் உடலை முழுவதுமாகத் துணியால் மறைத்த நிலையில் கண்ணைச் சுற்றி ஓட்டையிட்டு அதன் வழியாகக் கண் புரைக்கான அறுவை புரிந்தார்.

இதைவிட பர்தா முறையில் மிகவும் பரிதாபமானது, கருவுற்ற பெண் பிரசவ நேரத்தில் எவ்வளவு துன்புற்றாலும் ஆண் மருத்துவரால் மருத்துவம் அளிக்க மறுக்கப்பட்டு, கருவுற்றவர் இறந்து போவது நாளும் நடைபெறும் காட்சியாக இருந்தது.

பர்தா வழக்கத்தைத் தாண்டி, மூட நம்பிக்கையும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. சான்றாகக், குழந்தை பிறக்கும் காலம் ஒரு பேய்க்கு உடைமையானது என்பதாகும். பிரசவத்திற்குப் பிறகு குழந்தை பெற்ற தாய்க்கோ அல்லது சேய்க்கோ நோய் வந்தால் அது துப்புரவு இன்மையாய் இருந்தாலும், அது பேயினால் என்று நினைத்து மருத்துவம் அளிக்கப்படமாட்டாது. இதனால் அதிக அளவு மரணம் தாய்க்கும் சேய்க்கும் ஏற்பட்டது.

மகளிர் மரணம் மூட நம்பிக்கையுடன், கருவுற்றவர் வாழும் நிலையையும் அவர் பழக்க வழக்கங்களையும் சார்ந்தும் இருந்தது. எடுத்துக்காட்டாக, உடற்பயிற்சி இன்மை, சத்துணவு இன்மை, சூரிய ஒளியின்றி வாழும் இல்லம், சுத்தமற்ற காற்று இல்லா சூழ்நிலை ஆகியவைகளினால் உடலில் இரத்த சோகை, வைட்டமின் குறைபாடுகளினால் அதுவும் குறிப்பாக வைட்டமின் 'டி' குறைபாடுகளினால், எலும்பு நலிவு, கருவுற்ற காலங்களில் ஏற்பட்டது. சில நேரங்களில் வலிப்பு, கை, கால்களில் வீக்கம், இரத்தக் கொதிப்புடன் சன்னி கண்டு இறக்க நேரிட்டது.

மேலும், பிரசவ நேரத்தில் அப்பெண் வீட்டின் ஒரு தூய்மையற்ற மோசமான மூலையில் யாரும் அவருக்குப் பணிவிடை செய்யாது, தனிமையில் கிடத்தப்படுவார். யாராவது பணிவிடை செய்ய முன்வந்தாலும், அவர் தூய்மையற்றுக் காணப்படுவார். இந்நிலையில் கருவுற்றவரும் குளிக்காது, தன் உடைகளைக் குழந்தை பிறக்கும் வரை மாற்றாது இருப்பதென்பது வழக்கமாக இருந்தது.

கருவுற்றவர் பிரசவிக்க அரசு அல்லது நகராட்சி மருத்துவமனைகளில் எந்தவிதத் தடையும் இல்லாதபொழுதும், அங்கு பிரசவம் பார்க்க பெண் மருத்துவ உதவியாளர் இல்லாமையால் கருவுற்றவர்கள் செல்வது கிடையாது. மேலும் இவர்கள் பெண் தாதி, மருத்துவர்களைவிட தங்கள் வீட்டிற்கு வரும் உள்ளூர் மருத்துவச்சிகளிடம் பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர்.

**கருவுற்றவர் இறப்புக்குக் காரணம்**

*கருவுற்ற பெண்களுக்கான இறப்பு ஏற்படக் காரணங்கள்:*

1. பிரசவ காலங்களில் தகுதியுள்ள உதவியாளர் இல்லாமை.
2. மருத்துவச்சிகளுக்கு எந்தவித கண்காணிப்பும் இல்லா நிலை மற்றும் அவர்களுக்குத் திறமைகளுக்கான தகுதிகள் இல்லாமை.
3. மகளிர் மருத்துவமனையில் குறைவான பெண் மருத்துவர்கள் மற்றும் கருவுற்ற காலங்களில் பெண்ணுக்கு மிக அதிகமாகக் காணப்படும் இரத்தசோகை,



பிரசவ கால ஜன்னி, வைட்டமின் 'டி' குறைபாடு ஆகியவைகள்.

**குற்றக் கருக் கலைப்பு:**

மருத்துவச்சிகள் பிரசவம் பார்ப்பதோடு கருக்கலைப்பையும் தேவைப்பட்டுக் கேட்கும்பொழுதில் செய்தனர். செய்த பிறகு காய்ச்சல் வந்தால் மலேரியா எனச் சொல்லப்பட்டது. இதனால் கருவுற்ற பெண்களுக்கு அதிக அளவில் மரணம் ஏற்பட்டது. ஆனால் இவைகள் வீட்டாரின் ஒத்துழைப்புடனே மறைக்கப்பட்டது.

தாயின் உயிர் பிரிந்த நிலையில் யாரும் யாரைப் பற்றியும் குற்றம் சாட்டாது, பிணம் எரிக்கப்பட்டது அல்லது ஆற்றில் தூக்கி எறியப்பட்டது.

**குற்றக் கருக் கலைப்புக்குப் பயன்படும் பொருட்கள்:**

குற்றக் கருக் கலைப்பு செய்யும் முறை கருப்பையில் உறுத்தலை உண்டாக்கும் இரசாயனப் பொருட்கள் அல்லது தாவரங்கள். தாவரங்களில் மஞ்சள் அரளி, அலரி, சித்ரா ஆகியவை. இதன் சிறு குச்சிகளில் பெருங்காயம், அபின், வெண் பாஷாணம், சுத்திகரிக்காத கார்பனேட் ஆப் சோடா, மிளகு, பாதரசம், கள்ளிப்பால், குரோடான் செடிச்சாறு, மஞ்சள் ஆர்சினிக், சுண்ணாம்பு ஆகியவைகள் தடவப்படும். சில சமயம் ஆர்சீனியஸ் அமிலம் கருப்பையின் வாயில் பூசப்படும். இது தவிர மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட கருக்கலைப்புக்கான பொருள் துணியில் குறி போடும் மை, பலவித மலமிளக்கிகளும் பயன்படுத்தப்பட்டன. கருப்பை சுருங்கி விரிய வயிற்றைப் பிசைந்து அமுக்கிவிடுவதும் உண்டு.

இவைகளினால் வயிற்றினுள் அழற்சி ஏற்பட்டு, இரத்தம் நஞ்சாகி மரணம் ஏற்படும் அல்லது சில சமயம் பயன்படுத்தப்படும் நச்சினாலும் நேரடியாக மரணம் சம்பவிக்கும். வயிற்றைப் பிசைந்து அமுக்கி விடும்போது, கருப்பை தெரிப்பினால் இரத்தக் கசிவு ஏற்பட்டு சாவு ஏற்படும். ஆனால், இந்தச் சாவு தானாகவே கருக் கலைந்ததால் ஏற்பட்டது என்று கூறப்பட்டு பிணம் அகற்றப்படுவதோடு, இதற்குப் பயன்படுத்தப்பட்ட அத்தனை உறுத்தலைக் கொடுக்கும் பொருட்களும் சுவடுகள் தெரியாமல் அப்புறப்படுத்தப்பட்டுவிடும்.


**சிசு மரணம்**

கருவுற்றதால் எவ்வளவு மோசமாகத் தாய்மார்கள் நடத்தப்பட்டார்களோ அதைவிட மோசமாக அவர்களுக்குப் பிறக்கும்

சிசுக்களும் கவனிக்கப்பட்டார்கள். அதுவும் பெண் குழந்தையாய் இருப்பின், பிறந்த-திலிருந்தே புறக்கணிக்கப்பட்டது. 18, 19 - ஆம் நூற்றாண்டில் பெண் சிசுவைக் கொலை செய்வது என்பது சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. இது ஏனெனில் அவர்கள் திருமணத்திற்கு அதிகமாகப் பணம் தேவைப்பட்டதாலும், சில நேரங்களில் திருமணமாகாத நிலையில் அவர்கள் சமூகத்தினரால் கேலி பேசப்படுவதைத் தடுப்பதற்காகவும் ஆகும்.

**எப்படி சிசு கொலை செய்யப்பட்டது?**


இதற்காகக் குழந்தையைக் கொல்ல, பால் கொடுக்காமல் இருப்பது அல்லது மார்பகத்தில் நச்சுப்பொருளைப் பொதுவாக அபினைத் தடவி குழந்தையைப் பால் குடிக்க வைப்பதும் ஆகும். இது தவிர நேரடியாகவே சில முறைகள் கையாளப்பட்டன. எடுத்துக்காட்டாக, ராஜா ரஞ்சித் சிங்கின் மகன் மகாராஜா தலீப் சிங். இவர் லாகூரில் குழந்தையாய் இருக்கும்பொழுது அவருடைய சகோதரியைச் சாக்கில் போட்டு ஆற்றில் தூக்கி எறியப்பட்டதாகக் கூறுகிறார். இதுபோன்ற சம்பவங்கள் அரிது என்றாலும், வங்காளத்தில் 1802-இல் குழந்தைகளை அது ஆணோ பெண்ணோ எதுவானாலும் கங்கை நதியில் தூக்கி எறிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.



**எளிதில் கொலையைக் கண்டுபிடிக்க முடியாது**

1884 அசிஸ்டண்ட் சர்ஜனாக வேலை பார்த்த ராம் கிஷன் விவரிப்பின்படி, பிறந்த குழந்தையைச் சாகடிக்க, பிறந்தவுடன் அதன் தொப்புள் கொடியைக் கட்டுவது இல்லை அல்லது குழந்தைக்கு அபின் கொடுப்பது. இது தவிர மிக அதிகமாக மேற்கொள்ளப்பட்ட செயல், குழந்தையின் வாயின் உள்ளே அன்னத்தில் கடுகு எண்ணெய் தெளித்த பஞ்சை வைத்து குழந்தை மூச்சு நின்ற பிறகு பஞ்சை எடுத்துவிடுவது ஆகும்.

டாக்டர் சென்னின் கணக்குப்படி 1904 - இல் சரியாகப் பராமரிக்காததாலும், மருத்துவச்சிகளால் சுகாதாரமாகச் செய்யப்படாத பிரசவத்தாலும் டெட்டனஸ், எரிசிபிலஸ் போன்ற நோய்களினால் 34.40 சதவீத சிசு மரணங்கள் ஏற்பட்டன. உணவுப் பற்றாக்குறை, தவறுதலான மருத்துவம், இரைப்பை குடல் நோய்களினால் 36.33 சதவீதம் மரணமும், 18.14 சதவீதம் மருத்துவச்சிகள் தவறுதலான முறையில் பிரசவம் பார்த்ததினாலேயும் மரணம் ஏற்பட்டது. மேற்சொன்ன சுகாதாரமற்ற தவறுதலான பிரசவம் பார்க்கும் முறைகள் நகரத்திலும், கிராமத்திலும் நடைபெற்றன.




மிக அதிகமாக ஏற்படும் சிசு இறப்பிற்கு, தாதிகளின் சுத்தமற்ற, முரட்டுத்தனமான செயல்களும் காரணங்கள்.

பிரசவம் ஆனபின் நச்சுக்கொடியைச் சிசுவிடமிருந்து துண்டிக்க தாதிகள் கிடைத்த பொருளைக் கொண்டு பெரும்பாலும் துண்டிப்பார்கள். பெரும்பாலும் தான் கொண்டு வந்த பழைய சவரப் பிளேடுகளைப் பயன்படுத்துவார்கள். சில சமயங்களில் வீட்டில் உள்ள அரிவாள்மனையைக் கூடப் பயன்படுத்துவார்கள். இதனால் தொப்புள்கொடி சீழ்பிடித்து, புண் ஆறுவதிலிருந்து நோய் வந்தால் பிழைக்க வைக்க முடியாத டெட்டனஸ் நோய்வரை ஏற்பட்டு சிசு மரணம் ஏற்படும். வெட்டிய நச்சுக்கொடியிலிருந்து இரத்தம் வெளிவராது தடுக்க கொடியைக் கட்ட கருவுற்ற தாயின் முடி அல்லது அருகில் கிடைத்த நூல் பயன்படுத்தப்பட்டது.

இதுபோன்ற மூடப் பழக்கங்களுடன் கொஞ்சம்கூட மாசு நீக்கி செய்யப்படாத மருத்துவத்தைத் தாதிகள் கடைப்பிடிக்கும் முறைகளைக் கண்ணுற்ற காலனி அரசு, மேலை மருத்துவ தாதி முறையைப் பெண்களுக்கு முறைப்படி மருத்துவமனைகளிலும், மருத்துவப் பள்ளி, கல்லூரிகளிலும் கற்றுத்தர முன்வந்தது.

●





# தஸ்தயேவ்ஸ்கியின் 'ஓர் எழுத்தாளரின் நாட்குறிப்பு' நூலை முன்வைத்து...

ந. முத்துமோகன்

"ஓர் எழுத்தாளரின் நாட்குறிப்பு" எனும் இந்நூல் மாபெரும் ரஷ்ய எழுத்தாளர் தஸ்தயேவ்ஸ்கியின் கடைசி நூலாகும். 1873 லிருந்து 1881 வரை தஸ்தயேவ்ஸ்கி, அதாவது அவரது மரணம் வரையில், The Citizen என்ற வாராந்திரப் பத்திரிக்கையில் அவர் தொடராக எழுதிய சிறிய, பெரிய கட்டுரைகளின் தொகுப்பு இது. வாழ்வின் இறுதிப்பகுதியில் எழுதப்பட்ட நூல் என்பதால் தஸ்தயேவ்ஸ்கியின் முதிர்ச்சியடைந்த கருத்துக்களைக் கொண்ட நூலாக இது அமைகிறது. சுமார் 1500 பக்கங்களைக் கொண்ட நூற்தொகுப்பு. குற்றமும் தண்டனையும், கரமசோவ் சகோதரர்கள் ஆகிய இரண்டு நூல்களையும் சேர்த்தால், அவற்றை விடவும் அதிக பக்கங்களைக் கொண்ட நூல் இது என்று சொல்லுகிறார்கள். அந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து, அநேகமாக மூன்றில் ஒருபகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு, நண்பர் மணிகண்டனால் நிர்வகிக்கப்படும் 'நூல்வனம்' பதிப்பகத்தால் தமிழில் தரப்பட்டுள்ளது. மதிப்பிற்குரிய நண்பர் சா.தேவதாஸ் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார்.

இந்நூலுக்கென தஸ்தயேவ்ஸ்கி குறிப்பிட்ட எந்த ஒரு கறாரான திட்டத்தையும் வைத்திருந்ததாகச் சொல்லமுடியவில்லை. சில தன்வாழ்க்கைக் குறிப்புகள், பெலீன்ஸ்கி, நெக்ராசோவ், தல்ஸ்தோய் போன்ற சமகால எழுத்தாளர்கள் பற்றிய சில அபூர்வமான குறிப்புகள், கொடூரமான கொலைகள் சிலவற்றைப் பற்றிய பத்திரிக்கைச் செய்திகள், அவை குறித்த நீதிமன்ற விசாரணைகள், தீர்ப்புகள், சமகால ரஷ்யாவின் வாழ்க்கையை ஊடுருவி நின்ற சில கருத்தியல் போக்குகள் (ஸ்லாவியம், ஆசாரவாத (Orthodox) கிறித்தவம், நரோத்னிக் சிந்தனை, ஆங்காங்கே சோசலிசம் பற்றிய கருத்தமைவுகள்) ஆகியன இந்நூலில் விவாதிக்கப்படுகின்றன. பிற நூல்களில் கிடைக்காத சில அபூர்வமான குறிப்புகள் இந்நூலில் கிடைக்கின்றன என்பது இந்நூலின் சிறப்பு.

**தஸ்தயேவ்ஸ்கியின் வாழ்க்கை மற்றும் வரலாற்றுச் சூழல்கள்**

*1812 ல் ரஷ்யா மீது பிரான்ஸ் (நெப்போலியன்) படையெடுப்பிலிருந்து இக்கதையைத் தொடங்க வேண்டும். அப்போர் ரஷ்ய வரலாற்றில் மாபெரும் தேசபக்த யுத்தம் என வழங்கப்படுகிறது. அப்போரில் ரஷ்ய விவசாயிகள் தமது தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்காக மகத்தான தியாகங்களைச் செய்ததாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. தல்ஸ்தோய் எழுதிய 'போரும் அமைதியும்' என்ற பிரும்மாண்டமான நாவல் இப்போரைப் பற்றியது. அதில் ரஷ்ய விவசாயிகளின் எளிய வாழ்வு, வீரதீரங்கள், தியாகங்கள் சித்தரிக்கப்படுகின்றன. 1812ல் நடந்த யுத்தம் தல்ஸ்தோயால் 1867ல் போரும் அமைதியும் என்ற தலைப்பின் கீழ் இலக்கியமாக்கப்பட்டது என்பதிலிருந்து அந்த நூற்றாண்டு முழுவதும் அப்போரின் செல்வாக்கு ரஷ்ய வாழ்வில் நின்று நிலைத்தது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். 1812ல் தொடங்கிய ரஷ்ய தேசபக்த யுத்தம் 1917 வரை தொடர்ந்தது என்று ஒரு விகிபீடியா கட்டுரையாளர் தெரிவிக்கிறார். 19 ஆம் நூற்றாண்டின் ரஷ்ய இலக்கியப் பின்புலத்தைப் புரிந்து கொள்ளாமல் நேராக ரஷ்யப் புரட்சியைப் புரிந்து கொள்ள முடியாது என்று பல விமர்சகர்கள் எழுதுகின்றனர்.*

*1812 யுத்தம் ரஷ்ய தேசிய உணர்வைத் தூண்டியது. ரஷ்ய தேசியத்தின் முதல் கவிஞர் புஷ்கின். 1825ல் டிசம்பரில் ரஷ்ய போர்த் தளபதிகளின் இயக்கம் ஒன்று ரஷ்ய விவசாய சமூகத்தில் சீர்திருத்தங்கள் கோரி அரசை வலியுறுத்தி போராட்டம் நடத்தியது. 1812 தேசபக்த யுத்தத்தில் விவசாயிகளின் பாத்திரம் சுட்டிக்காட்டப்பட்டு, அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. 1825 டிசம்பர் போராளிகள் டிசம்பரிஸ்டுகள் என்று அழைக்கப்படுகின்றனர். பல டிசம்பரிஸ்டுகள் தண்டிக்கப்பட்டு சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டனர். தளபதிகளின் மனைவியரும் தமது கணவன்மாருடன் சைபீரியாவிற்குச் சென்று தண்டனை வாழ்வில் அவர்களுக்கு உதவியாக வாழ்ந்தனர். புஷ்கினுடைய கவிதைகள் சைபீரியத் தண்டனையைக் கணவருடன் அனுபவித்த ரஷ்யப் பெண்களை மிக அருமையாகச் சிறப்பித்துப் பாடுகின்றன. ரஷ்ய தேசியத்தை டிசம்பரிஸ்டுகளிலிருந்து புஷ்கின் வருவிக்கிறார். ரஷ்யாவில் பெண் விடுதலை இயக்கமும் புரட்சிகரப் பெண்களின் இயக்கமும் அந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே தீவிரப்பட்டன என்று தாரிக் அலி என்ற வரலாற்றாசிரியர் தெரிவிக்கிறார்.*

*இவை ஒருபுறம் இருக்க, ரஷ்ய விவசாய சமூகம் 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் மிகப் பெரிய வளர்ச்சி, சீர்திருத்தம், சனநாயகம் ஆகிய எதனையும் சந்திக்கவில்லை. தொழில் வளர்ச்சி அடியோடு இல்லாமலிருந்தது. ஐரோப்பாவில் ரஷ்யா ஒரு பின்தங்கிய நாடு என்ற பெயரே பிரதானமாக வழங்கி வந்தது. 19 ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து பெலீன்ஸ்கி போன்ற விமர்சகர்களும் லெர்மன்தோவ், நிக்ராசவ் போன்ற கவிஞர்களும் அம்மண்ணில் தோன்றினர். செர்னஷேவ்ஸ்கி போன்ற தீவிர அரசியல் சிந்தனையாளர்களும் தோற்றம் பெற்றனர்.*

**ஸ்லோவஃபீல் எனும் மண்ணின் மைந்தர்கள்**


*கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பான்மை நிலப்பகுதி பூகோளரீதியாக ஸ்லாவியா என்று அழைக்கப்படுகிறது. ஃபீல் என்ற சொல்லுக்கு நேயம், காதல் என்று பொருள். ஃபிலாசஃபி என்ற சொல்லுக்கு அறிவின் மீது கொண்ட காதல் என்று பொருள். ஃபிலான்திரபி என்ற சொல்லுக்கு மனித நேயம் என்று பொருள். வேதியியலில் எலெக்ட்ரொஃபில் என்ற சொல் எலெக்ட்ரொன் மீது மற்றொரு நுண்துகள் கொள்ளும் ஈர்ப்பைக் குறிக்கிறது. ஆக, ஸ்லோவஃபீல் எனில் தமது சொந்த பிரதேசமான ஸ்லாவியா மீது கொள்ளும் நேயம் என்று பொருள். ரஷ்ய தேசியத்தின் ஒரு பரந்த வடிவமாக ஸ்லோவஃபீல் விளங்கியது. மேற்கு ஐரோப்பா கிழக்கு ஐரோப்பாவை வளர்ச்சியடையாத பகுதி, காட்டுமிராண்டி மக்கள் என்றெல்லாம் அவமதித்து வந்ததால் ஸ்லாவொஃபீல் என்ற கருத்தியல் அதற்கு எதிர்நிலையில் ரஷ்யாவில் வேகமாகப் பரவியது. ரஷ்யர்களுக்கிடையில் மேற்கு ஐரோப்பாவை நவீன கற்றறிந்த நாகரீகம் எனக் கூறி அதனை பாவனை செய்யும் ரஷ்ய உயர்குடியினர் ஏராளமாக இருந்தனர். இத்தகைய உயர்குடித்தனத்தை தஸ்தயேவ்ஸ்கி வன்மையாகக் கண்டித்தார். சாதாரண ரஷ்யர்களிடம் அது போன்ற உயர்குடித்தனப் பாவனைகள் இல்லை என்று அவர் கூறுவார். ஸ்லோவொஃபீல் என்பது பரந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் குறிக்கும் என்பதால், தஸ்தயேவ்ஸ்கி கிழக்கு ஐரோப்பியரிடையில் ரஷ்ய ஸ்லாவியர்களே தூய்மையானவர்கள், தூய கிறித்தவர்கள், உயர்ந்தவர்கள் என்பது போன்ற கருத்துக்களையும் கொண்டிருந்தார்.*

**ஆசாரவாத கிறித்தவம்** (Orthodox Christianity)

*ஸ்லோவொஃபீலுடன் இரண்டறக் கலந்த ஒரு கருத்தியல் போக்கு பூர்வீக கிறித்தவத்துடன் தொடர்பு கொண்டது. அது ஆச்சார கிறித்தவம் என்று இந்நூலில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிறித்தவ வரலாற்றில் ஆரம்பகால கிறித்தவம், கத்தோலிக்கக்*

கிறித்தவம், ப்ரொட்டெஸ்டன்ட் கிறித்தவம் ஆகிய மூன்று போக்குகள் தென்படுகின்றன எனில், அவற்றில் மிகப்பழமையானதாக ஆசாரவாத கிறித்தவம் கொள்ளப்படுகிறது. கத்தோலிக்கரும் புராட்டஸ்டென்ட் கிறித்தவரும் உலகியல் நலன்களுக்காக, அரச அதிகாரத்துக்காக ஏசுவை விற்றவர்கள் என்று தஸ்தயேவ்ஸ்கி எழுதுகிறார். கத்தோலிக்கரின் உலகியல் அதிகாரம் (பூமியில் தேவனின் ராஜ்ஜியம்) என்ற கருத்தாக்கத்திலிருந்தே சோசலிசம் தோன்றியது என்றும் தஸ்தயேவ்ஸ்கி கருதுகிறார். மாறாக, எந்தவிதமான உலகியல் நலன்களின் கலப்புமின்றி கிறிஸ்துவின் தூய ஆன்மீகத்தைப் பின்பற்றுபவர்கள் ஆசாரவாத கிறித்தவர்கள் என்பது தஸ்தயேவ்ஸ்கியின் விளக்கம்.

மேற்கு ஐரோப்பா, ஸ்லாவிய கிழக்கு ஐரோப்பா என்ற 18-19 ஆம் நூற்றாண்டின் (நவீன) எதிர்வை மொத்த கிறித்தவ வரலாற்றின் எதிர்வாக விரிவு படுத்துவது தஸ்தயேவ்ஸ்கியின் கருத்தியல் நிலைப்பாடு. கிறித்தவ சமயத்தின் ஓர் உள்பிரச்சினையை ஐரோப்பிய வரலாற்றின் ஒட்டுமொத்த பிரச்சினையாக, சமகாலப் பண்பாட்டு அரசியலின் பிரச்சினையாக தஸ்தயேவ்ஸ்கி ஆக்கிக் காட்டுகிறார். இது விவாதத்திற்கு உரிய ஒன்றாகும். ஆயின் 19 ஆம் நூற்றாண்டின் ரஷ்யாவில் இது குறிப்பிடத்தக்க பிரச்சினை இருந்தது. ஸ்லாவிய ஆசாரவாத கிறித்தவம் மீண்டும் அரியணை ஏற வேண்டும் என்று தஸ்தயேவ்ஸ்கி பேசுகிறார்.




தாஸ்தோயெவ்ஸ்கி | ஓர் எழுத்தாளரின் நாட்குறிப்பு | தமிழில் சா.தேவதாஸ் | நூல் வனம் வெளியீடு, ராமாபுரம், சென்னை | விலை: ரூ.700/-

கத்தோலிக்க கிறித்தவத்தின் தலைமைப்பீடமான ரோமாபுரியைத் தாண்டி, ஸ்லாவியத் தலைநகராக அமைந்திருந்த கான்ஸ்டான்டினோபிள் (பழைய பெயர் பைசான்டியம்) மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று தஸ்தயேவ்ஸ்கி வாதிடுகிறார். இஸ்லாமிய துருக்கியிடமிருந்து அதனை மீட்க வேண்டும் என்று கூறுகிறார். "ரஷ்ய இருப்பின் புதிய காலக்கட்டம் தொடங்குகிறது. கான்ஸ்டாண்டினோபிள் கிழக்கத்திய உலகின் மையமாக இருக்க, ரஷ்யாவோ அதன் ஆன்மீக மையமாக இருக்கிறது. தற்போதைக்கு சிறிதுகாலம் பீட்டர்ஸ்பர்க்கை மறந்திருப்பது ரஷ்யாவுக்கு அவசியமானதும் பயனுள்ளதும் ஆகும்."

**நரோத்னியம் என்ற ரஷ்ய வெகுமக்களியம்**

ஸ்லாவோஃபில் மற்றும் ஆசாரவாத கிறித்தவம் என்ற இரண்டோடு இந்த விவாதத்தை முடித்து விட்டால், நமது அன்பிற்குரிய தஸ்தயேவ்ஸ்கி நமக்குக் கிடைக்கமாட்டார். அதே 19 ஆம் நூற்றாண்டின் மற்றொரு செல்வாக்குள்ள, வெகுமக்கள் தொடர்பு கொண்ட நரோத்னியம் என்ற சிந்தனையை இங்கு சேர்த்துக் கொள்ள வேண்டும். நாம் ஏற்கனவே குறிப்பிட்ட 1812 இன் மாபெரும் தேசபக்த யுத்தத்திலிருந்து இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த யுத்தம் ரஷ்ய விவசாயிகளின் தேசபக்த உணர்வுகளை எடுத்துக்காட்டியது. ரஷ்ய உயர்குடிகளில் ஒரு பகுதியினரேனும் (டிசம்பரிஸ்டுகள்) அப்போருக்குப்பின் விவசாய ஆதரவாளர்கள் ஆனார்கள். புஷ்கின் அவ்வுணர்வின் இலக்கிய அடையாளமாக உருவானார். நிக்ராசவ் என்ற மற்றொரு முக்கியமான கவிஞர் புஷ்கினை முன்னெடுத்துச் சென்றார். பெலின்ஸ்கி, செர்னஷேவ்ஸ்கி ஆகியோர் நரோத்னியம் என்ற ஒரு கோட்பாட்டை உருவாக்கினர். நரோத் எனில் ரஷ்ய மொழியில் மக்கள் என்று பொருள். 19 ஆம் நூற்றாண்டு ரஷ்யாவில் மக்கள் எனில் குடியானவ மக்கள் என்று பொருள். 1812 போரைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் ரஷ்ய தேசியம் விவசாய மற்றும் வெகுமக்களிய உள்ளடக்கத்தை சம்பாதித்துக் கொண்டது. இது ஒரு மாபெரும் வரலாற்றுச் சாதனை.

குறிப்பிட்ட இதே காலத்தில் மேற்கு ஐரோப்பாவில் தேசிய இனப் பிரச்சினைகளை எதிர்கொண்ட கார்ல் மார்க்ஸ், போலந்து மற்றும் அயர்லாந்து தேசியவாதிகளுக்கு, உங்கள் தேசியவாதத்திற்கு விவசாய உள்ளடக்கத்தை வழங்குங்கள் என்றுதான் அறிவுறுத்தினார். அது ரஷ்யாவில் நடந்தது. தமிழில் தமிழ் தேசிய உணர்வு, திராவிட உணர்வு ஆகியவை சுதாகரிப்பானவை. ஆயின் ஒரு நூறு ஆண்டுகள் கடந்த பிறகு

இப்போதுதான் அவை விவசாயிகளைச் சிறிதளவே எட்டிப்பார்க்க ஆரம்பித்துள்ளன. இந்த ஒப்பீடுகள் நமக்குப் பயனுள்ளவை.

ரஷ்யக் கவிஞர்கள் பனியில் நனைந்த ரஷ்ய மண்ணிலிருந்து தமது தேசியத்தை உருவாக்கினார்கள். காடெனப் பரந்து கிடந்த ரஷ்ய அழகிலிருந்து ரஷ்ய தேசியத்தை உருவாக்கினார்கள். ரஷ்ய தேசியத்தின் நாயகர்களாக எளிய உழைப்பாளி மக்கள் ஆக்கப்பட்டார்கள். பெண்கள், குழந்தைகள், பிச்சை எடுப்போர், குடிகாரர், ஊனமுற்றோர், உடைபட்ட மக்கள் (Broken People), நாடோடிகள், ஏழை மனிதர்கள் (Poor Folk), தாழ்த்தப்பட்டோரும் அவமதிக்கப்பட்டோரும் (Insulted and Humiliated) தஸ்தயேவ்ஸ்கியின் நாயகர்கள் ஆனார்கள். குற்றமும் தண்டனையின் நாயகன் ரஸ்கோல்னிக்கவ், ரஸ்கோல் என்ற சொல்லுக்குப் பிளவுண்டவன், உடைந்து போனவன் என்றுதான் பொருள்.

ஐரோப்பாவின் இருத்தலியத்தையும் ஃபிராய்டிய சிந்தனையையும் கொண்டு தஸ்தயேவ்ஸ்கியை ஆராய்ச்சி செய்வோர் உண்டு. பல வேளைகளில் தஸ்தயேவ்ஸ்கியின் சமூகம் சார்ந்த நிலைப்பாடுகளிலிருந்து அவரை அந்நியப்படுத்தவே அவ்வகை ஆய்வுகள் பயன்படுகின்றன. தஸ்தயேவ்ஸ்கி சமூகரீதியாகப் புறக்கணிக்கப்பட்ட, அவமதிக்கப்பட்ட மனிதனின் உளவியலைச் சித்தரிக்கிறார். அவரது உளவியல் வெறும் உளவியலுக்காக அல்ல, அது சமூக நிலையை அதன் அத்தனை உணர்ச்சிகளோடும் பதிவு செய்வதற்காகவே. பிரான்ஸ் பனோனும் சார்த்தரும் அடிமைப்பட்ட கறுப்பின மக்களைப் பற்றி எழுதும்போது இருத்தலியத்தையும் ஃபிராய்டியத்தையும் பயன்படுத்தி எழுதினர் (Wretched of the Earth, Black Skins, White Masks). அங்கு அவர்கள் உடைந்த மனிதர்களைப் பற்றி எழுதினார்கள். ஆனால் அவர்களின் உடைவு (Brokenness) காலனியத்தாலும் நிறவெறியாலும் உண்டாக்கப்பட்டது என்பதை மறந்து விட முடியுமா? இந்திய, தமிழ்ச் சூழல்களில் தலித்திய நோக்கில் தஸ்தயேவ்ஸ்கியின் படைப்புகளை ஆய்வு செய்ய முடியும்.

**மக்கள் எனும் கருத்தாக்கம்**

தஸ்தயேவ்ஸ்கி தனது நாட்குறிப்பில், அன்னா கரீனினா நாவலில் இடம் பெறும் லேவின் எனும் உயர்குடி கதாபாத்திரத்தை விமர்சன நோக்கிலிருந்து அணுகுகிறார். ஓர் உயர்குடி நிலப்பிரபு, விவசாய மக்களின் மீது அனுதாபம் கொண்டவராக மாறும் நிலையை தல்ஸ்தோயின் லேவின் கதாபாத்திரம் சுட்டிக்காட்டியது. ஆயின் தஸ்தயேவ்ஸ்கி லேவின் போன்ற உயர்குடியினரும் சாதாரண விவசாயிகளிடமிருந்து தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எழுதுகிறார். லேவின் இன்னும் முழுமையடையவில்லை, லேவின் போன்றோர் இன்னும் மக்கள் (நரோத்) என்ற நிலையை அடையவில்லை என்று தஸ்தயேவ்ஸ்கி விமர்சிக்கிறார். லேவினும் அவரைப் படைத்த தல்ஸ்தோயும் ஒரே விதமான மனம் திருந்திய உயர் குடியினர் என்று சுட்டிக்காட்டுகிறார். இது போதவே போதாது என்பது தஸ்தயேவ்ஸ்கியின் நிலைப்பாடு. மக்கள் என்ற கருத்தாக்கத்தை கீழிருந்து தஸ்தயேவ்ஸ்கி கட்டமைக்கிறார். இன்று பேசப்படும் Subalterns, Marginal, Premodern, உதிரித் தொழிலாளர் வர்க்கம், சமூகக் "கழிவுகள்" போன்ற பல புதிய கருத்தாக்கங்களை தஸ்தயேவ்ஸ்கியின் சொற்கள் முன்னுணர்த்தி நிற்கின்றன.

லேவின், தல்ஸ்தோய் ஆகியோரிலிருந்து வேறுபட்ட ஒரு நரோத்னியத்தை தஸ்தயேவ்ஸ்கி புஷ்கினிடம் காண்கிறார். "மக்கள் நேசித்த ஒவ்வொன்றையும் புஷ்கின் நேசித்தார். அவர்கள் வணங்கிய ஒவ்வொன்றையும் அவரும் வணங்கினார். ரஷ்ய இயற்கையை, ரஷ்ய கிராமப்புறத்தை அவர் அவ்வளவு தீவிரமாக நேசித்தார். குடியானவரின் வேதனைக்காக அனுதாபப்பட்ட, இரக்கமும் மனிதாபிமானமும் மிக்க ரஷ்ய உயர் குடியினர் அல்ல புஷ்கின். சாதாரண மக்களைச் சார்ந்த ஒருவனை, அவன் சாராம்சத்தை, அவனது படிமத்தை தன் இருதயத்தில் பதித்துக் கொண்டவர் புஷ்கின்."

பிரெஞ்சு மொழியின் மீது நாகரீக மோகம் கொண்ட ரஷ்ய உயர்குடியினரைத் தஸ்தயேவ்ஸ்கி கடுமையாக விமர்சிக்கிறார். இந்நூல் தொகுப்பில் தாய்மொழிக் கல்வி, பயன்பாடு குறித்த அற்புதமான கட்டுரை ஒன்று (பக். 308) இடம்பெற்றுள்ளது. சிந்தனை ஆழம் பெறுவதற்கு, ஆன்மீகத் தேடலுக்கு அந்நிய மொழி போதுமானல்ல, தாய் மொழியே வளமானது, பன்முகப்பட்டது, செழுமையானது என்று தஸ்தயேவ்ஸ்கி எழுதுகிறார்.

ஜியார்ஜ் லூக்காச் எனும் மார்க்சிய அறிஞர் தஸ்தயேவ்ஸ்கி பற்றி எழுதும்போது, "கற்பனாரீதியான முதலாளிய எதிர்ப்பாளர் Romantic Anti-Capitalist" என்று கூறுகிறார். மேற்கிலிருந்து முதலாளியம் புயல்போல ரஷ்ய மண்ணுக்குள் படையெடுத்த போது ஏசுவைப்போல் இரண்டு கைகளையும் விரித்தபடி எதிர்த்து நின்று தஸ்தயேவ்ஸ்கி அதனை மறித்தார். எனவேதான் தஸ்தயேவ்ஸ்கி இன்றும் இந்தியாவிற்கு, தமிழுக்கு ஏராளமாகப் பொருந்துகிறார்.

●



கட்டுரை

# சிவஞான மாபாடியம் சில விழுமியங்கள்

## முப்பால்மணி

சைவத்துறையில் தமிழகத்தில் பதின் எட்டாம் நூற்றாண்டில் மாதவசிவஞான முனிவர் சிவஞான மாபாடியம் அறிவித்துச் சித்தாந்த சைவத்திற்குப் புதுப்பொலிவு அளித்தார். அவர் காலத்தில், பதின் ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவராயர் உணர்ந்த பரமாத்துவிதம் என்ற வேதாந்தம் சைவத்துறையில் வீறார்ந்த நிலையில் விளக்கம் பெற்று நின்றது. பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர் பற்றிய போற்றி உணர்வுகள் சைவத்துறையினில் சிறப்பிடம் பெற்று இருந்தன. சிவஞான முனிவர் தமது மாபாடியத்துள் வேதம் மற்றும் ரௌரவம், பவுட்கரம், மதங்கம் மற்றும் மிருகேந்திரம் ஆகிய ஆகமங்களையும், சுவேதாச்சுவதரம், சாந்தோக்கியம், சுபாலம் ஆகிய உபநிடதங்களையும், நீலகண்ட சிவாச்சாரியார், அப்பைய தீட்சதர், சிவாக்கிரயோகிகள் ஆகியோருடைய பேருரைகளையும் போற்றிச் சித்தாந்த சைவத்தின் பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருள்களுக்கு பேருரை அளித்துச் சைவத்தை வளப்படுத்தினார்.

சிவஞான முனிவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் கிறித்தவ நெறியானது வேர் ஊன்றிக்கொண்டு இருந்தது. ஜெர்மனி ஹாலே நகர வேதசாஸ்திரப் புராட்டஸ்டண்ட் பாடசாலையில் பயிற்சி பெற்ற லூத்ரன் சபை உபதேசிமார் தரங்கம்பாடி வந்து இறங்கிச் சென்னை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் நகரங்களில் பணி மேற்கொண்டனர். கோவாவைத் தலைமை இடமாகக் கொண்டு கத்தோலிக்க சபையினர் மதுரை, திருநெல்வேலி, தெற்குக் கரைக் கிராமங்களில் திருத்தொண்டைக் கைக்கொண்டனர். அர்ச், சேவியர் அண்ட்ரிக் பிரிட்டோ, ராபர்ட் டிநொபிலி பணிகளுக்குப் பிறகு, சீகன் பால்க், புளுச்சோ, சூல்ட்ஸ், வால்ட் சுவார்ச் மற்றும் கான்ஸ்டன்டைன் பெஸ்கி ஆகியோர் தமது லூத்ரன் சபை சார்ந்து திருப்பணிகள் ஆற்றினர். உறுதிப் பொறுப்பான நிறுவனம், செயல் உறுதி, பணிபுரியும் களம் பற்றிய குறிப்பான மதிப்பீடு, கருத்தியல் கண்டிப்பு ஆகியன அவர்களிடையே மின்னியது. அப்போது கத்தோலிக்க சபையினரும், புராட்டஸ்டண்ட் சபையினரும் தமக்குள் விரோதம் பூண்ட மனப்பாங்கினில் போட்டி இட்டுக் காரியம் ஆற்றினர். தமது செயல் பொறுப்புகளில் சுயசிந்தனைக் கண்டிப்போடு இயங்கினர். காசி முதல் இராமேஸ்வரம் வரையான சிந்து இராச்சியத்தில் அடங்கிய மலபார் எனப்பட்ட இந்தத் தென் பகுதியில் வாழும் பரதவ, முக்குவ மக்கள் இடையே ஊழியம் புரிந்தனர். 1715 -- 1726 காலப் பகுதியில் தம்முடைய பிரமாண நூலான விவிலியத்தைத் தமிழில் திருப்பித் தந்தனர். ஒரே தெய்வம், உலகப் படைப்பு, மனிதப் படைப்பு, தனிப்பட்ட உயிர்களது சுயசுதந்தரம், சித்தத்தின் சுயாதீனம், ஒவ்வொருவரும் அவரவர் செயல்களுக்கு மட்டும் உத்தரவாதமான பொறுப்பு உள்ளவர் என்ற கருத்தியல்களைச் சிறிதும் விட்டுக் கொடுக்காது

உபதேச உரைகளில் பெய்து வலியுறுத்தினர். பிரபஞ்சம், உலகப் பொருள்கள் மற்றும் மனித அகத்தில் மட்டுப்பட்டு உள்கலவாதபடி, இவைகளுக்கு அப்பால், அருவமான ஒரே கடவுள் ஆகியனவற்றை உறுதிப்படுத்தினர். இவைகளைக் கொண்டு மறுபிறப்பு, வினைத் தொடர்ச்சி ஆகிய கருத்தியல்களை நிராகரித்தனர். அப்போது இங்கு ஆட்சியில் வீறுபெற்று இருந்த இஸ்லாத்தின் வசம் இருந்து கிறித்தவர்களாகிய தம்மாலேயே விடுதலை பெற்றுத் தர இயலும் என்று இங்கு வாழ்ந்த சுதேசி மக்களிடையே உறுதி கூறினர்.

சைவத் துறையினர் சங்கர மதத்தை மாயாவாதம் என்று மறுத்தபடியே, பஞ்சராத்திரம், சமணம், பௌத்தம், உலகாயதம் ஆகிய நெறிகளை நிராகரித்தனர். இஸ்லாம் மற்றும் கிறித்தவ மார்க்கங்களைச் சைவத் துறையினர் பேசவில்லை. எனினும், வீரசைவ நெறியினரான சிவப்பிரகாசர் இயேசு சமயத்தை நிராகரணம் செய்தார்.

**சில விழுமியங்கள்**

அப்போது தமிழகத்தில் மெய்யியல் துறையில் சிவம் / பிரம்மம் முதல் மண் ஈறாக உள்ள முப்பத்து ஆறு தத்துவங்கள் பேசப்பட்டு விளக்கங்கள் விவரிக்கப்படும் போதே, காலம், இடம், பொருள், நிகழ்ச்சிகள், இயக்கம் என்ற சிந்தனை மன்னிலைக்கு எழுந்து கொண்டு இருந்தது. அதே நேரத்தில், அப்போதைய ஐரோப்பிய அறிவியல் வளர்ச்சிப் பின்னணியில் தமது கருத்தமைப்புகளைத் தக அமைத்துக் கொண்டு திருச்சபையினர் உரையாடினர். இந்தப் பின்புலத்தினை முன்னிட்டுக் கொண்டு சிவஞான முனிவரது மாபாடியத்துள் விளக்கமுற்று நிலவும் விழுமியங்களை நோக்குலது உகந்தது.

**ஒன்று**: சிவஞான முனிவர் காலத்தை ஒன்று எனக் கொண்டார். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியன இயற்கையானவை, உண்மை என்றார். மற்றபடி, ஆண்டு, அயனம், மாதம், பட்சம், நாள், நாழிகை, நொடி எனக் கொள்வதானது செயற்கை. அதாவது, நமது வசதி பொருட்டு நாம் ஏற்படுத்திக் கொண்டது என வரைந்தார் (சூத். 2. அதி. 2.) இராபர்ட் டி நொபிலி முடிவு இல்லாக் காலம் என்றார் (தூஷண திக்காரம். 152). இவருக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட சத்திய வேத பரிட்சை என்ற நூலானது பரமபிதாவிற்கு நிகழ்காலம் மட்டமே உண்டு. மற்றபடி, உலக நிலையில் இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம், அப்போது, இப்போது, எப்போது என்ற காலக் குறிப்புச் சொற்கள் நமது புத்தியில் மட்டும் செல்லுபடி ஆகும் என விவரிக்கின்றது. இந்த நூலானது 1725 காலப் பகுதியில் நிலவியதாக அறிய முடிகின்றது. இது, கான்ஸ்டன்டைன் பெஸ்கியும் கைக்கொண்டு இருந்தது ஆகலாம்.

**இரண்டு**: நீருக்குள் நீந்தும் உயிர்களுக்கு நீரானது இடம் அளிக்கின்றது. ஆதலால் நீருள் இடம் உண்டு என்பது சிவஞான முனிவர் கருத்தியல் (சூத். 8, ஆதி. 2). இரண்டு பொருள்கள் ஓரிடத்தில் இருக்காது என்பது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு யவன -- இலியா நகரச் சிந்தனை. இதே கருத்தை இராபர்ட் டிநொபிலியும் சத்திய வேத பரிட்சை நூலாசிரியரும் மேற்கொண்டு இருந்தனர். இது, சிவஞான முனிவரது கருத்துடன் மாறுபடுவது நோக்கத்தக்கது.

**மூன்று**: விடயமாவது எது என்றால் எந்த உணர்வு நிகழும் போது எது விளங்குகின்றதோ அது விடயம். விளங்குதல் விடயத்தின் உரிமை. இது சிவஞான முனிவர் கருத்து (சூத். 2, ஆதி.2). அதாவது புறநிலையில் உள்ள விடயம் உணர்வினில் விளக்கம் கொள்கின்றது. அகத்திற்கு வெளியே உள்ள புறப்பொருளானது அகத்தின் உள்ளே விளங்குகின்றது என்பதுவும், அப்பது விளங்குவது பொருளின்றி உரிமை என்பதுவும் நூதனமானது. உலகியல் பூதப் பொருள்களினது சுதந்தரத்தைச் சிவஞான முனிவர் அங்கீகரிப்பது விழுமியது.

**நான்கு**: அப்போது நம்முன்னே உள்ள உலகம், அதன் பொருள்கள், உயிரினங்கள் இப்படியே முன்னம் ஒரு தொல் பழங்காலத்தில் இருந்தன. சைவ முறையியலின் படி, அவை போய், ஒடுங்கி, மீண்டும் புனர் உற்பவம் ஆகி உள்ளன. இதைச் சிவஞான முனிவர் அறிவார். கூடவே, இந்தப் பிரபஞ்சம் அநாதி. "அம்முதற்கோடி நம்மனோரான் அறிய வாராமையின்" என அவர் உரைத்தார். அம்முதற்கோடி என்று உணர்த்த விழையும் தொல் பழங்காலத் தொடக்க நிலையானது பிரகிருதி, அசுத்தமாயை என்ற அவரது சித்தாந்த சைவத் தத்துவப் புனர் உற்பவ விளக்கங்களுக்கு உட்படாதது. அதோடு வரலாற்றுப் பூர்வமான உற்பவத் தொடக்கத்தை உணர்த்துவது.

ஐந்து: பிரபஞ்சத்தை விளக்கும் முகமாக அவர் சூரிய மையத்தைக் கைக்கொள்ளவில்லை. பூமி மையத்தையே அனுசரிக்கின்றார். எனினும், நவகோள்கள் அந்தரத்து இயங்குவதாக அறிந்து உரைத்தது விழுமியது. என்றாலும், சந்திர, சூரிய கிரகண விபரங்களை அறிந்தார் இல்லை (சூத். 2. அதி. 3, சூத். 6. அதி. 3). திருச்சபையினர் தொலைநோக்கி, கோள்கள், துணைக்கோள்கள் பற்றிப் பேசினர். சத்திய வேத பரிட்சை நூலானது வியாழன் பெருங்கோளை நான்கு துணைக் கோள்கள் சுற்றுவதைத் தொலைநோக்கி வழி கண்டதை எடுத்துச் சொல்கின்றது (பக். 81).

ஆறு: சுட்டி அறியப்படும் உலகு என்பது சைவ மரபு. என்றாலும், காணப்படும் உலகு என்று சிவஞான முனிவர் உரைக்கிறார் (சூத்.

1, உரை). இது Visible World என்ற ஐரோப்பிய மற்றும் திருச்சபையினர் வழக்கு. புறநிலை உலகு -- Objective World -- என்பதாக அல்லாமல், புலன்களால் உணரப்படும் உலகு என்ற முறையில் காணப்படும் உலகு என்ற இந்தத் தொடரானது புலன் உணர்வுகளுக்கு முதல் தகுதி அளிக்கும் போக்கினைச் சார்ந்தது. இது பத்தொன்பதாம் நூற்றாண்டில் (Positivism) நேர்க்காட்சி வாதமாகத் தமிழகத்தில் ஆங்கிலேயரிடையே உலவியது.

ஏழு: சிவஞான முனிவர் வினை குறித்து விளக்கும் போது "வினை சடமாகலின் சென்றணைய மாட்டா. ஆன்மாக்கள் சேதனமாகலின் அவையே வினைப்பயன்களை அறிந்து எடுத்துக் கொண்டு நுகரும். இதற்கு ஒரு முதல்வன் வேண்டா" என்ற ஒரு தடை ஐயத்தைச் சுட்டுகின்றார் (சூத். 2, ஆதி. 2). இந்தத் தடை ஐயமானது கிறித்தவ சார்பானது. ஆத்மாக்கள் புண்ணியம், பாபம் இவைகளில் ஒன்றைத் தேர்வு செய்து அறிந்து எடுக்கும் சுயசுதந்தரம் உடையன என்பது இராபர்ட் டி நொபிலி (ஆத்ம நிர்ணயம். 66), சத்திய வேத பரிட்சை கூற்று (பக். 152). சிவஞான முனிவர் உரைக்கும் அறிந்து எடுத்தலும், திருச்சபையினர் சொல்லும் சுயசுதந்தரமும் ஒன்று. வினைக் கருத்தியலை நிராகரிக்கும் திருச்சபையினர் கருத்தியலைத் தடை ஐயமாகச் சுட்டித் தமது வினைக் கருத்தியலைச் சிவஞான முனிவர் உறுதி செய்கிறார். இந்த விவாதம் அவரது சமகாலத் தன்மை பூண்டது. அவர் சுட்டும் தடை ஐயமானது அவரது உரையின் விழுமியம்.

எட்டு: சரியையாளர் நுண்ணுணர்வு அற்றவர். உருவத் திருமேனியாகிய தூல வடிவத்தைப் பொருள் எனப் பாவித்து வழிபடுவர் (சூத். 8, ஆதி. 1). நுண்ணுணர்வு என்பது தூல வடிவத்தைக் கொண்டு சூக்கும உட்பொருளை உணரும் திறன். இந்த வழிபாடு விக்கிரகாராதனை எனப்படும். அளவும், வடிவமும், உறுப்புகளும் உடையது தூலப் பொருள் என்று கொள்ளப்படும். இது இறைவனாலோ, மனிதனாலோ செய்யப்பட்டவை. இந்தப் பொருள்கள் அவைகளாகவே இருக்கும். அதாவது, அவைகளுக்கு உரிய சுயபண்புகளுடன் நிலவும். இந்தப் பொருள்களது பண்பு இறைவனது பண்புகள் அல்ல என்று திருச்சபையினர் உறுதி பேசினர். மேலும், இறைப் பண்புகள் அவைகளில் குடிகொள்ளாது. ஏனெனில் இறைப் பண்புகள் அளவு அற்றவை. மேலும், இவை அளவு உள்ள பொருள்களில் அடங்க மாட்டா. இறைவனது பண்புகள் வடிவமும், உறுப்பும் பெற்றவை அல்ல. இந்தக் கருத்தியலில் திருச்சபையினர் உறுதியாக நின்றனர் (நித்திய சீவன சல்லாபம். 78, சத்திய வேத பரிட்சை -- தெய்வ பரிட்சை. 10). தொழுவதற்கு ஆவாகனம் புரியப்பட்ட தூல வடிவத்தில் இறைவன் குடிகொண்டு அருளாட்சி புரிகிறார் என்பது சிவஞான முனிவரது சைவம். காணப்படும் பொருளைக் கொண்டு, காணப்படாத சூக்குமப் பொருளை அந்தப் பொருளிலேயே உணர்வது நுண்ணறிவு. இது பக்குவத்தால் விளையும் என்பது சிவஞான முனிவரது உறுதி.

ஒன்பது: பொருட்களுடைய சக்தியின் ஒரு பகுதியே இன்னொரு பொருளாக ஆகின்றது. முழுவதும் ஆவதில்லை. அப்படி முழுவதும் இன்னொன்றாகக் காரியப்பட்டால், சக்தியானது அழியும் பொருளாக, அநித்தியப் பொருளாக ஆகி விடும் (சூத். 2, ஆதி. 4). சிவஞான முனிவரது இந்தக் கருத்தியல் விழுமியது. காரணத்தில் இருந்து உண்டாகும் காரியம் அழியும், எந்த ஒரு காரியப்பொருளும் அநித்தியமானது. இது சித்தாந்த சைவக் கருத்தியல். சிவஞான முனிவர் சக்தி அழிவு அற்றது என்ற கருத்து உடையவர். மேலும், சக்தியே பொருளினது வடிவம் ஆகிறது என்ற கருத்தும் உடையவர். எனினும், சக்தியின் ஒரு பகுதியே இன்னொரு பொருள் ஆகின்றது என்று சித்தாந்த சைவ மரபிற்கு உட்பட்டே உரை காண்கிறார். காண்பதற்கு உரிய எல்லாப் பொருள்களின் குறிப்பிட்ட வடிவத்தில் சக்தியே உள்ளது. சக்தி மாறுதல் அடையும் இயல்பு உடையது. இது நேர்க்காட்சி வாதக் கருத்தியல். இதனுடன் சிவஞான முனிவரது கருத்தியல் ஒத்திசைவு காண்கிறது. பொருள்களின் வடிவம் மட்டுமே காரியப்படும், உள்தன்மை மாறாது என்ற கருத்தியலில் வடிவத்தோடு அழியாத, நித்தியமான சக்தியைச் சாற்றி உரைக்கப்படும் சிவஞான முனிவரது கருத்தியல் விழுமியது.

**ஆதார ஆவணங்கள்**

1. சிவஞான மாபாடியம். சிவஞான முனிவர்.
2. ஆத்தும நிர்ணயம். இராபர்ட் டி நொபிலி (1577 -- 1656) ச. அராசமாணிக்கம், சே.ச. பதிப்பு தூத்துக்குடி. 1967.
3. சத்திய வேத பரிட்சை. கிளெமென்சு பொனாந் துரிசிப்பார் (அனுமதி) சன்மவிராக்கினி மாதா கோயில், புதுவை. 1846.
4. தூஷண திக்காரம். இராபர்ட் டி நொபிலி தூத்துக்குடி. 1964.
5. நித்திய சீவன சல்லாபம். இராபர்ட் டி நொபிலி தூத்துக்குடி. 1964.
6. A Short History of the Madras Diocese (1835 - 1935). S.K.Devasikhamani. B.A. Head Master. Heber High School. Trichinopoly. The Diocesan press. Vepery, Madras. 1935.

●

# எழுத்தாளர் பாமாவின் நூல்கள்



விரைவில்

## நியூ செஞ்சுரியின்

வெளியீடாக...





























# தமிழ்க் குழந்தை இலக்கியப் போக்குகள்

**சுகுமாரன்**

நந்தவனத்தில் நாலாவித வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்குவது போல் உலகக் குழந்தை இலக்கியத்தில் பலவிதப் போக்குகள் (TRENDS) காணப்படுகின்றன. தமிழ்க் குழந்தை இலக்கியத்திலும் அவ்விதப் போக்குகளைக் காண முடிகிறது. அவை எட்டு வகைப்படும்

1. மரபான நாட்டுப்புறப் பாடல்களும் கதைகளும் (Folk)
2. அதீத கற்பனை (Fantasy)
3. எதார்த்தம் (Realism)
4. நீதிநெறி (Moral)
5. அறிவியல் (Science)
6. கல்வி (School Education)
7. சாகசம் (Adventure)
8. நகைச்சுவை (Humour)

முதல் வகையான நாட்டுப்புறப் பாடல்கள் குழந்தையைத் தாலாட்டும் பாடல்களாகவும் சீராட்டும் பாடல்களாகவும் இருக்கின்றன.

'ஆராரோ, ஆரிராரோ...
யாரடிச்சி நீ அழுதே
மாமன் அடிச்சாளோ
மல்லிகைப் பூ செண்டாலே...'

என்பது போன்ற தாலாட்டுப் பாடல்களும்

'காக்கா, காக்கா
கண்ணுக்கு மை கொண்டு வா
குருவி, குருவி
கொண்டைக்கு பூக்கொண்டு வா'

என்பது போன்ற பாடல்களும் தாய்மார்களுக்கு உரியது. என்றாலும் அவை குழந்தை இலக்கியமாகவே கருதப்படுகிறது.

'அப்பா எழுந்திரையா
அரசே எழுந்திரையா
கொக் கொக்கோ என்று
கோழி கூவுது பார்'

என்று குழந்தையை சீராட்டும் பாடலை கவிமணி எழுதியிருக்கிறார்.

'காக்காய்! காக்காய்! பறந்து வர்
கண்ணுக்கு மை கொண்டு வா.
கோழீ! கோழீ! கூவி வா
குழந்தைக்கு பூக்கொண்டு வா'

என்ற கவிமணியின் பாடல் 'காக்கா, காக்கா, கண்ணுக்கு மை கொண்டு வா' என்ற நாட்டுப்புறப் பாடலை ஒத்ததாக உள்ளது.

'ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
சூடாமணியே

**துலக்கமாய் நின்றொளிரும்**
**வாடா மலரே, என்**
**மரகதமே கண் வளராய்'**

என்பது அழ. வள்ளியப்பா எழுதிய தாலாட்டுப் பாடலாகும்.

குழந்தைக் கவிஞர்கள் பலரும் தாலாட்டுப் பாடல்களை எழுதியிருக்கிறார்கள். இன்றும் எழுதுகிறார்கள் என்பதற்குச் சான்று நான் எழுதிய தாலாட்டுப் பாடல் 'தங்கச்சிப் பாப்பா' என்ற சிறுவர் பாடல் நூலில் உள்ளது.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் நாட்டுப்புறக் கதைகள் இன்றும் செல்வாக்குடன் விளங்குகின்றன. 'வாலுப் போச்சு... கத்தி வந்தது' போன்ற கதைகளை குழந்தைகள் விரும்பிக் கேட்கிறார்கள்.

'பாட்டி வடை சுட்ட கதை' ஒரு நாட்டுப்புறக் கதைதான். அக்கதை இன்றும் பல கோணங்களில் சொல்லப்படுகிறது.

'நாட்டு எலியும் நகரத்து எலியும்' என்ற நாட்டுப்புறக் கதையை மறைமலையடிகள் மறுஆக்கம் செய்திருக்கிறார். விஜய பாஸ்கர் விஜய் ஒரு நாட்டுப்புறக் கதையை இணைத்து 'நம்பிக்கை' என்ற ஒரு கதையை எழுதியிருக்கிறார்.

என்றுமே குழந்தைகளுக்கு அதீத கற்பனைக் (ஃபேன்டசி) கதைகள் மிகவும் விருப்பமானவை. அதிசய உலகில் ஆலிஸ், ஹாரிபாட்டர் போன்ற படைப்புகளின் வெற்றி இதை பறைசாற்றுகிறது. முன்பின் அறியாத ஒரு உலகத்திற்கு இக்கதைகள் குழந்தைகளை அழைத்துச் செல்கின்றன.

இன்று புதிதாக எழுத வரும் குழந்தை எழுத்தாளர்கள் 'ஃபேன்டசி' வகைக் கதைகளை அதிகம் எழுத விரும்புகிறார்கள். கற்பனைக் குதிரையைத் தட்டி விடுவது அவர்களுக்கு எளிதாக இருக்கிறதோ, என்னமோ!

குழந்தை இலக்கியத்தில் அதீத கற்பனை வகைக் கதைகளுக்கு நீண்ட பாரம்பரியம் இருக்கிறது, 'கதைக்கு கண்ணு மூக்கு கிடையாது' என்கிற பழமொழி இக் கதைகளின் தன்மையினால்தான் ஏற்பட்டது.

மந்திர மாயாஜால கதைகள், தேவதைக் கதைகள் பகுத்தறிவுக்கு முரணானவை. விலங்குகளும் பறவைகளும் பேசுமா? அவைகளுக்கு மனிதத் தன்மைகள் கிடையாது. நரிக்கு தந்திர அறிவு, காக்கைக்கு ஒற்றுமை, எறும்புக்கு சுறுசுறுப்பு இவற்றை கற்பித்துக் கொண்டிருக்கிறோம். இது அறிவியலுக்கு விரோதமானது என்று எதிர்ப்பு தெரிவிப்பவர்களும் இருக்கிறார்கள்.

உண்மை எது? கற்பனை எது? என்று குழந்தைகளுக்குத் தெரியும். பாட்டி சொல்லும் கதையில் பூனை பேசுவதை ஏற்றுக் கொள்ளும் குழந்தைக்கு உண்மையில் பூனை பேசாது என்பது தெரியும் என்று ஆதரவு தெரிவிப்பவர்கள் வாதிடுகிறார்கள்.

விழியன் எழுதியிருக்கும் 'பென்சில்களின் அட்டகாசம்' ஒரு அதீத கற்பனை வகைக் கதை. அதில் பென்சில்கள் பேசுகின்றன. ஒரே வகுப்பில் படிக்கும் குழந்தைகளின் பென்சில்கள் 'டூர்' செல்கின்றன. ஒரு பென்சில் பொம்மைக் காரை ஓட்டுகிறது. பென்சில்கள் ஆமையுடன் உரையாடுகின்றன. இந்த விசித்திர கற்பனை குழந்தைகளைக் கவருகிறது.

'பஞ்சு மிட்டாய்' பிரபு எழுதிய 'எனக்குப் பிடிச்ச கலரு' சிறுவர் நாவலில் வண்ணங்களின் உலகமான வண்ணுலகத்தின் தலைவன் வானவன் சிவப்பு, நீலம், பச்சை நிறங்களை சிறை வைக்கிறான். வனிதா எனும் சிறுமி வண்ணுலகம் சென்று நிறங்களை விடுதலை செய்கிறான். நிறங்களைப் பற்றிய அறிவியலையும் பிரபு இக்கதையில் இணைத்துள்ளார். அறிவியலுக்கும் அதீத கற்பனைக்கும் இடையே முரண்பாடு இல்லாமல் இப்படைப்பு உள்ளது.

குழந்தைகளின் மனதில் பயத்தையும் மூட நம்பிக்கையையும் விதைக்கும் அதீத கற்பனைக் கதைகள் மீது எழும் விமர்சனத்தைத் தள்ளி விட முடியாது. பேய், பிசாக, அரக்கன், முனிவர் பாத்திரங்களைக் கொண்ட கதைகள் குழந்தைகளின் நனவிலி மனதில் பாதிப்புகளை ஏற்படுத்தி விடும். குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்காத அதீத கற்பனைக் கதைகளை ஏற்றுக் கொள்ளலாம்.

குழந்தைகளின் உணர்ச்சிகள் கூர்மையடைவதற்கும் குடும்ப, சமூக உறவுகளை வளர்ப்பதற்கும் எதார்த்த கதைகளே உதவுகின்றன. மற்றவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் அவை தருகின்றன.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் முன்பு எதார்த்த வகைக் கதைகளே அதிகம் எழுதப்பட்டன. சமூக மாற்றத்தின் காரணமாக பெரியோர் இலக்கியத்திலும் எதார்த்தத்தின் வலு குன்றியது. குழந்தை இலக்கியத்திலும் அது பிரதிபலித்தது.

குழந்தைகளின் மனவுலகை எதார்த்த வகைக் கதைகளின் மூலமே தெரிந்து கொள்கிறோம். குடும்பத்திலும் சமூகத்திலும் அவர்களின் வாழ்க்கை நிலையை அவை பேசுகின்றன.

குழந்தைகள் அனுபவிக்கும் பலவிதக் கொடுமைகளை சமூகத்தின் பார்வைக்குக் கொண்டு




வந்தது எதார்த்த வகைக் கதைகளே. விடுதிகளில் வாழும் குழந்தைகளின் துயரத்தை 'லே மிஸரபிலும்' கறுப்பின குழந்தைகளின் அடிமை நிலையை 'டாம் மாமாவின் குடிசை'யும் போரினால் குழந்தைகள் அகதியாகும் நிலையை 'என் பெயர் சன்மோல்' கதையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன.


தமிழ்க் குழந்தை இலக்கியமும் குழந்தைகளின் மீதான கொடுமைகளை சித்தரித்து உள்ளது. சித்தியின் கொடுமையை பார்த்திபன் எழுதிய 'நொண்டிக் குழந்தை' கதை விவரிக்கிறது. செல்வந்தர்களின் கொடுமையால் குழந்தைகள் அனுபவிக்கும் துன்பங்களைப் பற்றி ஏராளமான கதைகள் வந்துள்ளன. கா.சுந்தரி எழுதிய 'அன்பு ஒன்றுதான்' என்ற கதை புதுமையானது. நாவலாசிரியர் சுஜாதாவின் 'பூக்குட்டி' நாவலும் இதே பிரச்சனையைத் தான் பேசுகிறது. நாவலாசிரியர் அகிலனின் 'கண்ணான கண்ணன்' சாதிக் கொடுமைக்கு குழந்தைகள் உள்ளாவதைப் பற்றிய கதையாகும். மூத்த குழந்தை எழுத்தாளர் ரேவதியின் 'கொடி காட்ட வந்தவன்' சிறுவர் நாவல் தீண்டாமையை உள்ளடக்கமாகக் கொண்டது. அவருடைய 'ராம் - ரஸாக்' நாவல் இந்து - முஸ்லீம் ஒற்றுமையை சிறுவர்களுக்கு எடுத்துக் கூறுகிறது.

எதார்த்த வகைக் கதைகள் குழந்தைகளுக்கிடையே காணப்படும் பாசம், அன்பு, நட்பு, பொறாமை, பணிவு, முயற்சி, பற்று, மூத்தோருக்கு மரியாதை போன்ற உள்ளடக்கத்தில் அதிகம் எழுதப்பட்டுள்ளன. பூவண்ணனின் 'காவேரியின் அன்பு' அழ. வள்ளியப்பாவின் 'நீலா - மாலா', 'நல்ல நண்பர்கள்', தி.கோவிந்தராஜனின் 'கறுப்பு பூனை', ஜி.என். சித்ராவின் 'சித்ராவின் அன்பு', மேகலையின் 'தாராவும் மீராவும்' நல்ல உதாரணங்களாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக எதார்த்த வகைப் போக்கிலான கதைகளை பூதலூர் முத்து, ஆர்.வி.பதி, பூவை அமுதன், மா.கமலவேலன், ஹூர்து எஸ்.ராஜ், கொ.மா. கோதண்டம், அரி மதி தென்னகன், தி. ராஜகோபாலன், சுப்ரபாரதிமணியன், சுகுமாரன் போன்றோர் நிறைய எழுதியிருக்கிறார்கள்.

மா. கமலவேலனின் 'பால புரஸ்கார்' விருது பெற்ற 'அந்தோனியின் ஆட்டுக்குட்டி' இரண்டு சிறுவர்களின் நட்பைப் பற்றிக் கூறும் சிறுவர் நாவலாகும்.

இப்போது உதயசங்கர், விஷ்ணுபுரம் சரவணன், மு.முருகேஷ், கன்னிக்கோவில் ராஜா, பெ.கருணாகரன், கொ.மா.கோ.இளங்கோ



ஆகியோர் எதார்த்த போக்கிலான சிறுவர் கதைகளை எழுதி வருகிறார்கள். விஷ்ணுபுரம் சரவணனின் 'வித்தைக்கார சிறுமி' குழந்தைகளின் பரிவுணர்ச்சியை அழகாகச் சித்தரிக்கிறது. 'பட்டாம் பூச்சி எங்கே?'யும் நல்ல கதை. மு.முருகேஷ் -ன் 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' தொகுப்பில் நிறைய எதார்த்த வகைக் கதைகள் உள்ளன. கொ.மா.கோ. இளங்கோவின் 'கலாவின் நிலா' அழகான கதை.

எதார்த்த வகையிலான கதைகள் எழுத, குழந்தை எழுத்தாளர்களுக்கு அனுபவமும் குழந்தை உலகத்தோடு தொடர்பும் வேண்டும் என்பது முக்கியமானதாக இருக்கிறது.

குழந்தை இலக்கியம் என்றாலே அது அறிவுரை சொல்ல வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களே அதிகம். அதனால் நிறைய நீதிநெறிக் கதைகள், ஆன்மீகக் கதைகள், பாடல்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன, இன்றும் எழுதப்படுகின்றன.

சிறுவர் பாடல்களிலும் கதைகளிலும் நல்ல நீதி இருக்க வேண்டுமென்பதற்காக நீதிநூல்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு திருக்குறள் கதைகள், ஆத்திசூடி கதைகள், புதிய ஆத்திசூடி கதைகள், கொன்றை வேந்தன் கதைகள், நல்வழிக் கதைகள், நன்னெறிக் கதைகள், பொன்மொழிக் கதைகள், பழமொழிக் கதைகள், காந்தி மொழிக் கதைகள், நல்லொழுக்கக் கதைகள், பண்பைப் போற்றும் கதைகள் என்று நூற்றுக்கணக்கான சிறுவர் நூல்கள் தமிழில் வந்துள்ளன.

புராண, இதிகாச, காப்பியக் கதைகள் பக்திநெறி போதனைக் கதைகளாக எழுதப்பட்டுள்ளன. 'பாலர் இராமாயணம்', 'பாலர் மகாபாரதம்', 'பைபிள் கதைகள்' ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை. அரிச்சந்திரன் கதை உண்மைக்கும், சிரவணன் கதை பெற்றோர் மீதான பக்திக்கும் எடுத்துக்காட்டுகளாகக் கூறப்படுகின்றன.

ஓடி விளையாடு பாப்பா, கூடி விளையாடு பாப்பா, காலையில் படி பாப்பா, மாலையில் விளையாடு பாப்பா, பொய் சொல்லாதே பாப்பா, புறஞ் சொல்லாதே பாப்பா என்று பாப்பா பாட்டு முழுவதும் அறிவுரைகளைக் கூறியவர் நம் பாரதிதான். அவரைப் பின்பற்றி அழ.வள்ளியப்பாவும் செல்ல கணபதியும் நிறைய அறிவுரைப் பாடல்களை எழுதியிருக்கிறார்கள்.

'அன்னை, பிதா, குரு, தெய்வம் என்று
அறநூல் உரைக்குதடி பாப்பா
உன் நாடும் உன் மொழிப்பற்றும் -உ ன்
உடல், உயிர் ஆகுமடி பாப்பா'

என்று கவியோகி பேகன் பாடுகிறார்.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் போதனை செய்யும் போக்கு வலுவாகவே இருக்கிறது. கவிஞர் வெற்றிச் செழியன் திருக்குறள் கதைகளை இன்றும் எழுதி வருகிறார்.

அறிவுரை சொல்லுவதற்காக எழுதப்படும் கதையோ, பாடலோ இயல்பாக இருக்க வேண்டும். செயற்கையாக இருக்கக் கூடாது. கதைப் போக்கில் நீதி மறைந்திருக்க வேண்டும். பகுத்தறிவுக்கு முரணான அறிவுரைகள் குழந்தைகளை மூட நம்பிக்கையில் ஆழ்த்தி விடும்.

குழந்தைகள் ஆயிரம் கேள்விகள் கேட்டு அறிவை வளர்த்துக் கொள்ளும் இயல்புடையவர்கள். இயற்கை நிகழ்வுகள், கண்டுபிடிப்புகளைப் பற்றிய அறிவைத் தருவது அறிவியலாகும். அறிவியலைப் பாடமாகப் படிப்பது சுமையாக இருக்கும். அதை சுகமாக மாற்றுவது அறிவியலைப் பற்றிய பாடல்களும் கதைகளுமாகும்.

சோவியத் பதிப்பகங்கள் வெளியிட்ட குழந்தைகளுக்கான அறிவியல் நூல்கள், தமிழில் அறிவியல் நூல்கள் தோன்ற உந்துதலாக இருந்தன. 'நான் ஏன் தந்தையை'ப் போலிருக்கிறேன்' என்ற நூல் ஒரு மைல்கல்.

ஆராய்ச்சி அறிஞர்கள் நா.வானமாமலை, எஸ்.தோதாத்ரி, பெ.தூரன், கல்வி கோபாலகிருஷ்ணன் போன்றோர் காகிதத்தின் கதை, கப்பலின் கதை, மின்சாரத்தின் கதை, பறக்கும் பாப்பா போன்ற

நூல்களை எழுதினார். பெ.தூரன் தொகுத்த 'குழந்தைகள் கலைக்களஞ்சியம்' தமிழில் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கிறது. ரேவதி, லூர்து எஸ்.ராஜ் போன்றோர் அறிவியல் உண்மைகளைக் கதை போல் எழுதியுள்ளார்கள்.

**'தம்பி தங்கை விஞ்ஞானத்தில்**
**தளரக் கூடாது - சிறு**
**செப்புத் தண்ணீர் போல அறிவு**
**தேங்கக் கூடாது'**

என்று சுப்பு ஆறுமுகம் 'வேண்டும் விஞ்ஞானம்' பாடலில் வலியுறுத்துகிறார்.

வானொலி, வானூர்தி, கைப்பேசி, கணிப்பெரி, தொலைக்காட்சி போன்ற அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்தும் பாடல்களை குழந்தைக் கவிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். செம்பை சேவியர் அறிவியல் அறிஞர்களைப் பற்றிய பாடல்களை எழுதியிருக்கிறார்.

'பால புரஸ்கார்' விருது பெற்ற கிருங்கை சேதுபதி எழுதிய 'டிரிங்... டிரிங்' என்ற தொலைபேசியைப் பற்றிய பாடலின் இறுதி வரிகளில்,

**'உன்னைப்போல உதவி செய்ய**
**நான் பழகுவேன்.**
**உலகமெல்லாம் இணைத்து வைத்து**
**உண்மை பேசுவேன்'**

என்று அறிவியலோடு அறவுரையையும் சேர்த்து எழுதியுள்ளது புதுமையானது.

அதேபோல் குறிஞ்சிச் செல்வர் கொ. மா.கோதண்டம் தொலைக்காட்சியை 'சூனியக்காரக் கிழவி' என்று விமர்சனத்தோடு கூறி,

**'எதிலும் முதன்மை என்றுயர**
**ஏற்புடைய அறிவியல் பயன் பெறுக**
**சதி செய்யும் கிழவியாம் டி.வி. தனை**
**தம்பி தங்கைகளே பார்க்காதீர்'**

என்று எச்சரிக்கை செய்கிறார்.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் அறிவியல் போக்கினை வளர்ப்பதற்காக யூமா.வாசுகியும், உதயசங்கரும் மலையாளத்திலிருந்து ஏராளமான அறிவியல் கதை நூல்களை மொழி பெயர்த்துத் தருகின்றனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் 'துளிர்' இதழ் மூலமாகவும் பதிப்பக வெளியீடுகள் மூலமாகவும் அறிவியல் அறிவையும் பார்வையையும் தரும் படைப்புகளைத் தந்துள்ளனர்.

குழந்தை எழுத்தாளர் கன்னிக்கோவில் ராஜா 'பூமிக்கு இறங்கி வந்த குட்டி மேகம்' என்ற சுற்றுச் சூழல் பற்றிய கதைத் தொகுப்பைத் தந்துள்ளார். அவருடைய 'நிலாவை எச்சரித்த கரடிக் குட்டி' நூலில் சிறுவருக்கான அறிவியல் கதைகள் உள்ளன.

அறிவியல் போக்கிலான படைப்புகள் கல்வி சார்ந்த இலக்கியத்திற்கும் (School oriented literature) வளம் சேர்க்கிறது.

கல்வி சார்ந்த குழந்தை இலக்கிய போக்கு ஆங்கிலத்தோடு ஒப்பிடும்போது தமிழில் குறைவு. கல்வி சார்ந்த தலைப்புகளில் தகவல்களைத் திரட்டி வயதிற்கு ஏற்ப எழுதப்படும் நூல்கள் ஆங்கிலத்தில் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன.

பள்ளிக்குப் போ, பாடம் படி என்று அறிவுரை கூறும் பாடல்களோடு இப்போக்கு தமிழில் திருப்தி அடைந்து விடுகிறதோ, என்னமோ!

நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் என்ற தலைப்பு வரிசையில் அறிவியல் அறிஞர்கள், தலைவர்கள், சுதந்தரப் போராட்ட வீரர்கள் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்களை பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டுள்ளது. கிழக்கு பதிப்பகத்தில் சிறுவர் பிரிவும் இத்தகைய நூல்களை வெளியிட்டுள்ளது. நேஷனல் புக் டிரஸ்ட், சாகித்ய அகாடமியும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் பற்றிய நூல்களை சிறுவர்களுக்காக வெளியிட்டுள்ளன.

அழ. வள்ளியப்பா 'பெரியோர் வாழ்விலே' என்று இரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். 'குழந்தைகள் உலகம்' ஏ.ஜி.எஸ். மணியின் 'எடிசனின் கதை' எளிமையான ஒன்று. நான்



எழுதிய 'தந்தை பெரியாரின் கதை' இத்துறையில் வரவேற்பைப் பெற்ற நூல். ரா.அ.பத்மநாபனின் 'சித்திர பாரதி' கல்வி நோக்கத்திற்கு உதவக் கூடியது.

மொழியையும் எண்களையும் கற்பிக்க உதவும் விதத்தில் பாடல்களைக் குழந்தைக் கவிஞர்கள் எழுதியிருக்கிறார்கள்.

**'அன்னம் நீரில் நீந்தும்**
**ஆடு துள்ளி ஓடும்**
**இறகு காற்றில் பறக்கும்**
**ஈக்கள் எங்கும் திரியும்'**

என்ற அகர வரிசைப் பாடலை 'மழலையர் மணிப்பாடல்கள்' என்ற நூலில் கவிஞர் வெற்றிச் செழியன் தந்துள்ளார்.

தமிழில் சாகசப் போக்கிலான படைப்புகளில் மொழிபெயர்ப்புகளே அதிகம். டாம்சாயரின் சாகசங்கள், கலிவரின் பயணங்கள், ராபின்சன் குரூசோ, வில்லியம் டெல், அலாவுதீனும் அற்புத விளக்கும், சிந்துபாத் போன்ற கதைகள் குழந்தைகளை ஈர்த்துள்ளன.

1950 - 60 களில் வாண்டு மாமா, முல்லை தங்கராசன், புவிவேந்தன் போன்றோர் சாகசக் கதைகளை குழந்தைகளுக்கு எழுதினார். அம்புலி மாமாவில் வெளிவந்த விக்கிரமாதித்தன் கதை குழந்தைகளைக் கவர்ந்தது.

ஆங்கில சாகச மன்னன் ஜேம்ஸ் பான்ட்டைப் போல் தமிழ்வாணன் கல்கண்டு இதழில் சங்கர்லால் துப்பறியும் கதைகளை எழுதினார்.

கூத்தபிரான், ஜெ.எத்திராஜன் எழுதிய ராஜா ராணி கதைகளில் இளவரசர்களின் வீர தீர பராக்கிரமங்களை குழந்தைகள் விரும்பினர்.

சாகசக் கதைகளுக்கு ஆங்கில மொழி பெயப்புக் கதைகளை நம்பியிருக்கும் நிலையே இன்றும் தொடர்கிறது. புதையல் தீவு, கருணைத் தீவு போன்ற கடற் பயண சாகசங்களைக் கூறும் நாவல்களை சுகுமாரன் மொழி பெயர்த்துத் தந்துள்ளார்.

நாவலாசிரியர் ஜெயமோகன் 'பனி மனிதன்' எனும் சிறுவர் நாவலில் பனி மனிதனை தேடிச் செல்லும் சாகசத்தை எழுதியுள்ளார். சாகசக் கதைகள் எழுதப்படுவது தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் அரிதாக இருக்கிறது என்பதே உண்மை.

நகைச்சுவைக் கதைகளை விரும்பாதவர்கள் இருக்க முடியாது. குழந்தைகளும் நகைச்சுவைக் கதைகளை விரும்புகிறார்கள். தெனாலி ராமன், மரியாதை ராமன், பீர்பால், முல்லா கதைகள் குழந்தைகளைக் குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கின்றன. வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்த குருவும் சீடர்களும்' கதையை எத்தனை முறை கேட்டாலும் படித்தாலும் குழந்தைகள் சலிப்படைவதில்லை.

நகைச்சுவைப் போக்கிலான பாடல்களும் கதைகளும் குழந்தைகளை சிரிக்கவும் வைக்கிறது; சிந்திக்கவும் வைக்கிறது.

பல நாடோடி கதைகள் நகைச்சுவையிலிருந்து படைப்பவையே. 'வாலுப் போச்சு... கத்தி வந்தது', 'கல்செக்கு குட்டிப் போடுமா?' போன்ற கதைகளைக் குழந்தைகள் ரசிக்கிறார்கள்.

விகடகவி தெனாலிராமனைப் போலவே சுப்பாண்டியின் ஒவ்வொரு செயலும் குழந்தைகளுக்கு சிரிப்பை மூட்டுகிறது.

குழந்தை எழுத்தாளர்கள் பலரும் நகைச்சுவைக் கதைகளை எழுதியிருக்கிறார்கள். ப.பரிதி பாண்டியன் எழுதிய 'கருப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு' கதையில் காக்கைகள் நிறத்தையும் குரலையும் மாற்றிக் கொள்ள கடவுளிடம் வரம் பெற்று திண்டாடுவது சிரிப்பை வரவழைக்கிறது.

பூவண்ணன், பேராசிரியர் எ.சோதி, நெ.சி. தெய்வசிகாமணி, கூத்தபிரான், மாயன் என்று பலரும் நகைச்சுவைப் போக்கிலான சிறுகதைகளை எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் நாவல்கள் மிகுதியாக தோன்றவில்லை. தமிழ்வாணனின் 'சிரிக்காதே', தங்கமணியின் குண்டுமணி, ஆர்.வி.யின் 'அசட்டுப் பிச்சு', பூவண்ணனின் 'பரமார்த்த சீடர்கள்' போன்ற சில படைப்புகளே உள்ளன.

நாடோடி நகைச்சுவைக் கதைகள் போலவே நகைச்சுவை நாடோடிப் பாடல்களும் இருக்கின்றன.

**'திருப்பதிக்கு போய் வந்தேன்**
**நாராயணா**
**திருமொட்டை அடித்து வந்தேன்**
**நாராயணா'**

என்ற பாடல் தொடங்கும் போதே சிரிப்பை வரவழைத்து விடுகிறது.

குழந்தைக் கவிஞர்களான அழ.வள்ளியப்பா, செல்லகணபதி, பெ.தூரன், ம.இலெ.தங்கப்பா போன்றோர் நகைச்சுவைப் பாடல்களுக்கு முக்கியத்துவம் தந்துள்ளனர்.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தை நந்தவனமாக மாற்றியிருப்பது பல்வேறு போக்குகளைக் கொண்ட படைப்புகளே. எல்லா வகைப் போக்குகளிலும் எழுதிப் பார்க்கவே குழந்தை எழுத்தாளர்கள் விரும்புகிறார்கள் என்பதே உண்மை. ●

# பேரா. முனைவர் சு.சண்முகசுந்தரத்தின் நாட்டுப்புறவியல் நூல்கள்






நாட்டுப்புறவியல் [1975]
நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு [1976]
நாட்டுப்புற இலக்கிய வரலாறு [1976]
தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் [1980]
நாட்டுப்புறவியல் சிந்தனைகள் [1981]
தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் [1982]
தமிழக நாட்டுப்புறக் கதைகள் [1982]
நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாயப்பார்வை [1985]
நாட்டுப்புற இலக்கியத்தில் உளவியல் [1990]
சுடலைமாடன் வழிபாடு [1993]
அகத்தாரும் புறத்தாரும் [2000]
ஐந்து கதைப்பாடல்கள் [2000]
முருகன் வழிபாடு [2003]
நாலுவகைப் பூவெடுத்து [2004]
நாட்டுப்புறத்தெய்வங்கள் களஞ்சியம் [2009]
காலந்தோறும் கண்ணகி கதைகள் [2010]
நெல்லை நாட்டுப்புறத் தெய்வங்கள் [2011]
திராவிடத் தெய்வம் கண்ணகி [2011]
வள்ளியூர் வரலாறு [2012]
நான்கு கதைப்பாடல்கள் [2012]
தமிழ்ப் பழமொழிகள் [2012]
நெல்லை நாட்டுப்புறக் கலைகள் [2015]
ஐந்து மறவர் கதைப்பாடல்கள் [2019]




தொடர்புக்கு
044 - 23726882
98404 80232

16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com



# கடலோர மக்களின் கலைக்குரல்

இரா. காமராசு

“எப்பவுமே ஒரு சமூகத்தை, இன்னொரு சமூகம் ஒடுக்கணும்னு நினைக்கும்போது,
ஒடுங்கின சமூகத்தில் ஒரு கலக உணர்ச்சி உண்டாகும்.
இந்தக் கலக உணர்ச்சி கலையா வெளிப்படலாம்.
சமூக புரட்சியாளர்கள் உருவாகலாம்.
சிலர் கலைஞராகவும் வரலாம்.
நான் இந்தத் துறைக்கு வர அதுதான் காரணம்.”

“இந்தப் பாலைவனத்திலே நீரூற்று ஏது பாட்டா?” ‘அனந்தசயனம் காலனி’ சிறுகதையில் மீரான் எழுதிய உயிர் அடி இது. ஒரு வகையில் தோப்பில் முகமது மீரானின் எழுத்து வாழ்வின் குறியீடாகவும் இதனைக் கருதலாம். அவர் மாயிருளின் சிறுபெரி; பாலைவனச் சுனை; கசப்பு மருந்தில் கலந்திட்ட தேன். கோட்டான்களூடே பயணித்த ஒற்றைக்குயில்.

தமிழ் நவீன இலக்கியம் தொண்ணூறுகளில் பெரும் பாய்ச்சலைக் கண்டது. யதார்த்த வாழ்வும், எழுத்தும் புதிய அச்சில் அரங்கேறிய தருணம். வட்டார வாழ்க்கையைப் பிரதிபலித்த காலம் போய், நிலவியல் சார்ந்து திணை வாழ்வின் தொடர்ச்சியை தமிழ்ப்புனை கதையுலகு தழுவிய பொழுது அது. திணைக்குடிகள், சேவைக்குடிகள், புதுக்குடிகள்... என மக்கள் திரள் தம் அடையாளங்களைப் பண்பாட்டு வெளியில் தேடத் தொடங்கியிருந்தன.

இத்தருணத்தில்தான் தோப்பில் முகமது மீரானின் எழுத்துப் பிரவேசம் நிகழ்கிறது. அவர் அறுபதுகளில் எழுதத் தொடங்கி, சில படைப்புகளை எழுதி முடித்துவிட்டபோதும், எழுபதுகளில் இதழ்களில் தொடர் வந்த போதும் 1988-இல் வெளிவந்த ‘ஒரு கடலோர கிராமத்தின் கதை’ நாவல்தான் அவரின் வெகுஜன அறிமுகமாக அமைகின்றது.

“நம்முடைய மொழியில் எழுத வேண்டும். அதுவும் என் கிராமத்து மொழியில் எழுத வேண்டும் என்ற சிந்தனை மட்டும்தான் வாசிப்பு மூலம் எனக்குள் ஏற்படுத்திய ஒரு தாக்கம். எங்க ஊர் மனிதர்களுடைய வாழ்க்கையைச் சொல்ல இங்கு யாருமில்லை என்று எனக்குத் தோன்றியது அல்லாமல் இலக்கியத்தின் அகராதிகளைக் கற்றுக் கொண்ட ஒரு எழுத்தாளன் அல்ல நான்” என்பார் மீரான். அந்த வகையில் அதுவரையில் தமிழ் இலக்கிய உலகம் அறிந்திடாத ஒரு பகுதி மக்களை, நிலத்தை, மொழியை, பண்பாட்டை தன் எழுத்துக்களால் உயிர்ப்பித்தவராக அவர் திகழ்கிறார்.

முகமது மீரான் 26-09-1944-இல் குமரி மாவட்டம் நாகர்கோவில் அருகில் தேங்காய்ப்பட்டினம் எனும் கடற்கரையோர ஊரில் பிறந்தார். அவருடன் பிறந்தவர்கள் 13 பேர். அவரின் தந்தை அப்துல்காதர். தாயார் பாத்திமா. இயல்பிலேயே வணிகக் குடும்பம் அவருடையது. தந்தையார் அப்துல்காதர் கருவாடு ஏற்றுமதியில் புகழ்பெற்றவர். இலங்கை, சிங்கப்பூர் நாடுகளுக்கு ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். சுறாமீன் சிறகுகளுக்கும், ஆமை ஓட்டிலிருந்து தயாரிக்கப்படும் ‘அலுகு’ என்ற பண்டத்திற்கும் ஏகக்கிராக்கி உண்டு. இவற்றை ஏற்றுமதி செய்ததால் ஓரளவு நல்ல வருமானம் இருந்தது.

மீரானின் தந்தை இறுக்கமான இஸ்லாமிய நடைமுறைகளை ஏற்றவராக இருந்தார். தேங்காய்ப்பட்டினம் இஸ்லாமியர்கள் ஓரளவு செல்வந்தர்களாக இருந்தனர். மதம் மாறாத, அரபு தேசத்திலிருந்து புலம்பெயர்ந்த சுத்த சுயம்புவான இஸ்லாமியர்களாகவும் தங்களைக் கருதிக் கொண்டனர். எனவே நாகரிக ஆடை அணிதல், தலைமுடி வளர்த்தல், அரபி தவிர்த்து ஏனைய மொழிகளைப் படித்தல் ஆகியவற்றை மத விரோதமாகக் கருதினர்.

‘ஒரு கடலோர கிராமத்தின் கதை’யில் ஓரிடத்தில் இடம் பெறும் உரையாடல்:

“இங்க இங்கிலீசுப் பள்ளிக்கூடம் வரப்போவுது தெரியுமா?”

“தெரியாது,”

“அப்படின்னா தெரிஞ்சுக்கோ.”

“இங்கிலீசு பள்ளிக்கூடம் வந்தா என்னா, வரட்டுமே.”

“உனக்குத் தலைக்கு வட்டா? வந்தா என்னான்னா, வந்தா புள்ளைகளெல்லாம் காபிரா மரிக்கும்.”

“அப்படி மரிச்சாலும் பரவாயில்லை. பள்ளிக்கூடம் வந்து புள்ளியோ ரெண்டு எழுத்து படிக்கட்டு. நம்மளெல்லாம் குருடன். அவங்க கண்ணாவது தொறக்கட்டு.”

“உனக்கு நல்ல பைத்தியம் புடிச்சிருக்கு; தப்பளம் வைக்கணும்.”

இது ஆங்கிலத்துக்கு எதிரானது மட்டுமல்ல. கல்வியே தேவை இல்லை. தமிழும், மலையாளமும் கூடத் தேவை இல்லை. கரும்பலகையில் ‘அரபி’யைத் தவிர வேறொரு மொழிக்கு இடமில்லை என்கிற நிலை. இச்சூழலில் தான் மீரான் வளர்ந்தார். தந்தை தவிர்த்த போதும் இவர் படித்தார்.

தேங்காய்ப்பட்டினம் ‘அம்சி’ பள்ளியில் பயின்றார். பின்னர் இளங்கலை மலையாளம், பொருளியல் பயில்கிறார். தந்தை இறப்புக்குப்பின் கல்வி முற்றுப் பெறுகிறது. என்றாலும் மீரான் சிறு பருவம் முதலே வாசிப்பதில் தீவிர ஆர்வம் கொண்டவராக விளங்கினார். ஊருக்கு அருகில் உள்ள ‘பைங்குளம்’ என்னுமிடத்தில் நாயர்கள் நடத்திய ஒரு நூலகம் இருந்தது. அது பெரும்பாலும் பூட்டியே இருக்குமாம். அங்கு தேங்காய்ப்பட்டினம் இஸ்லாமியர்களுக்கு நூல்கள் கொடுக்க மாட்டார்களாம். ஆனால் மீரான் நூலகரோடு தொடர்பு வைத்து, நூல்களை வாங்கி வாசிப்பாராம். வைக்கம் முகமது பஷீர், தகழி சிவசங்கரன்பிள்ளை, கேசவ தேவ் ஆகியோர் நூல்களை அங்குதான் படித்திருக்கிறார்.

மீரானுக்கு சிறுவயதில் அவருடைய அப்பா ஏராளம் கதை சொல்லியிருக்கிறார். மார்க்கத்தில் முழு ஈடுபாடுள்ள அவர், இஸ்லாமிய நடைமுறை வாழ்வில் மதத் தொடர்புள்ளவர்கள் செய்யும் கேடுகளையும், போலித்தனங்களையும் சுட்டிக்காட்டி உள்ளார். வித விதமான கதைகள், நிகழ்வுகளை அபிநயங்களோடு நடித்துக் காட்டுவாராம். அவர் தந்தையின் கதை கேட்க வீடே குழுமி இருக்குமாம். இளம் வயதில் கேட்ட இந்தக் கதைகள்தான் பிற்காலத்தில் அவரின் எழுத்துகளுக்குப் பின்புலமாக அமைந்தது எனலாம்.

மலையாள மொழியும் அதன் இலக்கியங்களும் மீரானின் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. “வைக்கம் முகம்மது பஷீரின் படைப்புகளை முழுமையாக வாசித்துள்ளேன். முஸ்லீம் சமூகத்தின் வாழ்க்கையைக் குறித்து அவர் எழுதியதைக் கண்டு நாமும் ஏன் அப்படி எழுதக் கூடாது என்ற எண்ணம் என்னுள் தோன்றியது. தேங்காய்ப்பட்டினமும் அந்த ஊர் முஸ்லீமின் மொழியும் பஷீருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அப்போது தமிழில் பஷீரை

அதிகம் யாரும் வாசித்திருக்க வாய்ப்பில்லை.'' என தன் படைப்புக்கு உந்துதல் தந்ததாக பஷீரை நினைவூட்டுவார்.

மேலும், மீரான் குடும்பம் ஓரளவு வசதிதான் என்றாலும் அவர்களுக்கு மேல்நிலையில் இருந்து அதிகாரம் செலுத்திய வர்களுக்கும் இவர்கள் குடும்பத்துக்கும் தொடர்ந்து சிக்கல் இருந்தது. அவரின் தந்தையார் காலத்திலும், பின் தமையனார் காலத்திலும் இது தொடர்ந்தது. ஊர் விலக்கம், கொடுக்கல் வாங்கல் இல்லாத நிலை... என்றெல்லாம் உருவானது.

தன்னுடைய நேர்காணல் ஒன்றில் இதனைப் பதிவு செய்கின்றார். பள்ளிவாசலின் முன் இருக்கின்ற கருமை நிறம் கொண்ட கல்லின் மீது அமர்ந்து கொண்டு 'ஊர் விலக்கு' குறித்து விளக்கி அறிவிப்பார்களாம்.

வசதி படைத்தவர்கள், அதிகாரம் படைத்தவர்கள் உறவுகளே ஆனாலும் எழை எளியோரை வாட்டி, வதக்கிச் சிறுமைப்படுத்துவதை மீரானால் ஏற்க முடியவில்லை. சிறு வயது முதல் தந்தையார் சொன்ன நிகழ்வுகளும், தான் நேரில் பார்த்து, அனுபவித்த நேர்ச்சிகளும் மீரானுக்குள் ஒருவிதத் தாக்கத்தை ஏற்படுத்தின எனலாம். இதனை, ''எங்களுக்கு எப்போதும் உயர் வர்க்கத்தினரால் துன்பம் ஏற்பட்டது. தற்காப்புக்காகப் போராட வேண்டிய சூழ்நிலையில் மூன்று தலைமுறை எங்களுக்குள்ளே இருந்து கொண்டே இருக்குது. இதற்குள் இருந்து ஒரு கலகக்காரன் உருவாகத்தான் செய்வான். நான் ரொம்ப அடிமட்டத்துல இல்லைன்னாலும் அடிமட்ட மக்களின் அனுபவம் எனக்கு கிடைச்சுப் போச்சு. எனக்குள் ஒரு கலக மனோபாவம் இருந்தது. அநீதிக்கு எதிரா போராடணும்னு ஒரு சுயமே உருவாச்சிது. எப்பவுமே ஒரு சமூகத்தை, இன்னொரு சமூகம் ஒடுக்கணும்னு நினைக்கும்போது, ஒடுங்கின சமூகத்தில் ஒரு கலக உணர்ச்சி உண்டாகும். இந்தக் கலக உணர்ச்சி கலையா வெளிப்படலாம். சமூக புரட்சியாளர்கள் உருவாகலாம். சிலர் கலைஞராகவும் வரலாம். நான் இந்தத் துறைக்கு வர அதுதான் காரணம்.'' என மிகச் சரியாகவே பதிவு செய்கிறார்.

எனவேதான் மீரானின் படைப்புகள் யாவும் இஸ்லாம் சமூகம் குறித்த விமரிசனங்களாக அமைகின்றன. மட்டுமல்ல இவர் படைப்புகளின் அடிநாதமாக விளங்குபவை சுய விமர்சனங்கள். இறுகியே, மூடுண்ட சமூகத்தின் ஊடாகப் பயணித்து அதற்குள் ஒரு ஜனநாயக வெளியை உருவாக்கிட மீரான் தன் படைப்புகள் வழியே இறுதி வரைப் போராடினார். அவர் முழு இஸ்லாமியர்; மார்க்கத்தில் முழு நம்பிக்கைக் கொண்டவர். தான் சார்ந்த மக்கள் திரளை நோக்கியே பேசினார். தன் மீதும், எழுத்தின் மீதும் ஐயங்கள் எழுப்பப்பட்ட பொழுது மீரான் உரத்துச் சொன்னார்.

''எனக்கு கடவுள் பக்தி உண்டு. ஆனால் அதை நிறுவனமா ஏத்துக்க மாட்டேன். ஒரு நாளைக்கு ஐந்துமுறை தொழுகை பண்ணுவேன். குரான்ல சொன்னதையும் நபிகள் சொன்னதையும் நான் எதிர்க்க மாட்டேன். மாற்றும் சொல்லமாட்டேன். சமுதாயத்தை மட்டும் விமர்சனம் பண்ணுவேன். இஸ்லாம் ஒரு நிறுவனம் அல்ல. மார்க்ஸிசம்கிற கோட்பாடு எப்படி நிறுவனம் ஆச்சுதோ அப்படியே இஸ்லாமும் புரோகிதர்களால் நிறுவனமாகி சீரழிஞ் சிடுச்சி.''

மீரானின் மொத்தப் படைப்புகளும் இந்தத் தளத்தில்தான் இயங்கின. அதே வேளை அவர் தனக்கென தனித்தொரு மொழிதல் முறையை, எடுத்துரைப்பை, புலப்பாட்டு முறைமையை உருவாக்கிக் கொண்டது அவரின் கலையியல் வெளிப்பாட்டு வெற்றியாகும்.

மீரானின் குடும்பத்தவர்கள் ஒரு சுடுகாட்டின் அருகே வசித்தார்கள். அது பனைத் தோப்பாக இருந்தது. அப்பகுதியின் அடையாளமே 'தோப்பு'தான். எனவே முகமது மீரான் 'தோப்பில்' ஆனார். தொடக்கத்தில் மலையாளத்தில் எழுதினார். பின் மலையாளத்தில் எழுதி தமிழுக்கு மொழி பெயர்த்தார். இவற்றில் உயிர்ப்பு இல்லை. எனவே அவருக்கு உவப்பு இல்லை. பின்னர் தான் கேட்ட, பேசிய, புழங்கிய தமிழ் மொழியில் எழுதத் தொடங்கினார். அது மீரானின் மொழியாக, மீரானின் நடையாக அமைந்தது. மீரானின் ஊரில் ஐந்து விதமான தமிழ் இருந்ததாக அவர் கூறுவார். மீனவர்கள் பேசுவது, முஸ்லீம்கள் பேசுவது, நாடார்கள் பேசுவது, நாயர்கள் பேசுவது, பறையர் - புலையர் பேசுவது. இந்தப் பேச்சுகளைக் கூர்ந்து கவனித்தார். இவர் படைப்புகளில் இவற்றைத் துல்லியமாகப் பதிவு செய்தார். கி.ரா.வின் எழுத்துக்கள் மீது ஈர்ப்பும், அவரோடு தொடர்பும் கொண்டவர் மீரான். எனவே, அவரின் படைப்புகளில் வட்டார வழக்கும், நாட்டுப்புறவியல் கூறுகளும் பேரளவில் இடம் பெற்றன. இஸ்லாமிய இனவரைவியல், நாட்டார் இஸ்லாம் என்ற வகைபாடுகளுக்கு சான்று பகருவனவாக அவர்தம் படைப்புகள் அமைந்தன.

மீரானின் முதல் நாவலாக அறியப்படும் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை,' 'முஸ்லீம்

முரசு' இதழில் தொடராக வெளிவந்தது. பின்னர் 1988 இல் புத்தகமாக வெளிவந்தது. இது தேங்காய்ப்பட்டினம் என்ற தமிழகத் தென்கோடி ஊரினை மையமிட்டு இஸ்லாமிய சமூகத்தின் இருப்பினை வரலாற்று நோக்கில் புலப்படுத்திற்று. 'கி.பி. 9 -ஆம் நூற்றாண்டில் தொடங்கும் சரித்திரம்' சித்திரமாக விரிகிறது. மூன்று தலைமுறையினரின் வாழ்வை, ஏற்ற இறக்கங்களை, மசூதியை, ஊரின் தெருக்களை, விழாக்களை இந்நாவல் விவரிக்கிறது. தங்களை நேரடி 'சுயம்பு' இஸ்லாமியர்களாக நம்பும் மக்கள், மக்களை மதத்தின் பேரால், சடங்குகள், நம்பிக்கைகள் பேரால் ஆட்டிப் படைக்கும் மதகுருமார்கள், ஒரே இனத்தைச் சேர்ந்திருந்தாலும் பொருளாதார நிலையால் மேல், கீழ் ஆகி அதிகார நுகத்தடியில் அல்லல்படும் மக்கள்... இந்நாவலில் உயிர்ப்புடன் உலா வந்தார்கள். பல நிகழ்வுகள். பல வித மாந்தர்கள், கதைகளின் தொகுப்பாக இது அமைந்தது. ஏறக்குறைய தன் தந்தையார் கூறிய கதைகளின் கூட்டு மொத்தமாக இதனை மீரான் குறிப்பிடுவார். கதைக் கருவும், மொழியும், வழங்கல் முறையும் தமிழ் இலக்கியப் பரப்பில் புதுமையாக அமைந்தது. அதுவே மீரானை தனித்துவமாகக் கவனிக்கவும் செய்தது. நெய்தல் நிலத்தின் வாழ்க்கையை நவீன இலக்கியத்தில் இது பதிந்தது.



மீரானின் இரண்டாவது நாவல் 'துறைமுகம்'. இது விடுதலைக்கு முந்தைய ஆண்டுகளில் நடைபெறுகின்றது. கடலோர கிராமத்துக் கதையின் தொடர்ச்சி என்பது போல அடுத்தடுத்தத் தலைமுறைகள் இதில் அங்கம் வகிக்கின்றன. ஏழை, எளிய மீனவர்கள், மீன் வியாபாரிகளுக்கும், தூத்துக்குடி இடைத்தரகர்களுக்கும் இடையே அல்லல்படுவது நாவலாக விரிகிறது. இலங்கையில் இருக்கும் மொத்த வியாபாரிகள். அவர்களும் இங்கிருந்து சென்ற முஸ்லீம்கள் தான். அவர்கள் ஊரில் மசூதி கட்டப் பணம் தருகிறார்கள். இந்த முதலாளிகளின் பிடிக்குள்ளும், இடைத் தரகர்களின் கரங்களுக்குள்ளும் அடித்தள மீனவ இஸ்லாமியர் சிக்கித் தவிக்கிறார்கள். இந்நாவலிலும் இஸ்லாமிய மார்க்கம் இறுகி மூட நம்பிக்கைகள் கோலோச்சுவது சுட்டப் பெறுகின்றது. பள்ளிக்கு படிக்கச் செல்வது தவறு என கடலோரக் கிராமத்து கதைச் சுட்டும். இதிலோ ஒரு இஸ்லாமிய சிறுவன் பள்ளிக்கு படிக்கச் செல்வதால் அவன் குடும்பம் ஊர் விலக்கம் செய்யப்படுகிறது. மேலும் போலி மதகுரு ஊருக்கு வந்து, தன்னைக் கடவுளின் தூதன் எனக் கூறி சித்து வேலைகளில் ஈடுபடுகிறார். ஓர் நிகழ்வு. கிராமத்து மக்களின் நோய் நொடிகளையும், பில்லி சூனியங்களையும் விரட்டும் அபூர்வ சக்தி அவரிடம் இருப்பதாக நம்புகிறார்கள். தினமும் அவரைக் காண பெருங்கூட்டம். குவளையில் தண்ணீரோடு அவரைக் காண்கிறார்கள். அவரோ அந்தக் குவளையில் எச்சில் துப்புவார். இதுதான் ஆசி வழங்குதல். மக்கள் அந்த எச்சில் கலந்த தண்ணீரை அருந்தினால் அவர்களின் பிணி விலகும். அது மட்டுமல்ல; அவர் ஊரில் தங்கி உள்ள நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலிருந்து ஒரு பெண்ணை அவரிடம் அனுப்பி வைக்க வேண்டும். இப்படியாக மோசடிகள் மிகுந்த 'மதப்போர்வை' மீரானால் தோலுரித்துக் காட்டப்படுகின்றது. இஸ்லாமிய வணிகம், பொருளாதாரம் சார்ந்த நிறைய பதிவுகள் இந்நாவலில் உண்டு.

தமிழ்ச் சூழலில் எப்படி கடுகினும் சிறிய விசயங்கள் சாதி, மதக் கலவரங்களை உருவாக்குகின்றன என்பதை மீரானின் 'கூனன் தோப்பு' நாவல் அற்புதமாகப் பேசுகின்றது. ஒரு ஆற்றின் இருகரைகளில் வாழும் இருவேறு சமூகங்கள். ஒரு கோழி திருடப்படுவதில் தொடங்குகிறது மோதல். தனி மனிதப் பிழைகள் பெரிதாக்கப்பட்டு இரண்டு சமூகங்களின், ஊர்களின், மதங்களின் மோதலாக மாறுகின்றது. தனிமனித கௌரவம் - மத கௌரவமாக இடம் மரி பழிவாங்கலாக, மதப் பெருமிதமாக, மதச் சிறுமைகளாக, மேல், கீழ் குணங்களாக அடையாளப்பட்டு அப்பாவி மக்கள் நாசமாகவும், வீடுகள், சொத்துக்கள் சூறையாடவும் காரணமாகின்றது. இன்றும் சிவகங்கை கச்சநத்தம் தொடங்கி அரியலூர் பொன்பரப்பி வரை நீடிக்கும்

இத்தகு 'சிறிய' விசயங்களில் தொடங்கி மனித உரிமைப் பறிப்புகளாக உருக்கொள்வதை மீரான் அன்றே நுட்பமாக தன் படைப்பில் பதிவு செய்திருக்கிறார்.

மீரானுக்கு அவர் எழுத்தின் வீச்சை முன்வைத்த நாவலாக 'சாய்வு நாற்காலி'யைச் சொல்லலாம். பாவுரீன் பிள்ளை எனும் ஒரு முஸ்லீம் வீரனின் ஆளுமையை அலங்காரமாகச் சொல்லும் நாவல். டச்சுக்காரர்களின் தாக்குதலின் போது திருவிதாங்கூர் மகாராஜா மார்த்தாண்ட வர்மாவைக் காப்பாற்றியவர் அவர். மகாராஜா தன் உயிர் காத்த வீரனுக்கு ஒரு ஊர், வாள், பெரிய பங்களா ஆகியவற்றை மகிழ்ச்சிப் பரிசாக வழங்குகிறார். அந்த வீரனின் வாரிசுகள் வழியே சுமார் இரு நூறாண்டுகளில் நாவல் நிகழ்கிறது. வழக்கம் போல் இந்நாவலிலும் மதப்பிடிப்பு, மூட நம்பிக்கைகள், பழமை மீதான மோகம் போன்றவை இடம் பெறுகின்றன. இந்நாவலில் இடம் பெறும் முஸ்தபாகன்னு கொடூரமான முரடன். எதிரிகளுக்கு மட்டுமல்ல சுற்றத்துக்கும் கேடு நினைப்பவன். சுயநலக்கேட்டின் உச்சம். தன்னையே உலகமாகப் பார்க்கும் சுகவீனம். இந்நாவலில் தொன்மங்கள், மாந்திரீக யதார்த்த ஜாலங்கள் பல இடம் பெறுகின்றன. நாவலே வாழ்வைப் பற்றிய ஒரு விவரணையாகவும், விசாரணையாகவும் அமைகின்றது. பழமையும் புதுமையும் முட்டி மோதி தம்முன் பொருதி நிற்கின்றன.

மீரானின் 'அஞ்சுவண்ணம் தெரு' ஐந்து இஸ்லாமிய நெசவாளர்கள் குடியிருக்கும் தெருவினை உள்ளும் புறமுமாக விவரிக்கும் நாவல். பல்வேறு வகைப்பட்ட மனிதர்களின் வாழ்க்கைக் கோலங்களை ஓர் ஓவியம் போல மீரான் வரைந்து காட்டிவிடுகின்றார்.

நாவல்களில் இஸ்லாமிய சமுதாயத்தின் இருட்டு உலகை தன் கைவிளக்கு ஒளியால் பொது வெளிக்கு கைபிடித்து வரும் விதமாக மீரானின் படைப்புத்தளம் இயங்குகிறது எனலாம். சுய விமர்சனம், எள்ளல் ஆகியவை இவற்றின் பொதுக்குணங்களாக விளங்குகின்றன. ஊர்கள், தெருக்கள், பழக்க வழக்கங்கள், வழக்காறுகள், தொன்மங்கள், புழங்கு பொருட்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை படைப்பின் ஊடே பதிவு செய்வதன் வாயிலாக மீரான் தேர்ந்த நாட்டுப்புறக் கதைசொல்லி ஆகத் திகழ்கிறார்.

மீரானின் நாவல்கள் வரலாற்றையும், பண்பாட்டையும் பற்றிய அக்கறையைத் தர, அவரின் சிறுகதைகளோ மனித உணர்வு மீட்டல்களாக அமையக் காணலாம். நெய்தல் வாழ்வின் சிறு துளியாய் 'கடல்', தாய்மை அன்பின் உச்சமாக 'உம்மா', மனிதத் தன்மையின் அளவுகோலாக 'அனந்தசயனம் காலனி', சவப்பெட்டி வண்டியில் உயிர் துளிர்க்கும் 'மரணத்தின் மீது உருளும் சக்கரம்'... இப்படி ஏராளம் கதைகள். அன்புக்கு ஏங்கும் மனிதர்கள். வாஞ்சைக்கு தவம் இருக்கும் மனிதர்கள். முதுமை சுமந்து நிற்கும் மனிதர்கள். வலிகளையே வாழ்வாய், வடுவாய் சுமக்கும் பெண்கள்... இவர்கள்தான் மீரானின் சிறகதை மாந்தர்கள். மனித உறவுகளை, மனித நேயத்தை, உள்ள ஈரத்தை அவர்தம் எழுதுகோலுக்கு மையாக்கினார் என்றால் மிகை இல்லை.

மீரான் வெளியுலகிற்கு அதிகம் அறிமுகம் ஆகாத நிலையில் அவரின் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை'க்கு மாநில அளவில் சிறந்த நாவல் என விருது வழங்கிச் சிறப்பித்த தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தை அவர் நன்றியோடு நினைவு கூர்வார். இலக்கியச் சிந்தனை, அமுதன் அடிகள், லில்லி தேவசிகாமணி, த.மு.எ.க.ச, தமிழ்நாடு அரசு விருதுகளைப் பெற்றார். சாய்வு நாற்காலி நாவலுக்காக (1997) சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார். நேஷனல் புக் டிரஸ்ட் - ஆதான் பிரதான் திட்டத்தில் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கும் சிறப்பினைப் பெற்றார். தன் எழுத்துக்கான போதிய அங்கீகாரத்தைப் பெற்ற மகிழ்ச்சி அவருக்கு எப்போதும் உண்டு.

மீரான் வியாபாரத்தில் கடை ஆளாகத் தொடங்கி முதலாளி வரை பல்வேறு நிலைகளைக் கண்டவர். பொருளாதார ஏற்ற இறக்கங்களில் பழக்கப்பட்டவர். உறவுகளின் சிக்கல்களை அனுபவித்தவர். ஆனால் இவை எதிலும் தன்னை இழக்கவில்லை. மனிதர்கள் மீதான அக்கறையை இழக்கவில்லை. அன்பொழுக சிநேகித்தார். படைப்பை, படைப்பாளிகளைக் கொண்டாடினார். சக கிருதயர்களை மெச்சினார். புன்னகை சிந்தும் வசீகர முகமும், இனிய சங்கீதக் குரலும் அவரோடு பழகியவர்களை எப்போதும் பற்றிப் படர்ந்து வரும் வல்லமைமிக்கவை.

தோப்பில் முகமது மீரான் நவீன தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமிய வாழ்வையும் பண்பாட்டையும் அவற்றின் வீரியம் குறையாமல் கலை அழகியல் தன்மைகளோடு பதிவு செய்தவர். தமிழ் யதார்த்த எழுத்து மரபின் தொடர் கன்னியாக விளங்கியவர். நெய்தல் திணைக்குடி இலக்கியத்திற்கு புதிய அணிகலன்களை வழங்கியவர் என மதிப்பிடலாம்.

●

மக்களுக்காகச் சிந்திப்போம்

# மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்

# ஈரோடு புத்தகத் திருவிழா – 2019

பண்பாட்டுப் புரட்சியில் 15 ஆம் ஆண்டு

## தமிழ் கூறும் நல்லுலகீரே வருக

**15 ஆம் ஆண்டாக நடைபெறவுள்ள 2019 ஆம் ஆண்டின்**
**ஈரோடு புத்தகத் திருவிழா வருகிற ஆகஸ்ட் 2 ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை**
**12 நாட்கள் நடைபெறவுள்ளது**

**இடம் :** வ.உ.சி. பூங்கா ஈரோடு

**நேரம் :** தொடக்க நாளில்.. மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரை
மற்ற அனைத்து நாட்களிலும் காலை 11 மணி முதல் இரவு 9.30 மணி வரை

- உலகப் புகழ்மிக்க தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தக நிறுவனங்கள் பங்கேற்பு
- தினசரி மாலை 6 மணிக்கு சிறப்புமிக்க சொற்பொழிவாளர்களின் கருத்தாழமிக்க உரைகள்
- உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் நூல்களை மட்டும் உள்ளடக்கிய ' உலகத் தமிழர் படைப்பரங்கம் '. இவ்வரங்கில் அயல்நாட்டுத் தமிழ் ஆளுமைகளின் சிறப்புரைகள்... கலந்துரையாடல்கள்...
- சிறப்பு ஏற்பாடுகளுடன் கூடிய தனி அரங்கத்தில் புதிய நூல்கள் வெளியீட்டு நிகழ்வுகள்
- ஈரோடு மாவட்டப் படைப்பாளர்களின் நூல்கள் அடங்கிய சிறப்பரங்கம்
- படைப்பாளர்களைச் சந்திக்க வாய்ப்பளிக்கும் ' படைப்பாளர் மேடை '
- 40 வயதிற்குட்பட்ட புதியன கண்டுபிடித்த இளம் விஞ்ஞானி ஒருவருக்கு ரூ 1,00,000 பொற்கிழியுடன் கூடிய ' அறிவியல் மேதை ஜி.டி நாயுடு விருது '
- பள்ளி மாணவர்களுக்கு புத்தக உண்டியல் சேமிப்பு திட்டம்... ரூ 250/– க்கும் மேலான தொகைக்கு புத்தகம் வாங்கும் மாணவர்களுக்கு ' புத்தக ஆர்வலர் ' என்ற பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல்...


இன்னும்... இன்னும்... பல சிறப்பம்சங்களையும் தனித்தன்மைகளையும் கொண்ட ஈரோடு புத்தகத்திருவிழாவிற்கு தமிழ்கூறும் நல்லுலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வருகைதந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

## அறிவுச் செல்வத்தை அள்ளிச் செல்ல வாரீர் ! வாரீர் !

தொடர்புக்கு : த.ஸ்டாலின் குணசேகரன்
நிறுவனர் மற்றும் தலைவர்
மக்கள் சிந்தனைப் பேரவை
A,47 சம்பத் நகர், ஈரோடு – 638 011
தொலைபேசி 0424 -2269186

email : info@makkalsinthanaiperavai.org
stalingunasekaran.t@gmail.com
website : www.makkalsinthanaiperavai.org
www.erodebookfestival.org
www.tstalingunasekaran.com
makkalsinthanaiperavaierode

# எஸ்.வி.ராஜதுரையின் இரண்டு புதிய நூல்கள்




எஸ்.வி.ராஜதுரை தமது கட்டுரைகளினூடாக இந்திய, அல்ஜீரிய, ஆங்கில, பிரெஞ்சு, இத்தாலிய, தென்னமெரிக்க கலை இலக்கியப் படைப்பாளிகளுடன் நம்மை உறவாட வைக்கிறார். இந்தோனீஷாவின் மாபெரும் இலக்கியப் படைப்பாளி ப்ரமோதியா ஆனந்த தூர் பற்றிய விரிவான அறிமுகம் தமிழ் வாசகர்களுக்கு முதன்முறையாகக் கிடைக்கச் செய்கிறார். மதவாத, சாதிய, பாலின, வர்க்கப் பிரச்சினைகளை மார்க்ஸிய - அம்பேத்கரிய - பெரியாரிய வெளிச்சத்தில் ஆழமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறார். காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வைப் பெரியார் தமக்கே உரிய அசாதாரணமான மனிதநேய, சாதி - எதிர்ப்புக் கண்ணோட்டத்திலிருந்து விளக்கியதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

கார்ல் மார்க்ஸின் அழகியல், அறவியல், அரசியல் பரிமாணங்களைக் கூறும் கட்டுரைகள்; உலகப் புகழ்பெற்ற இலக்கிய ஆளுமைகளான ஆன்டன் செகோவ், ஆல்பெர் காம்யு, எலினா ஃபெரரான்ட்டெ, மேரி ஷெல்லி, பெர்டோல்ட் ஃப்ரெஹ்ட், உம்பர்த்தொ எக்கோ, அரபு இலக்கிய உலகில் தனி முத்திரை பதித்துள்ள அஹ்மெத் ஸாடவி ஆகியோரின் படைப்புகளைப் பற்றிய விரிவான மதிப்பீடுகள்; 'சர்வதேச' கீதத்தின் வரலாற்றுப் பின்னணி; இனவாதத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் வர்க்கச் சுரண்டலுக்கும் எதிராகப் போராடிய ஆளுமைகளைப் பற்றிய குறிப்புகள்; பெரியாரின் மேதைமை குறித்த தகவல்கள் என இருபது கட்டுரைகள்.



# இந்தியா - முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்...


**சி.ஆர். ரவீந்திரன்**

> “இந்திய நாட்டின் வளங்களைக் கொண்டே இந்தியாவை வெற்றி கொள்ளமுடியும் என்ற அடிப்படையில் அதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.”

மண்வளமும், மனித வளமும், நீர்வளமும் நிறைந்த இந்தியா அடிப்படையிலேயே பன்முகத் தன்மை கொண்டு விரிந்து பரந்து கிடக்கும் ஒரு மாபெரும் நிலம். அதனால், பலவகையான தாக்கங்களின் தொடர்ச்சியான விளைவுகளால் இந்தியா வளர்ந்து கொண்டே இருக்கிறது. நீண்ட வரலாற்றுப் பெருமையை உடைய இந்தியாவை, ‘பாரத பூமி! பழம் பெரும் பூமி! நீர் அதன் புதல்வர்! இந்நினைவகற்றாதீர்!’ என்று பெருமிதத்தோடு பாரதியார் அடையாளம் காட்டினார்!

வரலாற்றினூடாக, மாறுபட்டும், வேறுபட்டும், முரண்பட்டும் இயங்கி வந்த இந்தியா படிப்படியாக ஒருங்கிணைக்கப்பட்டு வளர்ந்து வருவதை வரலாற்று அறிஞர்கள் இனம் காட்டி வருகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தகுந்த ஒருவராக விளங்கிவருபவர் “பிபின் சந்திரா” நன்கு அறியப்பட்ட நவீன கால இந்திய வரலாற்றின் தலைசிறந்த ஆசிரியர். சிறந்த மார்க்சிய வரலாற்றியலாளர். அவர் இந்தியாவின் நவீன கால வரலாற்றை தலைவர்களின் வரலாறாக அணுகவில்லை. வரலாற்றை உருமாற்றும் சக்திகளான மக்கள் இயக்கங்களின் மீது கவனத்தைக் குவித்துள்ளார்.

இந்தியா காலனியாக அடிமைப்படுத்தப் பட்டதற்கான சமூக, பொருளாதார காரணிகள், காலனியாட்சியாளர்களின் கொள்ளைகளுக்கான கொள்கைகள் அவற்றின் எதிர்விளைவுகள், இந்திய சமூகத்தின் மறுமலர்ச்சி, தேசிய இயக்கத்தின் எழுச்சி, மக்கள் இயக்கங்களின் போக்குகள்



ஆகியவற்றின் உலக வரலாற்றுப் போக்கின் பகைப் புலத்தில் பிபின் சந்திரா விவரித்துள்ளார். அதன் சாராம்சம் இது.

'நவீன கால இந்தியா'வை முகலாயப் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து இவர் இனம் காட்டுகிறார். "இரண்டு நூற்றாண்டுகாலம் சம காலத்தவர்களால் பெருமை கொள்ளத்தக்க வகையில் ஆட்சிபுரிந்து வந்த மாபெரும் முகலாயப் பேரரசு பதினெட்டாம் நூற்றாண்டின் முதல் பாதியில் பலவீனமடைந்து வீழ்ச்சியுற்றது. முகலாயப் பேரரசர்கள் தமது ஆட்சியதிகாரத்தையும், மாட்சிமையையும் இழந்து நின்றனர். டெல்லியை ஒட்டிச் சில சதுரமைல் சுற்றளவுள்ளதாகப் பேரரசு சுருங்கியது. இறுதியில் 1803 -ஆம் ஆண்டு டெல்லியையும் பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றின. மகத்துவம் வாய்ந்த முகலாயப் பேரரசு அன்னிய ஆட்சியாளர்களிடம் ஓய்வூதியம் பெறும் நிலைக்குத் தரம் தாழ்ந்து போனது.

"ஔரங்கசீப்பின் நீண்டகால, செல்வாக்கு மிக்க ஆட்சிக் கட்டத்தில் பேரரசின் ஒற்றுமையும், ஸ்திரத் தன்மையும் பாதிப்புக்கு உள்ளானது. அவரது கொள்கைகள் பலவும் பாதகம் இழைக்கக் கூடியவையாக இருந்தபோதிலும் 1707 - ஆம் ஆண்டு அவர் மறைந்தபோது, முகலாயப் பேரரசு திறம்பட்ட நிலையிலும், அவர்களது இராணுவம் பலம் வாய்ந்ததாகவும் இருந்து வந்தது. முகலாய வம்சத்தின் செல்வாக்கு நாட்டில் தொடர்ந்தது."

ஔரங்கசீப்புக்குப்பின் அவருடைய மூன்று மகன்களும் அரசைக் கைப்பற்றப் போராடினார்கள். அவர்களுக்குள் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டார்கள் அதில் 65 வயதான பகதூர்ஷா வெற்றிபெற்றார். அவருடைய ஆட்சிக்காலத்தில் ரஜபுத்திர அரசர்களுடனும், மராத்திய அரசர்களுடனும் அவர் தொடர்ந்து போராடி அவர்களைக் கட்டுப்படுத்த முயன்றார்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் அரசு நிர்வாகம் தொடர்ந்து சீர்குலைந்தது. பேரரசைச் சூழ்ந்திருந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தார். எதிர்பாராத விதத்தில் அவர் 1712 - ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். அதனால், பேரரசு மீண்டும் உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொண்டது. அவரைத் தொடர்ந்து அவருடைய மகன்களில் ஒருவரான ஜஹாந்தர் ஷா உள்நாட்டுப்போரில் வெற்றி பெற்றார்.

"ஜஹாந்தர் ஷா ஒரு பலவீனமான, முழுமையாக சுகபோகத்தில் சீரழிந்த இளவரசராவார். சிறந்த பண்புகள், கௌரவம், ஒழுக்கம் எதுவும் அவரிடத்தில் இல்லை." அதனால், அவருடைய ஆட்சி வலிமை இழந்தது.

அதன் விளைவாக, இந்திய வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரிய மாற்றத்தை பிபின் சந்திரா வருத்தத்துடன் குறிப்பிடுகிறார். "மறுபுறத்தில் ஒரு மேலான பொருளாதார முறையாக வளர்ச்சியுற்ற அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் மிகவும் முன்னேறிய சமுதாயங்களிலிருந்து கிடைத்து வந்த ஆதாயத்தோடு ஐரோப்பியர்கள் இந்தியாவின் கதவைத் தட்டி வந்தனர். தமது சொந்த நலன்களுக்காக, நூற்றாண்டுக் கணக்கில் தொன்மை வாய்ந்த நாட்டின் சமூகப் பொருளாதார அரசியல் அமைப்பைக் காலனியக் கட்டமைப்பினால் மாற்றியமைத்து அந்நியர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தது தான் முகலாயப் பேரரசு வீழ்ச்சியின் சோக முடிவு."

அந்த மாற்றங்கள் எவ்வாறெல்லாம் நிகழ்ந்தன என்பதை விரிவான, தெளிவான ஆதாரங்களுடன் ஆழமான ஆய்வுடனும் கண்டறிதலுடனும் தொடர்ந்து பிபின் சந்திரா விருப்பு வெறுப்பில்லாமல் அறிவியல் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் விளக்குகிறார்.

தொடர்ந்து ஆங்கில காலனிய ஆதிக்க அரசு இந்திய வாழ்க்கையை எந்த வகையெல்லாம் தனக்கு உகந்த வகையில் இந்தியச் சமுதாய வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தது என்பதை விரிவாக விளக்குகிறார்.

"பதினெட்டாம் நூற்றாண்டு இந்தியா சமூக பொருளாதார பண்பாட்டு ரீதியாகப் போதுமான அளவுக்கு முன்னேறவில்லை 'ஆனாலும்,' பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், நூறாண்டுக் கால பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததைக் காட்டிலும் சிறந்து விளங்கியது."

அன்றைய இந்தியா மேற்கத்திய நாடுகளின் தீவிர வளர்ச்சியுடன் எவ்விதத் தொடர்புமின்றி மரபு வழிப்பட்டதாகத் தொடர்ந்தது. இலக்கியம், மதம், தத்துவம், தர்க்கம் சார்ந்த அறிவே போதிக்கப்பட்டன. இயற்பியல், இயற்கை அறிவியல் தொழில் நுட்பம், புவியியல் போன்றவை பயிற்றுவிக்கப்படவில்லை. சமூகத்திற்கு அவசியமான புள்ளி விவரங்களும் பகுத்தறிவும் சார்ந்த அம்சங்களும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அனைத்துத் துறைகளிலும், சுய சிந்தனைகள் தடை செய்யப்பட்டிருந்தன. தொன்மையான பயிற்சி முறையையே சார்ந்திருந்தனர்.

“பிற்காலத்தில், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்ததைக் காட்டிலும் இக்காலத்தில் சராசரி கல்வியறிவு ஒன்றும் குறைவாக இல்லை என்பது ஆர்வமூட்டக் கூடிய ஒன்றாகும். படிப்பது, எழுதுவது, கணக்குப் போடுவது போன்ற கல்விச் செல்வத்தில் எந்தவொரு ஐரோப்பிய தேச மக்களைக் காட்டிலும் இந்தியர்கள் பொதுவாக மேலானவர்களாக இருந்தனர் என 1813 - ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் எழுதினார். நவீன தரத்துக்கு ஏற்ப போதுமான அளவுக்கு ஆரம்பக் கல்வியின் தரம் இல்லை எனினும், அக்காலத்திய குறைந்தபட்சத் தேவைக்கேற்ப இருந்தது. அப்பொழுது ஆசிரியர்களுக்கு மிகுந்த மரியாதை இருந்து வந்தது, அக்காலக் கல்வி முறையின் மிகவும் மகிழ்ச்சியான அம்சமாக இருந்தது. மேட்டுக்குடியைச் சார்ந்த சில பெண்கள் விதிவிலக்காக இருப்பினும், பொதுவாக பெண்களுக்குக் கல்வி என்பது அபூர்வமான ஒன்றாகவே இருந்து வந்தது, மிக மோசமான அம்சமாகும்.”


அதைத் தொடர்ந்து, மக்களின், கல்வி, சமூகப் பண்பாடு, வாழ்க்கை முறை போன்றவைகளின் அன்றைய நிலைமைகள் எப்படியெல்லாம் மாறுதலுக்கு உள்ளாகி வளர்ச்சி பெற்றன என்பதைப் படிப்படியாக விளக்கிக் கூறுகிறார் வரலாற்றாசிரியர். மேலும் அன்றைய பொருளாதார நிலைமை வணிக வளர்ச்சியின் விளைவாக அடிப்படையிலேயே மாறுதலுக்கு உள்ளாகிய முறைகளையும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

“மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் வளம் அடிமை வர்த்தகத்தையும், அடிமைகள் வேலை செய்த தோட்டங்களின் இலாபத்தின் மீது அமைந்திருந்தது. அடிமை வர்த்தகத்தினாலும், தோட்டங்களில் அடிமைகளின் உழைப்பினாலும் கிடைத்த 18, 19 - ஆம் நூற்றாண்டுகளில் தொழில் புரட்சிக்கு நிதியுதவி அளித்த மூலதனத்தை உருவாக்க ஓரளவுக்கு உதவியது. பிற்காலத்தில் இந்தியாவிலிருந்து சுரண்டிச் செல்லப்பட்ட செல்வமும் இதே போன்ற பாத்திரத்தை வகுக்கிறது.

கிழக்கிந்தியாவில் பிரிட்டிஷ் கம்பெனி 1633 -ஆம் ஆண்டு ஒரிசாவில் தனது முதலாவது வணிகத் தளத்தைத் தொடங்கியது. அடுத்து 1651 - ஆம் ஆண்டு ஹூக்ளியில் வர்த்தகம் மேற்கொள்ள அதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அது பீகாரிலும், வங்காளத்திலும் பாட்னா, பலாசூர், டாக்கா ஆகிய இடங்களில் வணிகத் தளத்தைத் தொடங்கியது. வங்காளத்திலும் அது தனது தனிப்பட்ட குடியேற்றத்தை உருவாக்க முயன்றது. அது இந்தியாவில் அரசியல் அதிகாரத்தை நிலை நாட்டக் கனவு கண்டது.

இந்திய நாட்டின் வளங்களைக் கொண்டே இந்தியாவை வெற்றி கொள்ளமுடியும் என்ற அடிப்படையில் அதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பான நிகழ்ச்சிப் போக்குகளைத் தகுந்த புள்ளி விவரங்களுடன் விறுவிறுப்பாகச் சித்தரிக்கிறார் அவர். தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் - பிரெஞ்சுப் போர் பற்றிய விவரங்களை முன்வைத்து பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் எவ்வாறு படிப்படியாக நிறுவப்பட்டது என்பதையும் அடையாளப்படுத்துகிறார். தொடர்ந்து பிரிட்டிஷார் எவ்வாறு வங்காளத்தைக் கைப்பற்றினார்கள் என்பதையும் விவரிக்கிறார். அடுத்து, ஆங்கிலேய ஆட்சி 1818 - 57 - ஆம் ஆண்டுகளுக்கிடையே வலுப்பெற்றதை விவரிக்கிறார். அந்தக் காலகட்டத்தில் இந்தியா முழுவதையும் வெற்றி கொள்ளும் இலட்சியத்தை ஆங்கிலேயர்கள் பூர்த்தி செய்தனர். சிந்துவும், பஞ்சாபும் வெற்றி கொள்ளப்பட்டது. அவாத், மத்திய மாநிலங்கள் மற்றும் ஏராளமான பல சிற்றரசுகளும் இணைத்துக் கொள்ளப்பட்டன.

இறக்குமதி - ஏற்றுமதி வணிகத்தில் இந்தியாவின் இறக்குமதியைக் காட்டிலும், ஏற்றுமதியில் இருந்த கூடுதலின் வடிவிலும்




நவீன கால இந்தியா | பிபன் சந்திரா
தமிழில்: இரா. சிசுபாலன். |
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட் |
விலை: ரூ. 390/-

சுரண்டல் நிகழ்ந்து கொண்டே இருந்தது. குறிப்பாக, 1757 - க்கும் 1857 - க்கும் இடைப்பட்ட காலத்தில் பெருமளவில் சுரண்டல் நடைபெற்றது. இதை ஆங்கிலேய அதிகாரிகள் பரவலாக ஏற்றுக் கொள்கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலம் வரை இந்தியாவில் போக்குவரத்து பின் தங்கிய நிலையிலேயே இருந்தது. மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளுமே போக்குவரத்துச் சாதனங்களாக இருந்தன. பிரிட்டனில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை இந்தியாவிற்குள் பரவலாகக் கொண்டு செல்லவும், இங்கிருந்து மூலப் பொருட்களை பிரிட்டிஷ் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லவும் மலிவான எளிய போக்குவரத்து முறை அவசியம் என்பதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கொணர்ந்தனர். ஆறுகளில் நீராவிக் கப்பல்களை இயக்கினர். சாலைகளை மேம்படுத்தினர். கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு அகலப் பாதைகள் அமைக்கும் பணி 1839 - இல் துவங்கி 1850 -இல் முடிவுற்றது. நாட்டின் முக்கிய நகரங்கள், துறைமுகங்கள், சந்தைகளை இணைக்கும் இணைப்புச் சாலைகளுக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன ஆனால், இரயில்வே வந்ததைத் தொடர்ந்துதான் போக்குவரத்தில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட்டது. ஜான் ஸ்டீபன் வடிவமைத்த முதலாவது இரயில் எஞ்சின் 1814 - ஆம் ஆண்டு இயக்கப்பட்டது. தொடர்ந்து 1830 - 40ஆம் ஆண்டுகளில் இரயில்வே துறையில் தீவிர வளர்ச்சி ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியாவிற்குள்ளும் அதனை வேகமாக உருவாக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் மூலம் நாட்டின் தொலைதூரப் பிரதேசங்களிலும் பரந்த சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கும். இந்தியாவிலிருந்து மூலப் பொருட்களையும், உணவுப் பண்டங்களையும் தமது எந்திரங்களுக்கும், அவற்றை இயக்குபவர்களுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும் என பிரிட்டிஷ் முதலாளிகள் எண்ணினர். இந்திய இரயில்வே வளர்ச்சியில் தமது உபரி மூலதனத்தை முதலீடு செய்வது பாதுகாப்பானதாக இருக்கும் என பிரிட்டிஷ் வங்கியாளர்களும், முதலீட்டாளர்களும் நினைத்தனர். அதன் விளைவாக இந்தியப் பொருளூற்பத்தியும், வணிகமும் மாறுதல்களுக்கு உள்ளாகித் தொடர்ந்து வளர்ந்தன.

மேலும், திறம்பட்ட நவீன தபால் தந்தி முறையையும் பிரிட்டன் நிர்மாணித்தது. கல்கத்தாவிலிருந்து ஆக்ராவுக்கு 1853 - ஆம் ஆண்டு முதலாவது தந்தி வசதி ஏற்படுத்தப்பட்டது. டல்ஹௌசி பிரபு தபால்தலைகளை அறிமுகப்படுத்தினார்.

நிலச்சீர்திருத்த அடிப்படையில் பழைய வகையிலான உற்பத்தி உறவுகளையும், உற்பத்தி முறைகளையும், மாற்றியமைத்து நிலவரித் திட்டத்தை அறிமுகப்படுத்தி படிப்படியாக மாற்றி அமைத்தனர். அந்நிய ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இருந்தவர்களுக்கு அரசாங்கம் நிலம் வழங்கியதன் மூலம் இந்தியா முழுமையிலும் மற்றொரு வகையான நிலப்பிரபுக்கள் தோற்றுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலும் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படுவதற்கு இட்டுச் சென்றது. ஆனால், ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை அது எப்போதும் மறக்கவில்லை. இந்தியாவில் பிரிட்டிஷ் நிர்வாகம், சிவில் நிர்வாகம், படைகள், காவல்துறை ஆகிய துறைகளின் மீது அமைந்திருந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும், ஆங்கில ஆட்சியைத் தொடர்வதும் பிரிட்டிஷ் இந்திய நிர்வாகத்தின் முதன்மையான நோக்கம்.

இந்திய சமுதாயத்தைச் சீர்திருத்த பிரிட்டிசார் மேற்கொண்ட முயற்சி ஒட்டு மொத்தத்தில் மிகவும் குறைவே. அதனால், அதற்கு மிகக்குறைவான பலனே கிட்டியது. கணவன் இறந்துவிட்டால் அவனது உடலுடன் விதவை மனைவியையும் சேர்த்து எரிக்க வேண்டும் என்ற சதிக் கொடுமைக்கு வில்லியம் பெண்டிங் பிரபு 1819ஆம் ஆண்டு முற்றுப் புள்ளி வைத்தது அவர்களது மிகப் பெரிய சாதனையாகும்.

நவீனக் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் பிரிட்டிஷார் பெருமளவில் வெற்றி பெற்றனர். அதன் அடிப்படையான நோக்கம் குறித்து அன்றைய வைஸ்ராயாக இருந்த மெக்காலே பிரபு தன்னுடைய கருத்தைத் தெளிவாக விளக்கிக் கூறினார். ''நமக்கும் நாம் ஆட்சிபுரிந்து வரக்கூடிய இலட்சோப இலட்சம் மக்களுக்கும் இடையில் தொடர்பு வர்க்கம் ஒன்றை உருவாக்க நம்மால் இயன்ற அனைத்தையும் நாம் மேற்கொள்ள வேண்டும். 'அந்த வர்க்கம் இரத்தத்தாலும், நிறத்தாலும் இந்தியர்களாகவும், அனுபவம், கருத்து, நெறிமுறை அறிவு ஆகியவற்றில் ஆங்கிலேயர்களாகவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்'' அவருடைய நோக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியாவில் அறிவொளியும், பண்பாடும் வியக்கத் தகுந்த அளவில்

வளர்ச்சி பெற்றன. அத்தகைய எழுச்சியின் மையப் புள்ளியாக ராஜாராம் மோகன்ராய் விளங்கினார். நவீன இந்தியாவின் முதலாவது மாபெரும் தலைவராக அவர் மிகச் சரியாகக் கருதப்பட்டார். அவரைத் தொடர்ந்து 1809 - ஆம் ஆண்டு பிறந்த இளம் ஆங்கிலோ இந்தியரான ஹென்றி விவின் தோரோஜியோ இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் விழிப்புணர்வைத் தோற்றுவித்தார். தோரோஜியோ நவீன இந்தியாவின் முதலாவது தேசியக் கவிஞராக விளங்கினார்.

பத்திரிகைகள், பிரசுரங்கள், பொதுநல அமைப்புக்கள் மூலமாக மக்களுக்கு சமூக, பொருளாதார அரசியல் பிரச்சினைகளில் போதிப்பது என்ற ராம் மோகன்ராயின் மரபை தோரோஜியன்கள் முன்னெடுத்துச் சென்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளின் முக்கியத்துவம் அவர்களுடைய எண்ணிக்கையால் அல்ல. அவர்கள் அத்தகைய போக்கைத் தொடங்கி வைத்தவர்கள் என்பதில்தான் அடங்கியுள்ளது. புதிய இந்தியாவைப் படைப்பதில் அவர்களது சிந்தனைக்கும் செயலுக்கும் உறுதியான பங்கு உண்டு.

அதைத் தொடர்ந்து 1857ஆம் ஆண்டு வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் வெடித்த மகத்தான புரட்சி பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறியும் அளவுக்கு ஆற்றல் கொண்டதாக இருந்தது. அது சிப்பாய்க் கலகமாக அல்லது கம்பெனியின் படையில் இந்தியப் படை வீரர்கள் செய்த கலகமாகத் தொடங்கியது. ஆனால், விரைவில் அது நாடு முழுமையிலும் பரவி மக்கள் பங்கேற்ற போராட்டமாக மரியது. இலட்சோப இலட்சம் விவசாயிகள், கைவினைஞர்கள், படைவீரர்கள், ஓராண்டு காலம் வீரம் செறிந்த வகையில் போராடினர். அவர்களது போற்றுதலுக்குரிய துணிவின் மூலமும், தியாகத்தின் மூலமும் இந்திய மக்களின் வரலாற்றில் ஒளிவீசும் அத்தியாயத்தை எழுதினர். இதன் பின்னணியைத் தெளிவாக பிபின் சந்திரா விளக்குகிறார்.

இந்தியாவின் மீதான பிரிட்டிஷ் அதிகாரம் 1859- ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் நிலை நாட்டப்பட்டது. ஆனால், புரட்சி வீண் போகவில்லை. பிற்காலத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்திற்கு உணர்ச்சியூட்டி வந்த வற்றாத ஜீவ ஊற்றாக இருந்தது.

அடுத்து, 1857ஆம் ஆண்டு புரட்சி இந்தியாவில் பிரிட்டிஷ் நிர்வாகத்தில் பாதிப்பையும், அது தவிர்க்க முடியாமல் மறு சீரமைப்புச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் ஏற்படுத்தியது. நிர்வாக வசதிக்காக இந்தியாவை பிரிட்டிசார் மாநிலங்களாகப் பிரித்தனர். அவற்றில் வங்காளம், சென்னை, பம்பாய் ஆகிய மூன்றும் மாகாணங்கள் என்று அழைக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புக் களை நிறுவினர். படை அமைப்பில் மாற்றங்களைச் செய்தனர். மக்கள் சார்ந்த பொதுப்பணித் துறைகளில் புதிய திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தினர். நிர்வாகக் கொள்கைகளை வடிவமைத்தனர். சாதி, மதம், இனம் போன்றவை அடங்கிய இந்தியப் பாகுபாடுகளில் பயன்படுத்தி அவர்களுக்குள் மோதல்களை உருவாக்கி பிரிட்டிசார் இந்தியாவை வெற்றி கொண்டனர். மக்களுக்கு எதிராக இளவரசர்களையும் மாகாணங்களுக்கு எதிராக மாகாணங்களையும், சாதிக்கு எதிராக சாதியையும், குழுவுக்கு எதிராக குழுவையும், எல்லாவற்றிற்கும் மேலாக, முஸ்லீம்களுக்கு எதிராக இந்துக்களையும் தூண்டிவிட்டு பிரித்தாளும் சூழ்ச்சியை 1858க்குப் பிறகு அவர்கள் கையாளத் தொடங்கினர்.

கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் மக்களிடையே இயக்கத்தைக் கட்டமைக்கத் தொடங்கி 1885 - ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தைத் தொடங்கினர்.

இருபதாம் நூற்றாண்டில் தொழிற்சங்க இயக்கங்கள் உருவானதை ஒட்டி சிறந்த தொழிலாளர் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனாலும், இந்திய உழைக்கும் வர்க்கத்தின் நிலைமைகள் மிகவும் ஒடுக்கப்பட்டதாகவும், வருந்தத் தக்கதாகவுமே தொடங்கின. சராசரித் தொழிலாளர்கள் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளுக்கும் கீழான வாழ்க்கையையே நடத்தி வந்தனர்.

ஆங்கில அரசு அண்மை நாடுகளான நேபாளம், பர்மா, ஆப்கானிஸ்தான் ஆகியவற்றுடன் நிகழ்த்திய போரையும் வரலாற்றாசிரியர் குறிப்பிட்டு அதன் விளைவுகளை மதிப்பீடு செய்கிறார்.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவின் மீது ஆழமான பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியது. 1947ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி வீழும் வரை அந்த ஆட்சிக்காலம் முழுவதிலும் இந்தியப் பொருளாதாரத்தின் அனைத்து அம்சங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டதை பிபின் சந்திரா தகுந்த புள்ளி விவரங்களோடு விளக்குகிறார்.

ஒட்டு மொத்தத்தில், இந்தியத் தொழில்துறை வளர்ச்சி மிகமிக நிதானமாகவும், சிரமமானதாகவும்

இருந்தது. 19 - ஆம் நூற்றாண்டில் அவை பெரும்பாலும் பருத்தி, சணல் தொழிற்சாலைகளாகவும், தேயிலைத் தோட்டங்களாகவும், 1930களில் சர்க்கரை, சிமெண்ட் ஆலைகளாகவும் இருந்தன. 1946 இறுதியில் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த மொத்த தொழிலாளர்களில் 40 சதவீதம் பேர் பருத்தி, சணல், ஜவுளியில் இருந்து வந்தனர். உற்பத்தி, வேலைவாய்ப்பு என்ற வகையில் கணக்கிட்டால் இந்தியாவின் நவீன தொழில்துறை வளர்ச்சியானது பிறநாடுகளின் தொழில்துறை வளர்ச்சியுடன் ஒப்பிடக் கூடிய நிலையிலோ அல்லது இந்தியாவின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலோ இல்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் தேசிய அரசியல் உணர்வு முழு அளவில் பரவி தேசிய இயக்கம் வளர்ச்சி பெற்றது. 1885 - டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸின் தலைமையில் இந்திய மக்கள் அணிதிரண்டு அன்னிய ஆட்சியரிடமிருந்து நாடு விடுதலை பெற வேண்டும் என்பதற்கான தொடர்ச்சியான வீரம் செறிந்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதன் விளைவாக 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15இல் நாடு விடுதலை பெற்றது.

அதைத் தொடர்ந்து பிபின் சந்திரா இந்தியாவின் வளர்ச்சி பற்றியும், குறிப்பாக 1858க்குப் பிறகு நிகழ்ந்த மதம், சமூகம் சார்ந்த சீர்திருத்தங்களை விரிவாக வகைப்படுத்துகிறார். அடுத்து 1905 முதல் 1918 வரை நிகழ்ந்த தீவிர தேசிய இயக்கத்தின் வளர்ச்சியை ஆழமாக ஆய்வு செய்கிறார்.

விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்டம் நிகழ்ந்த 1919 - 1927 ஆண்டுகளில் இயக்க நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

காந்திஜி 1915 - ஆம் ஆண்டு தனது 46 - வது வயதில் இந்தியாவுக்குத் திரும்பினார். இந்திய நிலைமைகளையும் இந்திய மக்களையும் புரிந்து கொள்வதற்காக அவர் ஓராண்டு காலம் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டதையும், அவருடைய சத்திய சோதனையையும் விரிவாகக் குறிப்பிடுகிறார்.

அடுத்து இந்திய விடுதலைப் போராட்டத்தின் இரண்டாம் கட்டம் (1927-1947) பற்றிய நிகழ்வுகளையும் அனைத்து மக்களின் பங்கேற்பையும் இனம் காட்டுகிறார். 1927ஆம் ஆண்டு தேசிய மறு எழுச்சிக்கும், புதிய சோசலிசப் போக்கின் தோற்றத்துக்கும் பல்வேறு அறிகுறிகள் தென்பட்டன. மார்க்சியமும், மற்ற சோசலிசக் கருத்துக்களும் வேகமாகப் பரவின. இந்திய இளைஞர்களின் செயல்பாடு தீவிரமடைந்தன. நாடு முழுவதும் இளைஞர் கழகங்கள் உருவாக்கப்பட்டன. மாணவர்களின் மாநாடுகள் நடைபெற்றன. 1920களில் சோசலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் குழுக்கள் தோன்றிச் செயல்பட்டன. இரஷ்யப் புரட்சியின் உதாரணம் பல்வேறு இளம் தேசியவாதிகளின் ஆர்வத்தைத் தூண்டியது. காந்திய சிந்தனைகளிலும் திட்டங்களிலும் அதிருப்தியுற்ற அவர்களில் பலர் சோசலிச சித்தாந்தத்தைத் தமது வழிகாட்டியாக ஏற்கத் தொடங்கினர். 1925 -ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிலாளர், விவசாயிகள் கட்சிகள் பல தோற்றுவிக்கப்பட்டன. இக்கட்சிகளும், குழுக்களும் மார்க்ஸிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் கருத்துக்களை பிரச்சாரம் செய்து வந்தன. அதே சமயம் அவர்கள் தேசிய இயக்கம், தேசிய காங்கிரஸ் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியினராகவே செயல்பட்டு வந்தனர்.

தொடர்ந்து 1942 - ஆம் ஆண்டு ஆகஸ்டு 8 அன்று பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியது. புகழ் பெற்ற ‘வெள்ளையனே வெளியேறு’ தீர்மானத்தை அக்கூட்டம் நிறைவேற்றியது. இந்த இலட்சியத்தை அடைய காந்திஜியின் தலைமையில் அகிம்சை வழியில் வெகுஜனப் போராட்டம் தொடங்கியது.


அதன் விளைவாக 1948ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறும் என 1947ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று பிரிட்டிஷ் பிரதமர் கிளமென்ட் அட்லி பிரகடனப் படுத்தினார்.

அடுத்து 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று இந்தியா தனது முதலாவது சுதந்திர தின விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடியது. பல தலைமுறைகளைச் சேர்ந்த தேசபக்தர்களின் தியாகங்களும், எண்ணற்ற தியாகிகளின் இரத்தமும் உரிய பலனைத் தந்தன.

வாசிப்புக்கு உகந்த வகையில் தெளிவாகவும் விரிவாகவும் எழுதப்பட்டுள்ள ‘நவீன கால இந்தியா’ ஒரு புதிய வரலாற்று உணர்வை நமக்குள் தோற்றுவிக்கிறது. தமிழில் இது மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியாகியிருப்பது தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கிறது.

●

# நியூ செஞ்சுரி வெளியீடாக ப.சிங்காரத்தின் நாவல்கள்





இரண்டாம் உலகப் போர்க்காலத்தின்
நெருக்கடி நிலையை மையமாக வைத்து
ஒரு அற்புதமான காதலை இணைத்து
புனைவாக்கப்பட்ட இந்நாவல்,
தமிழின் ஆகச்சிறந்த நாவல்களிலொன்று.

தமிழ்நாட்டில் பிழைப்புக்கு வழியின்றி
தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பஞ்சம்
பிழைக்கப்போன மக்களின் வாழ்வை
இரண்டாம் உலகப்போர் எப்படியெல்லாம்
சிதைத்துச் சீரழித்தது என்பதன்
கண்கூடான சாட்சியான இந்நாவலில்
போர்க்காலச் சூழலில் வாழும் மக்களின்
காதல், உன்னதம், பிரிவு, துயரம்,
ஆற்றாமை ஆகியவை தத்ருபமாக
அரங்கேறியுள்ளன.

**கடலுக்கு அப்பால்**

₹ 120/-





புயலிலே ஒரு தோணி நாவல்,
தலைப்பினுக்கேற்ப
கதையாடலில் அங்குமிங்கும் இடைவிடாமல்
அலைபாய்ந்து கொண்டிருக்கிறது.
சிம்பனி இசைக்கோவை போல நாவலின்
கதைப்போக்கில் பல்வேறு கதைக்கருக்கள்,
தோன்றி, வளர்ந்து மறைந்து,
மீண்டும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.
அவை வாசகனை வெவ்வேறு தளங்களுக்கு
முடிவற்று இழுத்துச் செல்கின்றன.

**புயலிலே ஒரு தோணி**

₹ 250/-

# நியூ செஞ்சுரியின்
## புதிய நூல்கள்




அரசியல் வரலாறு, சமூக வரலாறு,
பண்பாட்டு வரலாறு, பொருளாதார வரலாறு
முதலானவற்றை அறிந்து கொண்டுள்ள
அளவிற்கு நாம் காலனிய காலத்தின்
மருத்துவ வரலாற்றை அறிந்ததில்லை.
அதிலும் தமிழில் அறியும் வாய்ப்பு
கிடைக்கவில்லை. உதிரிக் கட்டுரைகளாக
சில பொழுது எழுதப் பெற்றுள்ளன.
வெவ்வேறு பொருள் சார்ந்து
சில நூல்கள் உள்ளன.
நேர்ப் பொருளில் ஒரு முழுமை
நோக்கிய பார்வையில்
முழு நீள நூல் இதுவரை இல்லை.
அந்த வெற்றிடத்தை இந்த நூல் நீக்குகிறது.
அதனால் இந்த வகைமையில் முதல் நூல்
எனும் சிறப்பைப் பெறுகிறது.


**காலனி ஆட்சியில்**
**நல வாழ்வும் நம் வாழ்வும்**
**டாக்டர் சு.நரேந்திரன்**

₹ 250/-

காலனிய வளர்ச்சிக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறு
தங்களது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி
இலங்கை தீவுக்கும், மர்த்தினு, குவாதலோப்
போன்ற தென் அமெரிக்கத் தீவுகளுக்கும்,
ஆப்பிரிக்காவுக்கு அருகாமையில் உள்ள
மொரிசியசு, ரீயூனியன் தீவுகளுக்கும்,
மலேயாவில் உள்ள பினாங்கு, சிங்கப்பூர்
தீவுகளுக்கும் புலம்பெயர்ந்தனர் என்பதை
இந்நூல் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்கிறது.
மேலும் காலனிய ஆதிக்கத்தினால்
தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நிலைமை,
தமிழர்களின் வாழ்வில் ஏற்பட்ட பண்பாட்டுத்
தாக்கங்கள், விளைவுகள், புதிய அனுபவங்கள்
மற்றும் பழைய அடையாளங்களைத் தெள்ளத்
தெளிவாக எடுத்து இயம்புகிறது.

**காலனிய வளர்ச்சிக் காலம்**
புலம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கை
**எஸ்.ஜெயசீல ஸ்டீபன்**

₹ 175/-





# தேடுகிறோம் ஒரு பெரிய மனிதரை

## க.பழனித்துரை

நம் தேசத்திற்கு ஆபத்து, மக்களாட்சிக்கு ஆபத்து என வரும்போதெல்லாம் ஒருமித்த கருத்தை அரசியல் கட்சிகளிடம் உருவாக்கி, மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்று தேசத்தை அழிவிலிருந்து காப்பாற்றிய தலைவர்கள் சிலர் நம்மிடையே வாழ்ந்து வரலாறு படைத்துள்ளனர்.

அவர்கள் அரசியல் கட்சிகளில் இருந்தாலும், கட்சிகளைக் கடக்கவல்ல தலைமைத்துவமும் ஆளுமையும் பெற்றவர்கள். அவர்கள் மக்களுக்கான அரசியல்வாதிகள், கட்சிக்கான அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அந்தத் தலைவர்களை மக்கள் அப்படித்தான் பார்த்தார்கள்.

அந்த வரிசையில் ஜெயப்பிரகாஷ் நாராயணனும், முன்னாள் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் கர்கிஷண் சிங் சுர்ஜித் அவர்களும் பார்க்கப்பட்டனர். அனைத்துக் கட்சிக்காரர்களாலும் மதிக்கப்பட்டு போற்றப்பட்ட அப்பழுக்கற்ற மக்கள் தலைவர்கள் அவர்கள்.

அவர்களுடைய தியாகம், நேர்மை, நாட்டுப்பற்று, மக்களாட்சிமேல் கொண்ட ஈடுபாடு, மக்கள் மேல், குறிப்பாக ஏழைகள்மீது கொண்ட கரிசனம் என்பது அவர்களை எப்போதும் எல்லோராலும் மதிக்க வைத்தன. இவர்கள் இருவருமே தலைவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கியவர்கள். அவர்கள் இருவருமே தியாகப்பின்னணி நிறைந்தவர்கள். தேசத்திற்கு நெருக்கடி வருகின்றபோது அரசியல் கட்சிகளை மிக எளிதில் இணைத்துச் செயல்பட வைத்துவிடுவார்கள். அந்த ஆற்றலும் சக்தியும் அவர்களிடம் இருந்தன. மற்ற கட்சித் தலைவர்கள் இவர்களின் அரசியல் பின்புலத்தைப் பார்ப்பது கிடையாது.

அந்த அளவுக்கு இவர்கள் அரசியலில் தூய்மையையும் நாணயத்தையும் வைத்துச் செயல்பட்டவர்கள். இன்று நாம் அப்படிப்பட்ட தலைவர்களுக்காக ஏங்கி நிற்கிறோம். அவர்கள் செய்த பணி இன்று நம் அரசியலுக்கு இன்று தேவைப்படுகிறது.

இன்று அப்படிப்பட்ட தலைவர்களைத் தேடிப் பார்க்கின்றோம் கிடைக்கவில்லை. அதன் விளைவுதான் இன்று இவ்வளவு விவாதங்களை நரேந்திரமோடிக்கு எதிராக வைக்கின்ற அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்க முடியவில்லை.

நாட்டிற்கு வரும் ஆபத்தைவிட பாரதப்பிரதமரை எதிர்க்கும் அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஊதிப் பெரிதாக்கப்பட்ட அகங்காரத்தில் செயல்பட்டு தங்கள் தலைமையை பெரிதாக எண்ணி செயல்பட்டு வருகின்றனர். என் கட்சி பெரிது, என் தலைமை பெரிது, என் வாக்கு வங்கி பரந்து விரிந்தது, அனைவரும் நான் சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுவது பொதுவெளியில் விவாதத்திற்கு வந்து கொண்டுள்ளது.

இந்தச் சூழலை எதிர்கொள்ள மறைந்த மார்க்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலர் இன்று இல்லையே என்ற உணர்வு நமக்கு வருகின்றது. ஏனென்றால் சுர்ஜித் அவர்களிடம் எவரையும் வெற்றி கொள்ள வேண்டிய பக்குவமும், தலைமைத்துவமும், பார்வையும் இருந்தது.

அவர் ஒரு முறை கேரளாவிற்கு வந்திருந்தார். அப்பொழுது நானும் அங்கு சென்றிருந்தேன். என் பணிகளை முடித்து இரவு விடுதிக்கு வந்து தொலைக்காட்சி பார்ப்பதற்காக தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தவுடன் ஒரு தொலைக்காட்சி சேனலில் அவரைப் பேட்டி கண்டார்கள். அதைக் கேட்க ஆரம்பித்ததிலிருந்து முடியும் வரை அதே இடத்தில் அமர்ந்து விட்டேன். அந்த அளவுக்கு அந்த விவாதம் என்னை கட்டிப்போட்டு விட்டது. அந்தப் பேட்டிதான் அவர் எவ்வளவு பெரும் தலைவர் என்பதை எனக்குப் புரிய வைத்தது.

அந்தப் பேட்டியில் தொலைக்காட்சியின் நெறியாளர் கேட்கிறார் "நீங்கள் உலகமயமான பொருளாதாரக் கொள்கையை வலுவாக எதிர்க்கின்றீர்கள். இன்று உங்களைப் பிரதமர் ஆக்கிவிட்டால் உலகமய பொருளாதாரத்தை நிறுத்திவிடுவீர்களா?" என்று.

உடனே எந்தத் தாமதமுமின்றி கூறினார். "அது முடியாது, உலகமயமான பொருளாதாரம் அதுவாக வீழ்ச்சியை நோக்கிச் சென்றுவிடும். இன்று அது ஒரு காட்டாற்று வெள்ளம்போல் வருகின்றது. அதை அணைகட்டி தடுத்து விடுவேன் என்று முயன்றால் நாமும் காணாமல் போய்விடுவோம். இந்தச் சூழலில் நாம் என்ன செய்ய வேண்டும் என்றால், வெள்ளம் வரும்போது எப்படி மக்களை பாதுகாப்பான இடத்திற்கு இட்டுச்சென்று பாதுகாத்து வைத்துக்கொள்வோமோ அதேபோல் நாம் இந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தும்போது, ஏழைகளைப் பாதுகாக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவைகள் அனைத்தையும் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் தீட்டி ஏழைகளைக் காக்க முயற்சி செய்வேன்" எனக் கூறினார்.

அடுத்து ஒரு கேள்வியை வைத்தார் நெறியாளர். "ஒரு நிலையில் உங்களை காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர் போல் தெரிகிறது என்று பலர் கூறுகின்றனர். அதையும் தாண்டி காங்கிரஸ் கட்சி வளர்வதற்கும் ஆதரவாக இருக்கிறீர்கள் என்று கூறுகின்றார்களே" என்று கேட்டார்.

அதற்கும் தயங்காமல் உடனே பதில் சொன்னார். "காங்கிரஸ் கட்சியை நெறிப்படுத்தி இயங்கு தளத்தில் இயங்க வைக்க வேண்டிய கட்டாயம் இந்திய சூழலில் இருக்கிறது. அதில் இடதுசாரிகளுக்கு ஒரு பங்கும் இருக்கிறது என்று உணர்கிறேன். அப்படி காங்கிரஸ் வியாபிக்கவில்லை என்றால் அந்த இடத்திற்கு ஒரு கொடிய பாம்பு வந்துவிடும். அதை அகற்றுவது மிகவும் கடினமானது. எனவேதான் காங்கிரஸ் கட்சி தவறு செய்கின்றபோது தட்டிக்கேட்க நான் தவறுவதே இல்லை. காங்கிரஸ் கட்சியை கடந்த காலங்களில் எதிர்த்துப் போராடியும் இருக்கின்றோம். போராடி சிறைச்சாலைக்கெல்லாம் சென்றிருக்கிறோம். அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சி ஏழைகளின் நலம் பேண கொண்டுவரும் திட்டங்களைத் தொடர்ந்து ஆதரித்தும் வருகின்றோம்" என்று கூறினார்.

அந்தக் கேள்விக்கு பதிலளிக்கும்போது இன்னொரு விளக்கத்தையும் வைத்தார். "இடதுசாரிகளும் காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து மிகப்பெரிய அளவில் வியாபிக்க வேண்டும். எனவே நாம் வளர்வதற்கும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி தேவைப்படுகிறது. காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருக்கும்போது இடதுசாரிகள் வலுவாக பாராளுமன்றத்தில் இருந்தால் காங்கிரஸ்

கட்சியின் அடிப்படை நோக்கங்களிலிருந்து விலக விடாமல் அந்தக் கட்சியை செயல்பட வைத்து மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை கொண்டுவர உதவியாக இருக்கலாம். அது நாட்டுக்கு நல்லது, குறிப்பாக ஏழைகளுக்கு நல்லது'' என்று குறிப்பிட்டார்.

அவர் கூறிய விளக்கத்தில் இருந்த கருத்துக்களை இன்று ஒரு ஆராய்ச்சியாளனாக அலசிப்பார்க்கிறேன்.

எவ்வளவு தொலை நோக்குப்பார்வையுடன் இந்தியாவின் எதிர்காலத்தை கணித்திருக்கிறார் என்று வியந்து பார்க்கிறேன். அதில் ஒன்று, உலகமய பொருளாதாரம்.

இந்த புதிய பொருளாதார இயக்கம் வெள்ளம்போல் வருகிறது. அது ஆற்றுநீர் அல்ல உபயோகப்படுத்த. அதன் பாரத்தை தாங்காமல் அதுவாகவே அழியும் சூழல் ஒருகாலத்தில் வரும் என்று கூறியதை இன்றைய உலகச் சூழலில் பொருத்திப் பார்க்கிறேன்.

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் இணைந்து கொண்டுவந்த இந்த புதிய பொருளாதாரத்தை அவர்களால் கட்டிக்காத்து மேலே கொண்டு செலுத்த முடியவில்லை. அதன் விளைவு இங்கிலாந்து ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறியது.

அமெரிக்கா புதிய பொருளாதார கட்டமைப்புக்களை உடைத்தெரிந்து அமெரிக்காவைப் பாதுகாக்க வேண்டும் என்று செயல்படுகிறது. நம்மைப்போன்ற நாடுகள்தான் புலி வாலைப் பிடித்ததுபோல் பொருளாதார வளர்ச்சி என பிடித்துக்கொண்டு அலைகின்றது.

மத்திய அரசாங்கத்திற்கு பொருளாதார ஆலோசகராக இருந்த அரவிந்த் வீரமணி அவர்கள் தன் சிறப்புக் கட்டுரை ஒன்றில் அரசும் தோற்றது, சந்தையும் தோற்றது இன்று புது முயற்சி தேவை மக்களைப் பாதுகாக்க என்று எழுதி இருந்தார்.

இரண்டாவது, உலகமயப் பொருளாதாரம் செயல்படும் நேரத்தில் ஏழைகளைப் பாதுகாக்கும் சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்கிச் செயல்பட வேண்டும் என்று கூறியதையும் நான் ஓரிடத்தில் பொருத்திப் பார்க்கிறேன்.

இடதுசாரிகளும் இணைந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடந்த முதல் ஐந்தாண்டுகளில் ஏழைகளுக்கான எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள் உரிமைச் சட்டங்களாக வெளிவந்தன இந்தியாவில். அது ஆராய்ச்சியாளர்களால் உரிமைகளின் புரட்சி என்றே வர்ணிக்கப்பட்டது.



அது வருவதற்கு இடதுசாரிகளின் பங்கு என்பது குறைவானது அல்ல. அதற்கு ஒரு உதாரணம் 100 நாள் வேலை உறுதியளிப்புச் சட்டம்.

இந்த ஏழைகளுக்கான சட்டங்களும் திட்டங்களும் வருவதற்கு இடதுசாரிகளின் பங்களிப்பு இருந்துள்ளதை எவரும் மறுக்கவில்லை.


அடுத்து காங்கிரஸ் கட்சியை பலவீனப்படுத்தினால் அந்த இடத்தில் பாம்பு குடி கொண்டுவிடும் என்று கூறியதை எந்த இடத்தில் பொருத்திப் பார்க்கின்றேன் என்றால் ''இரண்டாம் முறையாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி தொடர்ந்தபோது, வீழ்ச்சிக்கு வித்திட்டது, இடதுசாரிகளின் வெளியேற்றத்தால் நடந்தது அந்த வீழ்ச்சி. அந்த வீழ்ச்சி காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் வரவில்லை. இடதுசாரிகளுக்கும் வந்தது. அதன் விளைவு என்ன ஆனது என்பதை சிந்திக்கும்போது அவரின் அனுமானங்கள் எந்த அளவுக்கு உண்மை என்பதை இன்று நாம் உணர்கின்றோம்.

இன்று நரேந்திரமோடி அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை ஒன்றிணைக்க அவர்போல் ஒரு தலைவர் இல்லையே என்ற ஏக்கம்தான் என் போன்றோர்க்கு.

இந்த ஏக்கத்திற்கு மக்கள் தீர்ப்புச் சொல்லுவார்கள்.

●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அரசியல் நூல்கள்





**மோடியின் ஆட்சி ஒரு விமர்சனப் பார்வை**
டாக்டர் சித்தன கௌட பட்டீல்
முரளிதரா
எம். சத்தியானந்த்
₹ 30.00




**மதமா? அரசியலா?**
தா.பாண்டியன்
₹ 45.00





**இந்துத்துவாவா இந்திய சுயராஜ்யமா?**
யு.ஆர்.அனந்தமூர்த்தி
தமிழில்: டாக்டர் வெ.ஜீவானந்தம்
₹ 65.00




**பீகாரிலிருந்து திகார் வரை**
கன்னையா குமார்
₹ 110/-




**கார்ல் மார்க்ஸ் வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்
₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை
₹ 155/-



# கடவுளுக்கும் மொழிகளின் தோற்றத்திற்கும் தொடர்பு இல்லை

## கணபதி இளங்கோ

மொழியியல் என்பது கடந்த நூற்றாண்டில் உருவான ஒரு கல்விமுறையாகும். இது உலகம் முழுவதும் வாழும் பல்லாயிரக் கணக்கான மொழிகளும் ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பில், குறிப்பிட்ட தன்மையில்தான் இயக்கமுறுகின்றன, பேசப்பட்டு வருகின்றன, எழுதப்பட்டும் வருகின்றன, என்பதை ஆய்ந்து விளக்குவதற்கு வந்த கல்வி முறையாகும். மேற்கத்திய மொழியியல் அறிஞர்கள் போலவே தமிழ்ச் சூழலிலும் இவ்வாறான மொழியியல் அறிஞர்கள் பரவலாக சிந்தித்திருக்கின்றார்கள். அறியப்பட்டிருக்கிறார்கள். தெ.பொ.மீ தொடங்கி, முத்துச்சண்முகன், ச.அகத்தியலிங்கம், பொற்கோ, செ.வை.சண்முகம் என்று பலரும் ஆழங்கால் பட்ட அறிஞர் பெருமக்களாவர். கி. அரங்கன், அ.பிச்சை என்று அப்பட்டியல் மிக நீண்டது. அனைத்து மொழியினரும் பயன்படுத்தும் வகையிலே உலகப் பொதுமொழி ஏன் உருவாக்க வேண்டும் என்று முனைந்தவர்களும் உண்டு. அம்முயற்சி தோல்வி கண்டது (அது குறியீட்டு அளவை (symbolic logic) முறைப்படி அமைந்தது). ஆனால் இந்த மொழியியல் கல்வியின் மூலம் ஒலியனியல், உருபனியல், தொடரியல் என்ற அடிப்படையில் தான் மனிதர்களால் வழங்கப்படுகின்ற மொழிகள் அமைந்துள்ளன என்ற அறிதல் ஏற்படும்போது அது பல மொழிகளைக் கற்று அறிவதற்கான தூண்டுகோலாக அமைகின்றது. பல மொழிகளைக் கற்க விரும்புகிற ஒருவர் நேரடியாகக் கற்க முற்படும்போது ஏற்படும் சோதனைகள், இடர்பாடுகள், புரிதலின்மை ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வந்து பன்மொழிப் புலமையை வழங்க மொழியியல் அறிவு துணைசெய்கிறது எனலாம். அல்லது பன்மொழியறிவு பெற்றவர்களே மொழியியல் துறையில் சிறந்து விளங்குகின்றனர். ஒப்பிலக்கிய ஆய்வுக்கும் இதே பன்மொழிப் புலமை வேண்டுவதாகின்றது. இப்படிப் பார்க்கின்றபோது

இக்காலத்தில் மட்டுமல்ல; பழங்காலத்தில் இருந்தே பன்மொழியறிவு பெற்றவர்களே மரபிலக்கணங்களை கற்பித்தவர்களாக இருக்கின்றனர். தொல்காப்பியர் தொடங்கி நன்னூலார் வரை இதற்கு விதிவிலக்கல்ல. அந்தந்த மொழிகளிலே தோன்றியுள்ள மரபிலக்கணங்கள் மொழியியல் கோட்பாடுகளுக்கு எவ்வாறு பொருந்திவருகின்றன என்று ஆய்கின்றபோது தொல்காப்பியரே இக்கால மொழியியலார் கொள்கைப்படிதான் இலக்கணம் வகுத்திருக்கின்றார் என்று அறிகிறபோது இன்றைய மொழியியலார் அனைவருமே வியப்பெய்துகின்றனர்.




தொல்காப்பிய எழுத்தியல் சிந்தனைகள்
முனைவர். ச.சுபாஷ் சந்திரபோஸ்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்
விலை: ரூ. 175/-

மொழியியலார் தமிழ் மற்றும் திராவிட மொழிகளை ஆராய்ந்து இவற்றில் காலம் என்பது இறப்பு (past), இறப்பல்லாக் காலம் (non past) என்று இரண்டாகவே பகுப்பார். அதாவது நிகழ்வும், எதிர்வும், இறப்பல்லாக் காலத்தில் அடங்கிவிடும். நிகழ்காலத்திற்கு தனி இடைநிலை தோன்றியதும் நிகழ்காலம், எதிர்காலம் என்று பகுக்கப்பட்டன. இதை நன்னூலார் தெளிவாக வரையறுக்கின்றார். ஆனாலும், இப்போதும் இவ்விரண்டு காலங்களும் ஒன்றற்கு ஒன்று மயங்கி வருவதை மொழிநூலார் எடுத்துக்காட்டுகின்றனர்.

இவ்வடிப்படையில் பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்கின்றபோது பரிபாடல் தவிர மற்றைய இலக்கியங்கள் அனைத்திலுமே மூன்று காலத்திற்கும் இரண்டு வகை இடைநிலைகளே வந்து உணர்த்துகின்றன. (அதாவது நிகழ்வு, எதிர்விற்கு ஒரே இடைநிலை) இதன் மூலம் பரிபாடல் பிற்காலத்தது என்பதற்கு மேலும் வலு சேர்கிறது. இதனை தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலவாறு உணர்ந்து உரை செய்துள்ளனர். முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தொல்காப்பிய எழுத்தியல் சிந்தனைகள் என்ற நூலில் இவ்வுரையாசிரியர்கள் வேறுபடுமாற்றை ஆராய்ந்துரைக்கிறார். மேலும் இந்நூலில் அவர் எளிமையாகவும், சுவையாகவும் கடினமான மொழியியல் சிந்தனைகளை நம்முள் புகுத்த முயற்சிக்கிறார். குறிப்பாக மொழியியல் பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டது. ஒலியனியல், உருபனியல், தொடரியல் என்ற அடிப்படையில் அமைந்து விளக்குவது. எல்லா மொழிகளுக்கும் உள்ள எழுத்துக்களின் ஒலிப்பு முறை ஒன்றுதான். அதன் வரிவடிவம் மாறுபடுகின்றது. ‘அ’ என்ற ஒலிப்பிற்கு தமிழில் ‘அ’ என்றும், தெலுங்கில் --- என்றும் மலையாளத்தில் --- என்றும், ஆங்கிலத்தில் ‘a’ என்றும் எழுதுகின்றோம். எனவே, உலக மொழிகளின் எழுத்துகள் வரிவடிவத்தால் வேறுபட்டும் ஒலிப்பால் ஒன்றுபட்டுமிருக்கும், என்பதோடு கடவுளுக்கும் மொழிகளின் தோற்றத்திற்கும் தொடர்பு இல்லை என்பதை சுட்டிக் காட்டுகின்றார்.


தமிழ் ஒரு பின்னொட்டு மொழி என்பதையும், சிறப்பெழுத்துக்கள், சிறப்பல்லா எழுத்துக்கள் பற்றியும் விரிவான முறையில் ஆராய்கின்றார்.

1. தமிழ் எழுத்துக்களின் வைப்பு முறை
2. உயிர்மெய்
3. தன்னொற்று மிகுதல்
4. இனவொற்று மிகுதல்
5. எழுத்துக்களின் இழப்பு
6. புணர்ச்சியும் உறழ்ச்சியும்
7. புணர்ச்சி விதியில்லா புணர்ச்சிகள்
8. எழுத்துப் பேறும் சாரியையும்
9. அண்ணவினம் ஆதல்

ஆகிய ஒன்பது தலைப்புகளில் நுட்பமான ஆய்வுக் கட்டுரைகள் அமைந்தது இந்நூல். மேலும் அவரது மொழியியல், இலக்கணவியல் சார்ந்த இருபது நூல்களை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்டு தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு வளம் சேர்த்திருக்கின்றது. தமிழ் மாணவர்களும் ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் பயிலத்தக்க நூலிதுவாகும்.

●

# நியூ செஞ்சுரியின் புதிய நூல்கள்





**சிலுவைராஜ் சரித்திரம்**
ராஜ் கௌதமன்
₹ 560/-




**நெசவாளர்களும் துணிவணிகர்களும்**
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
தமிழில்: ந.அதியமான்
₹ 210/-





**யுவான் வம்ச நீலம் மற்றும் வெள்ளை நிறப் பீங்கான்**
ச்சென் சியேஜுன்
தமிழில்: இளந்தமிழ்
₹ 180/-




**வரலாற்று நோக்கில் மங்கலதேவி கண்ணகி கோட்டம்**
கவிஞர் இரா.கணபதிராசன் (எ) தமிழாதன்
₹ 100/-





**தமிழக கிராமிய விளையாட்டுகள்**
குமரி ஆதவன்
₹ 230/-





**பயணம் திறந்த இதயம்**
டாக்டர் இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப.,
₹ 155/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in


## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின்
## விற்பனை சாதனை நூல்கள்...





**வெகுளி**
தமிழில்: ச.வின்சென்ட்
பதிப்பாசிரியர்: சா.ஜெயராஜ்
**₹ 750/-**





**மஹத்**
முதல் தலித் புரட்சியின் உருவாக்கம்
ஆனந்த் டெல்டும்ப்டே
தமிழில்: கமலாலயன்
**₹ 550/-**





**வால்கா முதல்**
**கங்கை வரை**
ராகுல சாங்கிருத்தியாயன்
தமிழில்: யூமா வாசுகி
**₹ 350/-**




**அன்னா கரீனினா**
லியோ டால்ஸ்டாய்
தமிழில்:: நா.தர்மராஜன்
**₹ 995/-**




**உலக வரலாற்றில்**
**பெண்கள்**
ரோஸாலிண்ட் மைல்ஸ்
தமிழில் : வி.ராதாகிருஷ்ணன்
**₹ 375/-**




**அந்தோன் சேகவ்**
**சிறுகதைகளும்**
**குறுநாவல்களும்**
தமிழில் : ரா.கிருஷ்ணையா
பூ.சோமசுந்தரம்
**₹ 240/-**


Printed by **S.Shanmuganathan** and Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** and printed at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and published at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 Editor: **T.Stalin Gunasekaran**



# கைத்தறி நெசவாளர்கள்


## இரா. மீனாட்சி

அண்மையில் மிகமிக அபூர்வமான ஓர் ஆய்வாளரை, புதுவை இலக்கிய மேடையில் சந்தித்தேன். தொடர்ந்து நடந்த நட்பு வட்டப் பேச்சுகள் அவரை நம் ஆரோவில் நிகழ்வுகளுக்கும் அழைத்து வந்தன.

அவரது பெயர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன். புதுச்சேரியைச் சேர்ந்தவர். இந்திய ஐரோப்பியவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தற்போதைய இயக்குநர். இவர் தூரக்கிழக்கு நாடுகளுக்கான பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் மேனாள் ஆராய்ச்சியாளர் *(1994 - 1999)* டாட்டா நடுவண் ஆவணக் காப்பகத்தின் மூத்த ஆலோசகர் *(1999 - 2000)* விசுவபாரதி (சாந்திநிகேதன்) பல்கலைக்கழகத்தின் கடல்சார் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் *(2001 - 2013)* அமெரிக்காவில் உள்ள நெபுராஸ்கா மற்றும் கனெக்டிக்ட் பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளார். இவர் பல்வேறு ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துக்கீசு, டச்சு, வங்காள மொழிகளில் எழுதியுள்ளார். அவை சீனமொழியிலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வுயரிய பெருமைமிகு பன்முகத் திறமை கொண்ட முனைவர் ஜெயசீல ஸ்டீபன் நமது ஆரோவில் நட்புவட்டத்தினருடன் இணைந்து கருத்துகளைப் பரிமரிக்கொள்வதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

பேராசிரியரின் அண்மைப் படைப்பு நான் பெரிதும் பாராட்டும் கைத்தறி நெசவுத் தொழில் வரலாற்று ஆவணமாக விளங்கும் நூலாகும். "தமிழக மக்கள் வரலாறு" தொகுப்பில் "நெசவாளர்களும் துணிவணிகர்களும்" *(கி.பி 1502 - 1793)* எனும் இவரது ஆங்கில நூலின் தமிழாக்கத்தைச் செய்துள்ளவர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அமரர் ந.அதியமான். இவ்வாய்வு நூலினைச் செம்மையாக அளித்துள்ள நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீட்டாளர்கள் நமது நன்றிக்குரியவர்கள்.

இந்நூலில் குறிப்பாக கி.பி. *1502 - 1641* ஆண்டுகளில் தமிழகக் கடற்கரைப் பகுதிகளிலிருந்து மலேயக் குடா, இந்தோனேசிய தீவுக்கூட்டப் பகுதிகளுக்குப் போர்த்துக்கீசியர் நிகழ்த்திய துணிவணிகம் சொல்லப்பட்டுள்ளது. மேலும் *16-18* ஆம் நூற்றாண்டுகளில் செட்டியார், முதலியார், பிள்ளை, மரக்காயர் குல வணிகர்கள் ஆசியாவில் மேற்கொண்ட துணிவணிகம், பொருள் நிலவியல் போன்ற வரலாற்றுக் குறிப்புகள் சான்றுகளுடன் வழங்கப்பட்டுள்ளன.




நெசவாளர்களும் துணிவணிகர்களும்
எஸ்.ஜெயசீல ஸ்டீபன் | தமிழில்: ந.அதியமான்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்
விலை: ரூ. 210/-

வாசிப்புக்கு அருமையாக சுகமளிக்கும் "நெசவாளர்களும் துணிவணிகர்களும்" நூல் நடப்பாண்டு *2019* பிப்ரவரியில் வெளியிடப் பட்டுள்ளது. *220* பக்கங்கள், தேவையான பக்கங்களில் வண்ணப் படங்கள், வரை படங்கள், ஓவியங்கள் தலைகாட்டுகின்றன. விலை ரூ.*210/-* மட்டுமே.

இவ்வாய்வு நூலினை உருவாக்க ஆசிரியர் மேற் கொண்டிருந்த ஆய்வுகள் பற்றி அறியவரும்போது நமக்குப் பெருவியப்பு உண்டாகிறது. பல ஐரோப்பிய மொழிகளைக் கற்று அந்தந்த நாடுகளுக்கே சென்று செய்திகளை ஆவணப்படுத்தியுள்ளார். கிழக்கிலும் மேற்கிலும் உள்ள பல்வேறு அருங்காப்பகங்கள், நூலகங்களில் அமர்ந்து பொறுமையாகவும், கடுமையான உழைப்புத் திறனாலும் நமக்குப் பயன்படும் தரவுகளைத் திரட்டியுள்ளார் என தெரிந்து கொள்கிறோம். இதற்குமுன் இத்துறையில் ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ள வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுகளை நமது தோழர் அப்படியே ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். தமது கடுமையான முயற்சிகளால் திரட்டிச் சேர்த்த உண்மைகளை, தகுந்த ஆவணங்களுடன் நிறுவுகிறார் என்பதே இவ்வாய்வு நூல் நமக்குத் தரும் நலச்செய்தி ஆகும்.

தமிழகத்தில் மேம்பட்டிருந்த கைத்தறி பற்றி இந்நூலிலிருந்து ஒரு குறிப்பு;

"விஜயநகர ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட நூலான 'பசவ புராணத்தில்' *57* வகையான துணிகள் குறிப்பிடப்படுகின்றன. அவை பெரும்பாலும் சேலை வகைகளாகும். *(எனக்கு ஆவல் மீதூறுகிறது! ஆசிரியர்)*

சேலையின் விளிம்புப் பகுதிகள் மயில், அன்னம், கிளி, புறா, மான், குதிரை, யானை, சிங்கம் போன்ற பறவை விலங்கின வடிவங்களால் அழகுபடுத்தப்பட்டிருக்கும். தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டது மட்டுமல்லாமல் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டதை அறியமுடிகிறது. அரசு, கோயில் நிர்வாகங்களின் ஊக்கத்தினால் நெசவுத்தொழில் நுட்பத்தில் வளர்ச்சியடைந்தது. துணி வணிகக்குழுக்கள் வலிமைபெற்று உள்நாட்டிலும், கடல் கடந்து வெளிநாடுகளிலும் துணிகள் சென்றடைய வழிவகுத்தன"



தமிழக நெசவுக்கலையின் மாண்பினைப் பார்த்தீர்களா நண்பர்களே! வரலாற்றுப் பெட்டகத்தின் திறவுகோல் எனும்படியான மற்றொரு ஆவணக் குறிப்பு எனது கவனத்தை ஈர்த்தது.

இடைக்காலத் தமிழ்ச் சமூகத்தில் கைகோள முதலியார் நெசவுத் தொழிலை மேற்கொண்ட இடங்கைப் பிரிவைச் சார்ந்தவர்களாக விளங்கினர். பின்னர் துணிவணிகத்தையும் இவர்கள் மேற்கொண்டமையால் முதலியார் எனும் பின்னொட்டையும் பெற்றனர். இவர்கள் கடல்கடந்தும் துணிவணிகத்தை மேற்கொண்டனர். சிலர் மலாக்காவில் குடியேறினர்.


இவர்கள் 1527ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் நாள் போர்த்துக்கீசிய அரசருக்கு எழுதிய கடிதத்தில் தமிழில் கையொப்பமிட்டிருப்பதால் இவர்கள் தமிழ் வணிகர்கள் என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு மலாக்காவில் குடியேறிய தமிழ் கைகோள முதலியார் வணிகர்கள் ஆங்கிலேயக் குழுமத்தின் பாதுகாப்பில் துணிவணிகத்தில் தமது மூலதனத்தைப் பயன்படுத்திப் புதிய வருவாயைத் தேடினர். தமது மூலதனத்தின் மூலமும் திறமையின் மூலமும் தமிழகக் கடற்கரையில் துணி உற்பத்தியிலும் வணிகத்திலும் ஆதிக்கம் செலுத்தினர். சில கைகோள முதலியார்கள் டச்சுக் குழுமத்திற்கும் ஆங்கிலேயே குழுமத்திற்கும் துணிகளை வாங்கி அளித்தனர் என்றும் அறிகிறோம்.

இவ்வாய்வு நூலின் பின் இணைப்பாக, சொல்லடைவுகளும் விளக்கங்களும் என மூன்று பிரிவுகளில் தரப்பட்டுள்ள சொற்களின் விவரங்கள் நமக்கு வரலாற்றின் போக்கைப் புரிந்துகொள்ள உதவும் கையேடாக விளங்குகிறது.


ஆய்வுநூல் பட்டியலில் அச்சிலுள்ளவை அல்லாமல் கையெழுத்துச் சுவடிகளும் ஆராய்ச்சிக்குப் பயன்பட்டுள்ளன. வரைபடங்களும் மதிப்பைக் கூட்டுவன. நம் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்நூலை உயர்ந்த பொக்கிஷமாகக் கருதுகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு கைதொழும் வணக்கங்கள். மே தினம் கொண்டாடிய தொழிலாளர் ஓங்கு சக்தி வாழ்க என வாழ்த்துகிறேன்.

*நன்றி: ஆரோவில் செய்தி மடல்*


# நியூ செஞ்சுரியின்
# ராஜ் கௌதமன் வெளியீடுகள்




₹325/-





₹160/-




₹330/-




₹145/-




₹290/-





₹160/-





₹90/-




₹100/-




₹70/-




₹70/-




₹370/-




₹135/-




# தமிழ் தமிழர் மேதினம்

**உதயை மு. வீரையன்**

உழைப்பு இல்லாமல் உலகம் இல்லை; உலகத் தொழிலாளர்களும் இல்லை. உழைப்பாளர்களின் ஒப்பற்ற நாளாகிய மே நாளைப் போற்றாத உலக நாடுகளும் இல்லை. இதில் தமிழுக்கும், தமிழர்க்கும் உள்ள பங்கினை ஆராய்வது அவசியம்.

முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவின் சிகாகோ நகரில் 1886 ஆம் ஆண்டு எட்டுமணிநேர வேலைக்காகப் போராட்டம் தொடங்கியது. போராடிய தொழிலாளர்களின் குருதியில் தோய்ந்ததுதான் இந்த மேதினம். இந்தச் சிவப்பு இரத்தம் வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளமானது.

அக்காலத்தில் வேலை என்பது ‘அதிகாலை முதல் அந்திசாயும் வரை’ என்பதுதான். இது தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்தது. இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வெளிக்காட்டினர். சங்கம் வைக்கும் உரிமை மறுக்கப்பட்ட அக்காலத்தில் வேலை நேரம் பற்றியும் பேச முடியவில்லை.



ஊதிய உயர்வுக்காகவும் சங்கம் வைக்கும் உரிமைக்காவும் அமெரிக்கத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வந்தனர். அமெரிக்காவில் பாட்டாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினரான கருப்பு இனத்தொழிலாளி அடிமையாக நீடிக்கும்வரை வெள்ளையர்களின் வாழ்க்கையிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

அமெரிக்காவில் உள்நாட்டுப் போருக்குப் பிறகு அடிமைத்தனத்தின் அழிவிலிருந்து புதிய வேகம் பிறந்தது. எட்டுமணி நேர வேலைக்கான போராட்டமும் வெடித்தது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பும் எட்டுமணி நேர வேலைக்கான கோரிக்கைக்காகப் போராடும்படி உலகத் தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தது.

காவல்துறையினரின் காட்டுமிராண்டித் தாகுதலை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் தொழிலாளர் மீது தாக்குதல் தொடங்கியது. கூட்டத்தில் எறியப்பட்ட குண்டு ஒன்று இராணுவ அதிகாரியைக் கொன்றது. இதன் விளைவாக எழுந்த மோதலில் ஏழு காவலர்களும், நான்கு தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நடந்த வழக்கு விசாரணையில் தொழிலாளர்களின் தலைவர்களாகிய பார்சன்ஸ், ஸ்பைபஸ், ஃபாஷர், எங்கெல் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வு உலகில் உள்ள தொழிலாளர்கள் இடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களுக்கு மேதினம் ஒரு திருப்பு முனையாக மரியது. எட்டுமணி நேர வேலைதான் முக்கியக் கோரிக்கை. உலகத் தொழிலாளர் ஒற்றுமை, எல்லோருக்கும் ஒரே மாதிரியான வாக்குரிமை, ஏகாதிபத்தியப்போர் மற்றும் காலனி ஆதிக்க எதிர்ப்பு, தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை, அரசியல் மற்றும் சங்கம் கட்டும் உரிமை முதலிய கோரிக்கைகளும் அதில் அடக்கம்.

சிகாகோவில் நிகழ்ந்த இந்நிகழ்வுக்குப் பின்னர் உலகப் பொதுவுடைமைத் தலைவர்கள் பாரிஸ் நகரில் கூடி *1890* முதல் மே நாளைச் சர்வதேச நாளாகக் கொண்டாடும்படி அறைகூவல் விடுத்தனர். இந்த வேண்டுகோளை ஏற்று ஐரோப்பிய நாடுகள் கொண்டாடத் தொடங்கின.

இந்தியாவில் மே நாளை முதன் முதலில் கொண்டாடிய பெருமை சிங்காரவேலரையே சாரும். *1923* ஆம் ஆண்டு மே முதல்நாளைக் கொண்டாடி, ‘தொழிலாளி விவசாயி கட்சி’ (Labour and Kissan Party of Hindustan) யையும் தோற்றுவித்தார். இக்கட்சியின் சார்பாக சென்னையில் இரு இடங்களில் மே தினக் கூட்டங்கள் நடந்துள்ளன.

ஒரு கூட்டம் சிங்காரவேலர் தலைமையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் அருகில் உள்ள கடற்கரையில் நிகழ்ந்துள்ளது. மற்றொரு கூட்டம் திருவல்லிக்கேணி கடற்கரையில் நிகழ்ந்துள்ளது. கட்சியின் செயலாளர் எம்.பி.எஸ். வேலாயுதம் தலைமை ஏற்றுள்ளார்.

இந்தக் கூட்டங்களில் சுப்பிரமணிய சிவா, கிருஷ்ணசாமி சர்மா உள்பட காங்கிரசு கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளனர். மே தினம் கொண்டாடிய செய்தி ‘இந்து’ ஆங்கில நாளிதழிலும், ‘சுதேசமித்திரன்’ தமிழ் திசையிலும் *2-5-1923* அன்று வெளியாகியுள்ளது.

சிங்காரவேலர் கொண்டாடிய மே தினத்தைப் பற்றிய செய்தி எம்.என். ராய் நடத்திய ‘இந்திய விடுதலையின் முன்னணிப் படை’ என்ற இதழிலும்

வெளிவந்துள்ளது. அந்த இதழ் ஜெர்மனியிலிருந்து வெளிவந்தது.

இக்குறிப்புகளைக் கொண்டு ஆராய்ந்தால் இந்தியாவில் மே நாளை முதன் முதலில் கொண்டாடியவர் சிங்காரவேலர் என்பதும், கொண்டாடிய இடம் சென்னை என்பதும் ஐயமின்றி தெளிவாகும். இவரது மே தின உரைச் சுருக்கம் 'தென்னிந்தியாவில் முதல் கம்யூனிஸ்ட்' என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்த நன்னாளில் அவர் தொழிலாளர் - விவசாயிகள் கட்சி, ஒன்றையும் தொடக்கியுள்ளார். தொழிலாளர்களும், விவசாயிகளும் வெறும் ஊதிய உயர்வு கோருபவர்களாகவும், வேலை நேரத்தைக் குறைக்கப் போராடுபவர்களாகவும் இல்லாமல் முழு உரிமை பெறுவதற்கும், சுரண்டலை ஒழிப்பதற்கும் போராடும் முன்னணிப் படையாக விளங்க வேண்டும் என்பதே அக்கட்சியின் குறிக்கோளாகும்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் காங்கிரஸ் கட்சியினர் மிதவாதிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும் பிரிந்து கிடந்தனர். காங்கிரஸ் கட்சியில் இருந்த இடதுசாரிகள் எல்லாம் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் இயங்கி வந்தனர்.

சுதந்திரத்துக்குப் பிறகு இந்திய அரசு பொதுவுடைமைக் கட்சிக்குத் தடைவிதித்தது. தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். கட்சி அலுவலகங்கள், தொழிற்சங்க அலுவலகங்கள் அனைத்தும் 'சீல்' வைக்கப்பட்டன. பத்திரிகைகளைத் தடைசெய்தும், எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் முழுவதும் முடக்கப்பட்டன. கட்சிப் பெயரை உச்சரிக்க முடியாத அளவுக்கு மக்கள் அச்சுறுத்தப்பட்டனர்.

தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த சில தலைவர்கள் அரசின் கண்களுக்குத் தெரிந்திராத சில அறிவாளர்களை அழைத்து பத்திரிகை நடத்தும்படி கேட்டுக் கொண்டனர். அதன் விளைவாக 'முன்னணி' வார ஏடு உருவானது. கவிஞர் குயிலன் ஆசியராகவும், கவிஞர் தமிழ்ஒளி துணை ஆசிரியராகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அந்த ஏட்டின் வாயிலாக தடைசெய்யப்பட்ட பொதுவுடைமைக் கட்சியில் செயல்பாடுகளை மக்களுக்குக் கொண்டு சென்றனர். அந்த நாட்களில் நடந்த போராட்ட நிகழ்வுகளை பல இலக்கிய



வடிவங்களில் தமிழ் ஒளியும் எழுதிவந்தார். குறிப்பாக சர்வதேச சிறப்புமிக்க ' மே தினம்' பற்றியும், சீன மக்களின் செஞ்சேனை ஈட்டிய வெற்றிகள் பற்றியும் அவர் எழுதிய கவிதைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

உலகத் தொழிலாளர்களின் வெற்றி விழாவான 'மே தினம்' பற்றி' மே தினம் வருக' என்ற நெடுங்கவிதை தமிழ் இலக்கிய வரலாற்றில் முதல் முயற்சியாகும்.

மார்க்சிக அறிஞரும், 'ஜனசக்தி' ஆசிரியருமான தோழர் ஆர்.கே.கண்ணன், 'நான் அறிந்தவரை இந்திய மொழிகளில் மே தினம் பற்றி இப்படியொரு கவிதை வெளிவந்ததில்லை. தமிழ் ஒளியின் இந்தக் கவிதை ஒரு பொக்கிஷம்' என்று கூறியுள்ளார்.

> **"கோழிக்கு முன்னெழுந்து கொத்தடிமை**
> **போல் உழைத்துப்**
> **பாடுபட்ட ஏழைமுகம் பார்த்துப்**
> **பதைபதைத்துக்**
> **கண்ணீர் துடைக்கவந்த காலமே நீ வருக..."**

என்று இந்த நெடுங்கவிதை தொடங்குகிறது.

உலகத் தொழிலாளர்களின் வெற்றித் திருநாளான மே நாளை இந்தியத் துணைக் கண்டத்தில் முன் எடுத்த பெருமை தமிழ் மண்ணையே சாரும். முதல் பகுத்தறிவாளர் எனப்படும் சிங்காரவேலரும், கவிஞர் தமிழ் ஒளியும் இந்தப் பெருமைக்குக் கால்கோல் இட்டவர்கள். இல்லை என்பார் யார்?

●

# நியூ செஞ்சுரியின் சுற்றுச்சூழல் நூல்கள்




**கவின்மிகு கானகம்**

(கட்டற்ற காட்டுயிர்க் களஞ்சியம்)

மோகன ரூபன்

₹ 175/-





**வேட்டையாடிகள்**

(பறவைகளின் உலகம்)

சுப்ரபாரதிமணியன்

₹ 65.00




**சூழலியல் மேலாண்மை**

முனைவர் எம்.விக்டர் லூயிஸ் அந்துவான்

தமிழில்: முனைவர் அ.அந்தோணி குருசு

₹ 100/-




**புவியினைப் புரிந்துகொள்!**

(சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கட்டுரைகள்)

முனைவர் பா.ராம்மனோகர்

₹ 105/-

# உ.வே.சாமிநாதையரும் வ.உ.சிதம்பரம் பிள்ளையும்

## முனைவர் இரா. வெங்கடேசன்



திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் எனும் ஊரில், வ.உ.சிதம்பரம் பிள்ளை பிறக்கும்போது *(05 செப்டம்பர்,1872)* தஞ்சை மாவட்டம் சூரியமூலை எனும் ஊரில் பிறந்த *(19, பிப்ரவரி,1855)* உ.வே. சாமிநாதையர் மாயூரத்தில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் மாணவராகச் சேர்ந்து தமிழ் பயின்றுகொண்டிருந்தார். காலம், இடம் எனும் வேறுபாடுகளைக் கடந்து ஒட்டப்பிடாரத்தில் பிறந்த சிதம்பரம் பிள்ளையையும், சூரியமூலையில் பிறந்த சாமிநாதையரையும் நெருங்கிப் பழக வைத்தது, தமிழ்ப் பணியில் முழுவதுமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட இருவரின் பேருழைப்புதான்.

1908இல் கைது செய்யப்பட்டுச் சிறைக்குச் சென்ற சிதம்பரம் பிள்ளை 1912இல் விடுதலை பெற்று வெளியே வந்தார். இந்த நான்கு ஆண்டுகாலச் சிறைவாழ்க்கையில் தமிழின் மூத்த இலக்கண நூலான தொல்காப்பியத்தையும், தமிழ் இலக்கிய நூல்களுள் பெருமதிப்புப் பெற்று விளங்கிய திருக்குறளையும் ஆராய்ந்து தெளிந்திருக்கிறார் என்பதை அவர் வரலாறு வெளிப்படுத்துகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரையில் அச்சுருவாகி பொதுவெளிக்கு வராமல், ஓலைச்சுவடிகளில் இருந்த தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரையை அச்சிட்டுத் தமிழ் ஆய்வுலகிற்கு அளித்தவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. எழுத்ததிகார, சொல்லதிகார இளம்பூரணர் உரைச் சுவடிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் *(1868)* அச்சுருவாகி

வெளிவந்துவிட்டன. 1920இல் கா. நமச்சிவாய முதலியார் பொருளதிகார அகத்திணை, புறத்திணையியல் ஆகிய இரண்டு இயல்களுக்குரிய இளம்பூரணர் உரைப் பகுதியை மட்டும் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். பொருளதிகாரத்திற்குரிய இளம்பூரணர் உரைப் பகுதி முழுவதையும் முதன் முதல் வ.உ.சி. தான் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

வ.உ.சி.1910ஆம் ஆண்டு கோவைச் சிறையில் செக்கிழுத்துக் கொண்டிருந்த சூழலுக்கு நடுவே தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய இரு நூல்களை முழுவதுமாக ஆராய்ந்து தெளிந்திருக்கிறார். அதன் விளைவாக அந்நூல்களுக்குள்ள பழைய உரைகளின் கடின நடையை வ.உ.சி. அறிந்திருக்கிறார். அதனால் தொல்காப்பியத்திற்கும் திருக்குறளுக்கும் எளிய அமைப்பில் உரை எழுத எண்ணியிருக்கிறார். சிறை வாசத்திலிருந்து விடுதலைபெற்று வெளியே வந்த பின்னர் எளிய உரையையும் எழுதத் தொடங்கியிருக்கிறார்.

சென்னை எழும்பூரில் வசித்தகாலத்தில், ஒருநாள் தொல்காப்பியத்திற்குத் தாம் எழுதிய உரையைப் பூர்த்தி செய்யக்கருதித் திருமணம் செல்வக்கேசவராய முதலியாரிடம் எடுத்துச் சென்று ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறார். அப்போது செல்வக்கேசவராய முதலியார், தொல்காப்பிய இளம்பூரண அச்சுப்புத்தகம், சொல்லதிகார ஏட்டுப்பிரதி, பொருளதிகார ஏட்டுப்பிரதி சிலவற்றை வ.உ.சி. அவர்களுக்கு அளித்திருக்கிறார். அவைகளைப் பெற்றுவந்து படித்துப்பார்த்த பிறகு இளம்பூரணர் உரையின் எளிமை சிதம்பரம் பிள்ளையைக் கவர்ந்துகொள்கிறது. பிறகு தொல்காப்பியத்திற்கு உரை எழுதுவதைக் கைவிட்டுவிட்டு இளம்பூரணர் உரைச் சுவடிகளை அச்சில் பதிப்பிக்கும் பணியைச் செய்யத் தொடங்கியிருக்கிறார்.

1920ஆம் ஆண்டு தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் இளம்பூரணர் உரையுடன் அச்சிட்டு வெளிப்படுத்தும் பணியை மேற்கொள்ளத் தொடங்கி, 1921இல் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரண்டு இயல்களைக் கொண்ட முதல் தொகுதியை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். சென்னையில் வசித்த காலத்தில் தொடங்கிய தொல்காப்பியப் பதிப்புப் பணியின் ஒருபகுதி கோவையில் வசித்த காலத்தில் நிறைவுற்றிருக்கிறது. கோவில்பட்டியில் வசித்த காலத்தில் எழுத்ததிகார இளம்பூரணர் உரைச் சுவடியை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அப்பதிப்பு 1928இல் வெளிவந்திருக்கிறது.

பொருளதிகார இளம்பூரணர் உரைச் சுவடி ஏடுகளை எஸ். வையாபுரிப்பிள்ளை, தி. நா. சுப்பிரமணிய அய்யர், த. மு. சொர்ணம்பிள்ளை இவர்களிடமிருந்து வ.உ.சி. பெற்றிருக்கிறார். அதை, பதிப்புரையில் நன்றியோடு பதிவு செய்திருக்கிறார்.

பொருளதிகாரத்தின் எஞ்சிய ஏழு இயல்களுக்குரிய இளம்பூரணர் உரைப் பதிப்புப் பணியை வையாபுரிப்பிள்ளையுடன் இணைந்து மேற்கொண்டிருக்கிறார். 1933இல் களவியல், கற்பியல், பொருளியல் எனும் மூன்று இயல்களைக் கொண்ட பகுதியை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இப்பதிப்பு வெளிவந்த காலத்தில் இவர் தூத்துக்குடியில் வசித்து வந்திருக்கிறார். அதன் பின்னர் 1936இல் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் எனும் நான்கு இயல்களைக் கொண்ட பொருளதிகார இளம்பூரணர் உரையின் இறுதிப் பகுதியை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புப் பணியினையும் அவரின் உரை இயல்புகளையும் பற்றி அறிஞர் வையாபுரிப்பிள்ளை இவ்வாறு ஓரிடத்தில் குறிப்பிட்டுப் போற்றுகிறார்.

வ.உ.சி. யின் விடுதலையின் பின், அவர் ஒரு புது மனிதராக மரிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். இதுவரையும் தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்பொழுது தமது தாய் மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன்வந்து சென்னையிலேயே சில ஆண்டுகள் தங்கினார். அப்பொழுது தொல்காப்பியத்தை இவர் கற்றுக்கொண்டிருந்த சமயம். எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலே முயன்று வருவார். இலக்கணம் முதலிய விலங்குகளை யெல்லாம் இவர் அறவே களைந்து எறிந்துவிடுவார். துணிகரமும், உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகளிருத்தல் வேண்டும் என்ற பெருங்கருத்துக் கொண்டவர். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரை எளிதாக இருத்தல் கண்டு அதனை அச்சிடும் தொழிலில் இவர் முயன்றார். இதனைத் தெரிந்த நெல்லை அறிஞர் ஒருவர் இவருக்கெனப் பிரதிகள் சிருஷ்டித்துக்கொடுக்க முன்வந்தனர். என்னிடம் இளம்பூரணர் உரைப் பிரதி இருப்பதாகத் தெரிந்து எனக்கு வ.உ.சி. 1913-இல் ஒரு கடிதம் எழுதினார். இக்காலம் முதல் வ.உ.சி. யும் நானும் நெருங்கிய இலக்கியத் தோழர்களாய்விட்டோம். தொல்காப்பியம் பற்றி எனக்குப் பல விஷயங்களை

எழுதி வந்தார்கள். நானும் இவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இவர்களால் வெளியிடப்பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் இரண்டு இயல்களும் இவர்களே பரிசோதனை செய்து வெளியிட்டார்கள். இவ்விஷயத்தில் சென்னையில் இவர்களுக்கு உதவிபுரிந்து வந்தவர்கள் திரு. செல்வக்கேசவராய முதலியார் முதலியவர்கள் நாங்கள் இலக்கியத் தோழர்களாயிருந்தும், பல ஆண்டுகளாக ஏகதேசமாகவேனும் சந்தித்து வந்தோம் என்றுகூட கூறமுடியாது. கடிதப் போக்குவரத்திலேயே எங்கள் நட்பு அமைவுற்றது. (எஸ். வையாபுரிப்பிள்ளை, நான் கண்ட வ.உ.சி., தமிழ்ச் சுடர் மணிகள், 1959, பக். 379-380)

தாம் மேற்கொள்ளும் பணிகள் செம்மையாக நிறைவேற்ற எண்ணி, உரிய அறிஞர்களை நாடி, வேண்டிய உதவிகளைப் பெற்று செய்திருக்கிறார் என்பது வையாபுரிப்பிள்ளை கூற்றால் விளங்குகிறது. வ.உ.சி. தொல்காப்பியப் பதிப்புப் பணிக்கு இதழாசிரியர் வாவிள்ளா இராமஸ்வாமி சாஸ்த்ருலு பதிப்பகத்தார் பொருளுதவியும், வெளியீட்டிற்கு வேண்டிய உதவிகளையும் செய்து பெருந்துணை புரிந்துள்ளனர்.

தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரத்திற்குரிய நச்சினார்க்கினியர் உரைச் சுவடிகளைச் சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்து வெளியிட்டதைப் போன்று, தொல்காப்பியம் முழுமைக்குமான இளம்பூரணர் உரைச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற பெருவிருப்பம் வ.உ.சி. கொண்டிருந்திருக்கிறார். அவர் கருதியவாறு எழுத்து, பொருள் ஆகிய இரு அதிகாரங்களுக்குரிய இளம்பூரணர் உரைச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிடவும் செய்திருக்கிறார். சொல்லதிகாரப் பகுதியை அவர் வாழ்நாளின் இறுதிவரை வெளியிட முடியாமல் போனது நமக்குப் பேரிழப்பாகும்.

தொல்காப்பியத்தை மதித்துப் போற்றிய அளவிற்குத் திருக்குறள் மீதும் அளவற்ற மதிப்பு வ.உ.சி.க்கு இருந்திருக்கிறது. தொல்காப்பியத்தைக் கற்றுத்தேர்ந்து அதன் உரைகளின் இயல்புகளைக் கண்டு மதிப்பிட்டு ஆராய்ந்ததைப் போன்று திருக்குறளையும் கற்றுத் தேர்ந்து அதன் உரைகளைக் கற்றுத் தெளிந்திருக்கிறார். கோயமுத்தூர் சிறையில் வ.உ.சி. யைச் சந்தித்த பரலி சு. நெல்லையப்பரிடம் கூறப்பட்டதாக நெல்லையப்பர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டதை அறிஞர் பெ.சு. மணி ஓரிடத்தில் கூறியிருக்கும் இந்தக் கருத்து, வ.உ.சி. திருக்குறள் மீது எந்தளவு மதிப்பு வைத்திருந்திருந்தார் என்பதைப் புலப்படுத்துகிறது.

தமிழறிகளெல்லோரும் வள்ளுவர் குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்திலாத தமிழர் முற்றுந் துறந்த முனிவரேயாயினும் என்னைப் பெற்ற தந்தையேயாயினும், யான் பெற்ற மக்களேயாயினும், யான் அவரை பூர்த்தியாக மதிப்பதுமில்லை; நேசிப்பதுமில்லை (நவபாரத சிற்பிகள் - வ.உ.சிதம்பரம் பிள்ளை, ப. 244).

தொல்காப்பியத்திற்கு உள்ள உரை (நச்சினார்க்கினியர்) மிகவும் கடினமான தன்மையைக் கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து எளிய உரை எழுதக் கருதி இளம்பூரணர் உரையின் எளிமையைக் கண்டு உரை எழுதுவதை கைவிட்டுவிட்டு அந்த உரைச் சுவடியைப் பதிப்பித்து வெளியிட்டதைப் போன்று, திருக்குறள் பரிமேலழகர் உரையைப் படித்துவிட்டு அதன் தன்மையை உணர்ந்து திருக்குறளுக்கு எளிய உரையை எழுதத் தொடங்கி மணக்குடவர் உரையைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

திருக்குறள் மணக்குடவர் உரை வ.உ.சி.யை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. அதனால் அந்த உரைச் சுவடியை முதன்முதலாக அச்சிட்டு வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறார். அறத்துப்பால் பகுதியை மட்டும் கொண்ட அப்பதிப்பு 1917இல் வெளிவந்திருக்கிறது. வ.உ.சி. பதிப்புத்துறையில் ஈடுபட்டு முதன் முதல் பதிப்பித்து வெளியிட்ட நூல் திருக்குறளாகும். இந்தக் காலத்தில் ஆசிரியர் பணியிலும் பதிப்புத்துறையிலும் ஈடுபட்டு உழைத்துவந்த உ.வே. சாமிநாதையர் அவர்கள் மகாமகோபாத்தியாய, திராவிட வித்யாபூஷணம் முதலான பட்டங்களைப் பெற்று பெரும்புகழுடன் விளங்கியிருந்தார்.

வ.உ.சி. திருக்குறள் உரைகளுள் பரிமேலழகர் உரையை வெகுவாக வெறுத்திருக்கிறார் என்பதற்கு, அவர் உரை எழுதிப் பதிப்பித்த திருக்குறள் விருத்தியுரைப் பதிப்புகளில் ஏராளமான சான்றுகள் உள்ளன. இருந்தும் எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டுள்ள இந்தக் கருத்து கவனத்தை ஈர்த்து நிற்கிறது.

1926ஆம் ஆண்டு இறுதியில் நான் சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியனாக வந்து சேர்ந்தேன். அப்போது வ.உ.சி. அவர்கள் வக்கீலாகத் தொழில் புரியத் தூத்துக்குடிக்குச் சென்றுவிட்டார்கள். ஒருமுறை சென்னை மயிலாப்பூரில் இந்து மத பரிபாலன சபையின் கமிஷனராக இருந்த திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் வீட்டிற்கு நானும்

எனது நண்பர் பி.ஸ்ரீ. ஆச்சார்யாவும் சென்றிருந்தோம். அப்பொழுது அங்கே வ.உ.சியும் இருந்தார். இவர்களோடு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு முக்கியமாகத் திருக்குறளின் உரையைப் பற்றியதாக இருந்தது. பரிமேலழகர் உரை பல இடங்களில் பிழையாகவுள்ளது எனவும், முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் இயற்றியன அல்ல எனவும் பிள்ளையவர்கள், தங்களுக்கு இயற்கையாயுள்ள ஆவேசத்தோடு பேசினார்கள். நான் இவர் பேச்சினிடையில் புகுந்து, சிறிதும் உணர்ச்சிக்கு இடங்கொடாதபடி, பரிமேலழகர் உரையின் போக்கைப் பற்றியும், பொதுப்படை அதன் சிறப்புகளைப் பற்றியும், முதல் நான்கு அதிகாரங்களின் அமைப்பைப் பற்றியும், சில வார்த்தைகள் பேசினேன் *(எஸ். வையாபுரிப்பிள்ளை, நான் கண்ட வ.உ.சி., தமிழ்ச் சுடர் மணிகள், 1959, பக். 380 - 381).*

திருக்குறளையும் அதன் பழைய உரைகளையும் நன்கு கற்று, ஆராய்ந்து தெளிந்து புதிய உரை எழுதி வெளியிட வேண்டும் என்ற எண்ணம் கோவை சிறையில் இருந்த காலத்திலேயே வ.உ.சி. க்கு ஏற்பட்டுவிட்டது. 1908, மார்ச்சு 12இல் கைது செய்யப்பட்டுச் சிறைக்குச் செல்கிறார். சிறைக்குச் சென்று ஆறு மாதம்கழித்து 1908, செப்டம்பர் 14ஆம் நாள் திருக்குறளில் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைக் கேட்டு உ.வே.சாமிநாதையருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதுகுறித்து 1940இல் சென்னைப் பிரஸிடென்ஸி கல்லூரி நூற்றாண்டுவிழா மலருக்காக எழுதிய கட்டுரையில் உ.வே.சா. இவ்வாறு குறிப்பிட்டு நினைவுகொண்டிருக்கிறார்.

''ஸ்ரீமான் ஜே. பி. பில்டர் பெக் துரையவர்களுக்குப் பின் பிரின்ஸிபாலாக இருந்த ஸ்ரீமான் ஜே. எச். ஸ்டோன் துரையவர்களும் எனக்குப் பலவித அனுகூலங்களைச் செய்திருக்கிறார். அவர் மிக்க கருணையுடையவர். பகைவர்களுக்கும் நன்மையே செய்ய விரும்புபவர். அவர் கும்பகோணத்திலும் இருந்தார். அப்போதே அவருடைய பழக்கம் எனக்கு உண்டு. அங்கே அவர் இருந்த காலத்தில் மாணாக்கர்கள் கல்வியில் அபிவிருத்தியடைவதோடு தேகப் பயிற்சியிலும் அதிகமான கவனம் செலுத்த வேண்டுமென்னும் விருப்பமுடையவராதலின் முதல் முதலாகக் காற்பந்து (Foot Ball), கிரிக்கட் முதலிய விளையாட்டுக்களை மாணாக்கர்களுக்குப் பழக்குவித்தார்; ஒரு வருஷம் ஷேக்ஸ்பியர் இயற்றிய 'நடுவேனிற் கனவு' என்னும் நாடகத்தையும் அடுத்த வருஷம் 'வெனிஸ் வணிகன்' என்னும் நாடகத்தையும் ஆங்கிலத்தில் மாணாக்கர்களைக் கொண்டு நடிக்கச் செய்தார்; அவ்விரண்டு நூல்களையும் தமிழிலும் மொழிபெயர்க்கச் செய்தார். அவருக்கு அம் மகாகவியினிடத்திருந்த அபிமானமும் ஈடுபாடும் அப்போது வெளியாயின. பிரிஸிடென்ஸி காலேஜில் அவர் இருந்த காலத்தில் ஒரு சமயம், காலஞ்சென்ற தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை, சிறையிலிருந்து திருக்குறளிற் சில சந்தேகங்களை எனக்கு எழுதியனுப்பி விடையெழுத விரும்பினார். சிறையிலுள்ள அவருக்கு நான் கடிதம் எழுதுவது உசிதமாக இருக்குமா என்று ஸ்டோன் துரையைக் கேட்டேன். 'அவசியம் எழுதவேண்டும் சிறைச்சாலைக்குள் ஒருவருடைய பழக்கமும் இல்லாமல் கஷ்டப்படுபவர்களுக்கு நாம் உதவிசெய்வது அவசியம். ஆனால் கடிதத்தை நீங்கள் நேரே அனுப்ப வேண்டாம். எழுதி என்னிடம் கொடுங்கள்; நான் சிறையதிகாரி மூலம் அவருக்கு அனுப்பிவிடுகிறேன்' என்றார். நான் அங்ஙனமே செய்தேன்'' *(என்னுடைய ஞாபகங்கள், நினைவு மஞ்சரி, இரண்டாம் பாகம், 1942, பக். 199-201)*

திருக்குறள் முழுவதற்கும் உரையெழுத வேண்டும் என்று திட்டமிட்டு முதல் பகுதியாக அறத்துப்பாலுக்கு உரையெழுதி 1935இல் வ.உ.சி. வெளியிட்டிருக்கிறார். அப்பதிப்பில் காகிதம், மை, கட்டுநூல் முதலியனவெல்லாம் சுதேசியம் என்று பதிவுசெய்து சுதேசிய உணர்வை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பணிகளை நன்கு கண்டுணர்ந்து வந்த காரணத்தில் சிறையிலிருந்த வ.உ.சி. மாநிலக் கல்லூரியில் பணியாற்றிக்கொண்டிருந்த உ.வே.சா. அவர்களுக்குக் கடிதம் எழுதி தமக்கு ஏற்பட்ட ஐயங்களைக் கேட்டுத் தெளிந்திருக்கிறார். உ.வே.சா., வ.உ.சி. எனும் இரு பேராளுமைகளின் நட்பு அத்துடன் முடிந்துபோகவில்லை. ஆண்டுகள் பல கடந்தும் தொடர்ந்திருக்கிறது. உ.வே.சா. அவர்களுக்கு மார்ச்சு 6, 1935இல் நடைபெற்ற எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு நிலைமண்டில ஆசிரியப்பாவில் அமைந்த கீழ்வரும் வாழ்த்துப் பாடலை வ.உ.சி. எழுதி அளித்து நன்றி பாராட்டியிருக்கிறார்.

**உலகெலாம் புரக்கு மொருதனிக் கடவுளின்**
**நலனெலா நிறைந்துள நற்றமிழ் நாட்டில்**
**திருவா வடுதுறை மருவிவாழ்ந் திருந்த**
**திரிசிர புரமகாப் பெரியநல் வித்வான்**
**மீனாட்சி சுந்தரம் பிள்ளைபால் மேவி**
**அமிழ்தினு மினியநந் தமிழிலக் கியமும்**
**தமிழிலக் கணமுந் தகவுறக் கற்றுச்**
**சென்னைமா காணக் கல்லூரி சேர்ந்து**

தலைமைத் தமிழ்ப்பண் டிதராய் நின்று
தாழ்மா ணாக்கர்க்குத் தமிழ்நூ லுணர்த்தி
ஒப்புயர் வற்றநற் புகழினைப் படைத்தீர்!
தமிழ்நாட் டிற்பல இடங்களி லரங்குள்
ஒளிந்துசெல் லரித்து மறைந்திருள் கிடந்த
சங்க நூல்களைக் கண்டுடனெடுத்துச்
செல்லினை யகற்றி வல்லுந ருடனிருந்
திரவு பகலாப் பரிசோ தித்துக்
குற்றங் களைந்து குறைபெய் தவற்றை
அழகிய காகிதத் தச்சிட் டளித்து
நமதுமுன் னோர்கள் தமதுயர் கல்வி
அறிவொழுக் கறமர சாட்சித் திறனெலாம்
நாமும் பிறரும் நன்கறிந் துவக்கும்
படியருள் புரிந்த குலமுயர் பெரியீர்!
மகாமகோ பாத்தி யாயர், திராவிட
வித்தியா பூஷணம் தாக்ஷி ணாத்திய
கலாநிதி டாக்டர் எனும்பல பட்டம்
தாங்கி நிற்குஞ் சாமி நாத
அய்ய ரவர்களே! அறிவுசால் நீங்கள்
எண்பது வருட மிருநிலத் தமர்ந்து
தமிழ்மக் களுக்குந் தமிழ்மொழி தனக்கும்
இடைவிடா துழைத்திவ ணேற்ற மளித்த
நன்றியை யென்று நாமற வோமே.
நீங்கள்
இன்னும் பல்லாண் டிவ்வுல கிருந்து
தமிழ்மக் களுக்குந் தமிழ்மொழி தனக்கும்
உழைத்து மேன்மே லுதவி செய்து
வரும்படி யாக வலிமையு நலனும்
எல்லாம் வல்ல இறைவன்நுங் கட்குத்
தரும்படி யவனருட் டாள்போற் றுவனே,
தூத்துக் குடிவாழ் ஒட்டப் பிடாரம்
சிதம்பரம் என்னும் திருக்குற ளன்பனே.

*(பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் சதாபிஷேக வரலாறு, 1936, பக். 172-173)*

*வ.உ.சி. திருக்குறள் மீது கொண்டிருந்த ஈடுபாட்டிற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் இந்த வாழ்த்துப்பாவின் இறுதி இரண்டடியில் உள்ள தூத்துக் குடிவாழ் ஒட்டப் பிடாரம், சிதம்பரம் என்னும் திருக்குற ளன்பனே என்று தம்மை முன்னிறுத்திக்கொள்ளும் பேரார்வமிக்க சான்று இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது.*

*ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டு காலம் (1872 - 1942) பதிப்புத்துறையில் ஈடுபட்டு நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைச் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதிப் பதிப்பித்தும், பல்வேறு இதழ்களில் தாம் எழுதி வெளியிட்டிருந்த உரைநடை ஆக்கங்களைத் தொகுத்துப் பதிப்பித்தும் வெளியிட்ட உ.வே.சாமிநாதையர் திருக்குறளையும், தொல்காப்பியத்தையும் பதிப்பித்து வெளியிட தம் வாழ்நாளின் இறுதிவரை முயற்சிக்கவில்லை என்பதை அவர் வரலாற்றின்வழித் தெரிந்துகொள்ள முடிகிறது. கால் நூற்றாண்டு காலத்திற்கும் குறைவான காலம் மட்டுமே (1917 - 1936) பதிப்புத்துறையில் ஈடுபட்டு வந்த வ.உ. சிதம்பரம் பிள்ளை திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய இரு நூல்களின் மீது மட்டுமே மிக கூடுதல் கவனம் செலுத்தியிருக்கிறார் என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது.*


*இருவருக்குமான நட்பு, இந்த வேறுபாடுகளின் வழியே ஒன்றுபடுவது காலத்தின் விளைவுகளாகும். அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட இங்குள்ள பழம் வரலாறுகளை மீள்வாசிப்பு கொள்வதற்குத் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் வ.உ.சி. புரிந்துகொண்ட தன்மையும், மறைந்துகிடந்த பழந்தமிழ் நூல்களைக் கண்டு வெளிப்படுத்த உ.வே.சா. சங்க நூல்களையும் காப்பிய நூல்களையும் பதிப்பித்து வெளியிட்ட தன்மையுமாகவே இவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த இருவேறுபட்ட நிலைப்பாடுகள் பழந்தமிழ் நூல்கள் மீளாக்கம் பெறுவதற்கு வழிவகுத்தது என்பதுதான் வரலாறாகும். இருவேறு துருவங்களில் பயணித்து நூல் பதிப்புப் பணியில் வேண்டிய உதவிகளைப் பெற்று ஒன்றுபட்டு உழைத்த இருவரின் நட்பு தமிழ்போல் நிலைத்துப் புகழ்பெற்று விளங்குகிறது.*

**துணைநின்ற நூல்கள்**



1. *சம்பத், ஆர். என். - மணி, பெ.சு. தமிழில்: பெ.சு. மணி. 1995. நவபாரதச் சிற்பிகள் - வ.உ.சிதம்பரம் பிள்ளை, புது தில்லி, பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு.*
2. *வையாபுரிப்பிள்ளை, எஸ். 1959 (மூன்றாம் பதிப்பு). தமிழ்ச் சுடர் மணிகள், சென்னை: பாரி நிலையம்.*
3. *சுந்தர ஐயர். வே. 1936. பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் சதாபிஷேக வரலாறு, சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம்.*
4. *சாமிநாதையர், உ.வே. 1942. நினைவு மஞ்சரி (இரண்டாம் பாகம்), சென்னை: கபீர் அச்சுக்கூடம்.*


*(16, ஜுன், 1868, (விபவ - ஆனி, 4) உ.வே.சா. அவர்களுக்குத் திருமண நாள்; மனைவி: மதுராம்பாள்; அப்போது உ.வே.சா. அவர்களுக்கு வயது 14; மனைவி மதுராம்பாளுக்கு வயது 8; பெண்வீட்டாரின் ஊரான மாளாபுரத்தில் திருமணம் நடைபெற்றது)*


# நியூ செஞ்சுரியின் புதிய நூல்கள்





**டிராகன் தேசம்**
சாய்ஜூன் - இளந்தமிழ்
₹ 275/-




**இந்திய ரயில் போக்குவரத்தின் சுவையான வரலாறு**
பேராசிரியர் பொ.முத்துக்குமரன்
பேராசிரியர் ம.சாலமன் பெர்னாட்ஷா
₹ 275/-




**தற்காலத் தமிழ்நாட்டு வரலாறு**
பேராசிரியர் அ.இராமசாமி
₹ 395/-




**மூளைக்குள் சுற்றுலா**
வெ.இறையன்பு
₹ 1500/-